வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 | Reg. No. : P. 1632 | விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu வார மலர்




Email : eelanaduweekly@gmail.com | மலர் : 07 | 15.02.2026 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 46 | பக்கங்கள் : 16

# மாகாண சபை தேர்தல் குறித்து இந்தியா-ஜே.வி.பி. விவாதிப்பு!

## ஜெய்சங்கருடன் ரில்வின் தீவிர ஆலோசனை

கொழும்பு, பெப். 15

ஜே.வி.பி. தலைவர்களின் இந்தியப் பயணம், இலங்கையின் அனைத்து அரசியல் கட்சிகளுடனும் இந்தியா கொண்டுள்ள நெருக்கமான உறவை வெளிப்படுத்துவதாகக் கூறப்படுகிறது.

13 ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டம் மற்றும் அதன் அடிப்படையில் இலங்கையில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவது குறித்து இந்தப் பயணத்தின் போது விரிவாக விவாதிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா இந்தியாவுக்கு தமது முதலாவது அதிகாரபூர்வ பயணமொன்றை மேற்கொண்டிருந்தார்.

இந்திய கலாசார உறவுகளுக்கான நிலையத்தின் அழைப்பின் பேரில் கடந்த 05ஆம் திகதி முதல் 12ஆம் திகதி வரை அவரின் இந்த இந்திய விஜயம் அமைந்திருந்தது.

இதன்போது, இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் மற்றும் பிரதி தேசிய பாதுகாப்பு ஆலோசகர் பவன் கபூர் ஆகியோரை ரில்வின் சில்வா உள்ளிட்ட குழுவினர் சந்தித்தனர்.

இந்தச் சந்திப்பின்போது, 13 ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டம் மற்றும் அதன் அடிப்படையில் இலங்கையில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவது குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டதாக அரசியல் தரப்புகள் தெரிவிக்கின்றன.

இது இலங்கையின் தற்போதைய அரசியல் சூழலில் மிக முக்கியமான நகர்வாகும் என குறிப்பிடப்படுகிறது.

இரண்டு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூக நலத்திட்டங்கள் குறித்து இதன்போது ஆலோசிக்கப்பட்டுள்ளதாக இந்திய வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"அயலவருக்கு முதலிடம்" மற்றும் "மஹாசாகர்" தொலை நோக்குப் பார்வையின் கீழ் இலங்கைக்கான இந்தியாவின் ஆதரவு இங்கு உறுதிப்படுத்தப்பட்டதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## ஏ.ஐ. உச்சி மாநாட்டில் பங்கேற்க இந்தியாவுக்கு செல்கிறார் அநுர!



கொழும்பு, பெப். 15

இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் விசேட அழைப்பின் பேரில், புதுடில்லியில் நடைபெறவுள்ள "இந்தியா ஏ.ஐ. தாக்கம் உச்சி மாநாட்டில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க பங்கேற்கவுள்ளார்.

கொழும்பிலுள்ள இந்திய தூதரகம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் இதனை தெரிவித்துள்ளது.

இந்த மாநாடு எதிர்வரும் நாளை முதல் முதல் 20 ஆம் திகதி வரை புதுடில்லியில் நடைபெறவுள்ளது. செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ.) தொடர்பான ஒத்துழைப்பில் இந்தியாவின் அணுகுமுறையை வரையறுக்கும் மக்கள், பூமி மற்றும் முன்னேற்றம் ஆகிய மூன்று முக்கிய சூத்திரங்களை அடிப்படையாகக் கொண்டு இந்த மாநாடு நடத்தப்படுகிறது.

இந்தச் சர்வதேச மாநாட்டில் உலக நாடுகளின் தலைவர்கள், கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் புத்தாக்க சிந்தனையாளர்கள் ஒன்றுகூடவுள்ளனர். 15

## மின்விநியோகம் நெருக்கடியில்!

### எச்சரிக்கிறார் உதய கம்மன்பில



கொழும்பு, பெப். 15

நாடு இருளில் மூழ்கக்கூடிய அபாய நிலை காணப்படுவதாக பிவித்துரு ஹெல உறுமய கட்சி எச்சரிக்கை விடுத்துள்ளது.

நிலக்கரி கப்பல்கள் கால தாமதமாவதன் காரணமாக எதிர்வரும் ஜூலை மாத இறுதி முதல் செப்ரெம்பர் மாத நடுப்பகுதி வரையிலான காலப்பகுதியில் மின் 15

## புதிய பயங்கரவாதச் சட்டத்துக்கு எதிராக கையெழுத்து போராட்டம்!

திருமலை, பெப். 15

பயங்கரவாத தடைச்சட்டம் மற்றும் புதிய பயங்கரவாத தடைச்சட்ட முன்மொழிவு ஆகியவற்றை முற்றாக நிராகரித்து எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் கையெழுத்துப் போரட்டம் திருகோணமலையில் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலையில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற ஈழத் தமிழர் உரிமைகள் பெருமன்று அங்குரார்ப்பண நிகழ்வில் குறித்த கையெ ழுத்துப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 15

## சர்வதேச நாணய நிதியத்தின் பணிப்பாளர் நாளை வருகிறார்



கொழும்பு, பெப். 15

சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா நாளை திங்கள்கிழமை முதல் 18 ஆம் திகதி வரை இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார்.

இந்த விஜயத்தின் 15

## கௌரவத்துடனும் நீதியுடனும் வாழக்கூடிய ஒரு நாட்டை கட்டியெழுப்புவதே இலட்சியம்!

### கூறுகிறார் நீதியமைச்சர் ஹர்ஷண நாணயக்கார



கொழும்பு, பெப். 15

இலங்கையில் வெறும் போரோ அல்லது மோதல்களோ இல்லாத நிலையை உருவாக்குவது மட்டும் அரசின் நோக்கமல்ல ஒவ்வொரு பிரஜையும் கௌரவத்துடனும் நீதியுடனும் வாழக்கூடிய ஒரு நாட்டை கட்டியெழுப்புவதே தமது இலட்சியம் என நீதியமைச்சர் ஹர்ஷண நாணயக்கார தெரிவித்தார். 15

## கொழும்பில் துப்பாக்கி சூடு; ஒருவர் பலி!

கொழும்பு, பெப். 15

கொழும்பு, ஜிந்துபிட்டி வரக்கா சந்தி பகுதியில் நேற்றிரவு நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், இந்த சம்பவத்தில் மேலும் மூவர் காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட் டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உந்துருளியில் வந்த சந்தேகநபர்கள் ரி-56 ரக துப்பாக்கியை பயன்படுத்தி துப்பாக்கிச்சூடு நடத்தி தப்பிச்சென்றதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் குறித்து தகவல் 15

## சுற்றுலாப் பயணிகளுக்கு இலவச விஸா சிக்கலானது!

கொழும்பு, பெப். 15

சுற்றுலாப் பயணிகளுக்கு இலவச விஸா வழங்குவதில் சட்டச் சிக்கல்களை எதிர்கொள்ள நேரிட்டுள்ளதாக சுற்றுலாத்துறை பிரதி அமைச்சர் ருவான் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

சீனா நான்கு மாதங்களுக்கு முன்னர் 80 15

## வடக்கில் அபிவிருத்தி நிர்வாகத்தை முன்னெடுப்பதற்கு தயாராகுங்கள்!

### அதிகாரிகளுக்கு மாகாண ஆளுநர் பணிப்பு



யாழ்ப்பாணம், பெப். 15

2026 ஆம் ஆண்டு, அபிவிருத்திக்குரிய ஆண்டு எனவும், அதிகாரிகள் "அபிவிருத்தி நிர்வாகத்தை" முன்னெடுக்கத் தயாராகவேண்டும் எனவும், வடக்கு மாகாண 15

## அமரகீர்த்தி கொலை வழக்கு தீர்ப்பு; இரு தரப்பிலிருந்தும் மேன்முறையீடு

கொழும்பு, பெப். 15

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துக்கோரள மற்றும் அவரது பாதுகாப்பு அதிகாரி கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கு தீர்ப்புக்கு எதிராக அரச தரப்பு மற்றும் குற்றம் சாட்டப்பட்ட தரப்பு என்பன மேன்முறையீடு செய்யத் தீர்மானித்துள்ளன.

கம்பஹா மூன்று நீதிபதிகள் கொண்ட உயர்நீதிமன்ற அமர்வு வழங்கிய தீர்ப்புக்கு எதிராக சட்டமா அதிபரும், மரண தண்டனை விதிக்கப்பட்ட 15

உண்மைகள் புனிதமானவை, கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயிகளை சுட்டுக்கொல்வோம்! வடமராட்சி கிழக்கில் அச்சுறுத்தல்

## பல ஏக்கர் அரச காணி அடாத்தாக சுவீகரிப்பு

யாழ்ப்பாணம், பெப். 15

வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி கிராம உத்தியோகத்தர் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் தமிழ் மக்கள் விவசாயம் செய்துவந்த பல ஏக்கர் அரச காணி தனி நபர் ஒருவரால் அடாத்தாக சுவீகரிக்கப்பட்டுள்ளது. அத்தோடு, காணிக்குள் நுழைந்தால் விவசாயிகளை சுட்டுக்கொல்வோம் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட விவசாயிகள் கூறுகையில்,

“வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி ஜே- 432 கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குட்பட்ட பகுதியில், விடுதலைப்புலிகள் இருந்த காலத்தில் இருந்து விவசாயம் செய்துவந்த நிலையில் அப்பகுதியில் காணப்பட்ட பல ஏக்கர் அரச காணி, தனி நபர் ஒருவரால் சுவீகரிக்கப்பட்டுள்ளது.

அத்துமீறி அடைக்கப்பட்ட குறித்த காணி அரச காணி எனவும் நிலைமை தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு கிராம உத்தியோகத்தருக்கு பிரதேச செயலர் உத்தரவிட்டுள்ள நிலையில், இதுவரை



உரிய அதிகாரிகளால் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட வில்லையென விவசாயிகள் குற்றம்சாட்டியுள்ளனர்.

ஆரம்ப காலத்தில் இருந்தே பயன்தரும் மரங்களை நட்டு காலாகாலம் நாம் விவசாயம் செய்துவந்த பகுதியை தனி நபர் ஒருவர் தனது செல்வாக்கை பயன்படுத்தி சுவீகரித்துள்ளார்

குறித்த பகுதிக்கு நாம் செல்ல முற்பட்டால் இடியன் துவக்கால் சுடுவோம் என்றும் பொலிஸாரை வைத்து கைது செய்வோம் என்றும் மிரட்டுவதுடன், காலாகாலம் நாம் பாதுகாத்து வந்த மணல் மற்றும் காடுகள் இரவோடு இரவாக அழிக்கப்பட்டு சட்டவிரோதமாக ஏனைய இடங்களுக்கு கடத்தப்படுவதாகவும் விவசாயிகள் குற்றம்சாட்டியுள்ளனர்.

குறித்த காணி, அரச காணியென பிரதேச செயலர் அறிவித்தும் இதுவரை சம்மந்தப்பட்டவர்கள் மீது அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காமைக்கான காரணம் என்ன என்றும் விவசாயிகள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

தமது நிலத்தை மீட்டு தம்மிடமே ஒப்படைக்க வேண்டுமெனவும் அப்பகுதி மக்கள் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-08)

# சந்நிதியான் ஆச்சிரமத்தில் இன்னிசை அரங்கமும் உதவி வழங்கும் நிகழ்வும்

யாழ்ப்பாணம், பெப். 15

சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டு பேரவையின் ஏற்பாட்டில் வாராந்தம் வெள்ளிக்கிழமைகளில் நடைபெறும் இன்னிசை அரங்கமும் உதவிகள் வழங்கலும் ஆச்சிரம முதல்வர் மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் நடைபெற்றது.

இதில், இசை கலைமாமணி நடேசு செல்வச்சந்திரனின் ஹார்மோனியம் இசையில் கலா வித்தகர் அருள் விக்னேஸ்வரனின் இன்னிசைக் கச்சேரி நடைபெற்றது. மிருதங்க இசையை கலா வித்தகர் மு. நந்தகுமாரும் முகர்சில் இசையை கலா வித்தகர் ப. விக்னேஸ்வரனும் வழங்கினர்.

சங்கானை கிழக்கு, வெல்வில் அறநெறிப் பாடசாலையின் கோரிக்கைக்கு அமைவாக, ஆழ்துளையிடும் கிணறு திருத்தம் மற்றும் கட்டட திருத்தச் செலவுகளுக்காக 150, 000 ரூபாய் நிதியும் மருத்துவ உதவியாக விவேகானந்தநகர் கிழக்கு, கிளிநொச்சியைச் சேர்ந்த யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெறும் முன்னாள் போராளி ஒருவருக்கு தொடை மூட்டு அறுவைச் சிகிச்சைக்காக 150,000 ரூபாய் நிதியும் வழங்கப்பட்டன.

கம்பர்மலை, உடுப்பிட்டியைச் சேர்ந்த தரம் - 7 இல் கல்வி கற்கும் மாணவி, மூளாய் தெற்கு, சுழிபுரம் பகுதியைச் சேர்ந்த தரம் - 03 இல் பொன்னாலை வரதராஜப் பெருமாள் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவி,

குஞ்சுக்குளம், மாங்குளத்தைச் சேர்ந்த கனகராயன்குளம் மகா வித்தியாலயத்தில் தரம் - 09 இல் கல்வி கற்கும் மாணவி ஆகியோருக்கு 146,000 ரூபாய் பெறுமதியான துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரமத்தின் சைவ கலை பண்பாட்டு பேரவை நிர்வாகிகள், உறுப்பினர்கள், சந்நிதியான் அச்சிரம தொண்டர்கள், அடியவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ-08)



# பொற்பதி றோ. க. த. க பாடசாலையின் வருடாந்த இல்ல மெய் வல்லுநர் போட்டி


யாழ்ப்பாணம், பெப். 15

வடமராட்சி கிழக்கு பொற்பதி றோ. க. த. க பாடசாலையின் வருடாந்த இல்ல மெய் வல்லுநர் போட்டி நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பாடசாலை மைதானத்தில் அதிபர் சிவராசா குகதாசன் தலைமையில் நடைபெற்றது. இதில் முதல் நிகழ்வாக விருந்தினர்கள் மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்டனர்.

வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள், பதக்கங்கள், சான்றிதழ்களை விருந்தினர்கள் வழங்கியதுடன் கருத்துரைகளையும் நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜெயச்சந்திரமூர்த்தி ரஜீபனும் சிறப்பு விருந்தினர்களாக மருதங்கேணி கோட்ட கல்வி அதிகாரி செ. சிறிராமச்சந்திரன், மணல்காடு பங்கு தந்தை ஜோன் குரூஸும் கௌரவ விருந்தினராக சிவசம்பு தர்மரத்தினம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், அயல் பாடசாலை அதிபர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (எ-08)



# சிவகுரு ஆதீனம் நடத்தும் மஹா சிவராத்திரி விழா

யாழ்ப்பாணம், பெப். 15

நல்லூர் சிவகுரு ஆதீனத்தில் இன்று பிற்பகல் 3 மணிமுதல் மாலை 5 மணிவரை மஹா சிவராத்திரி விழா நடைபெறவுள்ளது. இதன்போது அபிஷேகம், பூஜை, பஜனை, அருளுரை என்பன நடைபெறவுள்ளன. (எ)

# அரசாங்கம் வழங்கிய வீடுகளில் 600 வீடுகள் பூட்டப்பட்ட நிலையில்

## பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க தகவல்

வவுனியா, பெப். 15

அரசாங்கத்தால் வழங்கப்பட்ட வீடுகளில் 600 வீடுகள் வவுனியாவில் பூட்டப்பட்ட நிலையில் உள்ளன என்று வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்பு குழுத் தலைவரும் பிரதி அமைச்சருமான உபாலி சமரசிங்க தெரிவித்தார்.

வவுனியா பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தேசிய வீடமைப்பு அதிகார சபையால் வவுனியா மாவட்டத்தில் 3, 349 வீடுகள் வழங்கப்பட்டிருந்தன. முல்லைத்தீவில் 3,457 வீடுகளும் மன்னார் மாவட்டத்தில் 2,554 வீடுகளும் வழங்கப்பட்டிருந்தன. வவுனியா மாவட்டத்தில் பல வீடுகள் இறுதிக் கட்டத்தில் உள்ளன. பூர்த்தி செய்யும் நிலையில் உள்ள வீடுகளுக்கான வேலைகளை முடித்துவிட்டால் வவுனியாவில் 900 வீடுகள் பூர்த்தியாகும். அவை சின்ன வேலைகளில் தங்கியுள்ளன என்று பாராளுமன்ற உறுப்பினர் ப. சத்தியலிங்கம் தெரிவித்தார். இதற்கு பதிலளித்த பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க கூறுகையில்,

“வவுனியாவில் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட வீடுகளில் 600 வீடுகள் மூடப்பட்ட நிலையில் உள்ளன. கடந்த அரசாங்கத்தின் போது சில குடும்பங்களுக்கு இரண்டு, மூன்று வீடுகள் வழங்கப்பட்டு அதில் அவர்கள் குடியிருக்காமல் வீடுகள் பூட்டப்பட்டுள்ளன. அவ்வாறு 600 வீடுகள் உள்ளன. மடுகந்த, குடாகச்சகொடி, ஈரப்பெரியகுளம், கலாபோகஸ்வேவ போன்ற இடங்களில் இவ்வாறு வீடுகள் உள்ளன.

சஜித் பிரேமதாஸவால் வீடுகள் வழங்கப்பட்டவர்களில் வேறு வீடுகள் இல்லாதவர்களின் வீடுகளை பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுப்போம். அரசியலுக்காக இவ்வாறு பல இடங்களில் வீடுகள் வழங்கப்பட்டுள்ளன. மன்னாரில் 1500 வீடுகள் உள்ளன. இவ்வாறான வீடுகளை மீள எடுத்து வீடு இல்லாத மக்களுக்கு வழங்குவது குறித்து கவனம் செலுத்தியுள்ளோம். வீடு இல்லாத மக்களுக்கு வீடுகள் வழங்கப்படும்”- என்றார். (எ-10)

# புன்னாலைக்கட்டுவனில் டிப்பரும் மோட்டார் சைக்கிளும் மோதி விபத்து

## ஒருவர் படுகாயம்

யாழ்ப்பாணம், பெப். 15

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட, புன்னாலைக்கட்டுவன் வடக்கு சந்தியில் இருந்து நிலாவரை செல்லும் வீதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள், எதிரே வந்த டிப்பருடன் மோதியதில் இந்த விபத்து சம்பவித்துள்ளது.

இதில், மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

விபத்து சம்பவம் குறித்து விசாரணைகளை சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-05)

# வடமாகாணத்தில் மழை பெய்யும்

கொழும்பு, பெப். 15

மத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலும் அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழை பெய்யக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

ஊவா மற்றும் மத்திய மாகாணங்களிலும் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களிலும் சில இடங்களில் சுமார் 50 மில்லி மீற்றர் அளவிலான ஓரளவு பலத்த மழை பெய்யக்கூடும் எனவும் வடக்கு மற்றும் வட மத்திய மாகாணங்களிலும் திருகோணமலை மாவட்டத்திலும் பல தடவைகள் மழை பெய்யக் கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துப்பாக்கி சூடு எதிரொலி

# இலங்கை சட்டத்தரணிகள் சங்க உறுப்பினர்களின் அவசர கூட்டம்

கொழும்பு, பெப். 15

14 ஆண்டுகளின் பின்னர் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் அனைத்து உறுப்பினர்களின் அவசர கூட்டம் இன்று கொழும்பில் நடைபெறவுள்ளது.

அக்குரேகொட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் நிலைப்பாட்டை விளக்குவதற்காக நேற்று நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த சங்கத்தின் தலைவர் ரஜீவ் அமரசூரிய இதனைத் தெரிவித்தார்.

இன்று பிற்பகல் 03.00 மணிக்கு இந்த அவசர கூட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.



இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

“அக்குரேகொட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் சட்டத்தரணிகள் சங்கத்தின் நிறைவேற்றுக் குழு கூடியது.

இது முழு சட்டத்தரணிகள் சமூகத்தையும் பாதிக்கும் ஒரு சம்பவமாகும். இது எமது நிறைவேற்றுக் குழுவால் மட்டும் தீர்மானிக்கப்பட வேண்டிய விடயமல்ல.

எனவே, இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் அனைத்து உறுப்பினர்களினதும் அவசர கூட்டத்துக்கு அழைப்பு விடுக்கின்றோம்.

சட்டத்தரணிகள் சங்கத்தின் அடுத்தகட்ட நடவடிக்கை இந்தப் பொதுக்கூட்டத்திலேயே தீர்மானிக்கப்படும்.

நாங்கள் 2012 ஆம் ஆண்டுக்குப் பின்னரே இவ்வாறானதொரு கூட்டத்தை கூட்டுகின்றோம். இறுதியாக முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவின் தண்டனை பிரேரணை பிரச்னையின் போதே இவ்வாறான கூட்டம் கூட்டப்பட்டது. அதன் பின்னர் 14 வருடங்கள் கழித்தே இந்தக் கூட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளோம்”- என்றார். (எ)

# சுற்றுலா பயணிகள் எண்ணிக்கை நான்கு இலட்சத்தை தாண்டியது

கொழும்பு, பெப். 15

2026 ஆம் ஆண்டின் இது வரையான காலப்பகுதியில் நாட்டுக்கு வருகை தந்த வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை நான்கு இலட்சத்தை தாண்டியுள்ளது என்று சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

ஜனவரி முதலாம் திகதி முதல் பெப்ரவரி 12 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் மாத்திரம் 401, 787 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர் என்று அந்த அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

கடந்த காலப்பகுதியில் ஒரே நாளில் பதிவான அதிகூடிய சுற்றுலாப் பயணிகளின் வருகை பெப்ரவரி 12 ஆம் திகதி இடம் பெற்றுள்ளது.

அன்றைய தினம் மாத்திரம் 12, 731 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

வருகை தந்த சுற்றுலாப் பயணிகளில் இந்தியப் பிரஜைகளே அதிகளவானோர் ஆவர். அவர்களின் எண்ணிக்கை 70,880 என பதிவாகியுள்ளது.

இதற்கு மேலதிகமாக பிரித்தானிய பிரஜைகள் 44,053 பேரும் ரஷ்ய பிரஜைகள் 36, 949 பேரும் ஜேர்மனி பிரஜைகள் 28,332 பேரும் சீனப் பிரஜைகள் 22,309 பேரும் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

பிரான்ஸ், அவுஸ்திரேலியா மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகளிலிருந்தும் கணிசமான அளவு சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர்.

மேலும், பெப்ரவரி மாதத்தின் முதல் 12 நாட்களில் மாத்திரம் 124,460 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளனர் என்று சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. (எ)

# அக்குரேகொட இரட்டைக்கொலை: விசாரணைக்கு 10 பொலிஸ் குழுக்கள்

கொழும்பு, பெப். 15

அக்குரேகொடவில் சட்டத்தரணி ஒருவரும் அவரது மனைவியும் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்காக குற்றப்புலனாய்வுத் திணைக்களம் மற்றும் விசேட அதிரடிப் படை அதிகாரிகள் உள்ளடங்களாக 10 பொலிஸ் குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

தலங்கம, அக்குரேகொட பகுதியில் அமைந்துள்ள பல்பொருள் அங்காடி ஒன்றுக்கு முன்னால் சட்டத்தரணி ஒருவரும் அவரது மனைவியும் நேற்று முன்தினம் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

குறித்த சட்டத்தரணி ‘கரன்தெனிய சுத்த’ என்ற குற்றவாளியின் நீதிமன்ற வழக்குகளில் முன்னிலையானவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன், தனது கட்சிக்காரரின் தகவல்களை ‘லொக்கு பெடி’ என்ற குற்றவாளி தலைமையிலான குழுவுக்கு வழங்கிய காரணத்தால், கரன்தெனிய சுத்தவினால் இந்த துப்பாக்கிச் சூடு வழிநடத்தப்பட்டிருக்கலாம் என்று பாதுகாப்பு பிரிவினர் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.



அக்குரேகொட பகுதியில் உள்ள பல்பொருள் அங்காடிக்கு முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஜீப் வண்டியில் இருந்த தம்பதியினரை இலக்கு வைத்து மாலை 05.00 மணியளவில் இந்தத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

கார் ஒன்றில் வந்த குழுவினர் ரி-56 ரக துப்பாக்கியை பயன்படுத்தி சுமார் 10 தடவைகள் சுட்டுவிட்டு தப்பியோடினர் என்று பொலிஸார் கூறினர்.

இதில் வாகனத்தில் இருந்த தம்பதியினர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

இவ்வாறு கொல்லப்பட்டவர்கள் பிடிகல பகுதியைச் சேர்ந்த மல்வாரச்சி எனும் சட்டத்தரணியும் அவரது மனைவியும் ஆவார். (எ)

# செல்லுபடியாகும் பட்டத்தகுதி திகதியை அரசாங்கம் உடன் நீடிக்க வேண்டும்

## எதிர்க்கட்சி தலைவர் சஜித் கோரிக்கை

கொழும்பு, பெப். 15

தற்சமயத்தில் நமது நாட்டில் அரச சேவையில் உயர் தகுதி பெற்ற பலர் கீழுழைப்புச் சேவையில் பணிபுரிந்து வருகின்றனர். கீழுழைப்புச் சேவை பட்டதாரிகளுக்கு நாட்டின் இலவசக் கல்வி முறையில் கற்பித்தல் சேவைக்குள் பிரவேசிக்கும் வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். ஆசிரியர் சேவையில் இணைந்து கொள்வதற்கான செல்லுபடியாகும் பட்டத்தகுதி திகதியை 2025 டிசெம்பர் 31 வரை நீடிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கோரிக்கை விடுத்துள்ளார்.

தற்போதைய ஆசிரியர் போட்டி பரீட்சையில், வரையறுக்கப்பட்ட ஆசிரியர் சேவை போட்டிப் பரீட்சையில் குறைபாடுகள் காணப்படுதால், கீழுழைப்புச் சேவையில் உள்ளோர் எதிர்நோக்கும் பிரச்னைகள் குறித்து தெரியப்படுத்தும் முகமாக அதன் பிரதிநிதி குழுவினர் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை சந்தித்த வேளையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.



இன்றும் கூட, இளமானி மற்றும் முதுமானி பட்டங்களைப் பெற்று, அரச சேவையில் அலுவலக உதவியாளர்களாக, தொழிலாளர்களாக, ஆய்வக உதவியாளர்களாக பணிபுரிவோர் ஏராளமாக காணப்படுகின்றனர். இவர்கள் இருக்க வேண்டிய இடத்தில் இல்லை. அரச சேவையில் கீழுழைப்புச் சேவையில் பணி புரிந்து வரும் பட்டதாரிகளுக்கு, பட்டதாரிகளை ஆசிரியர் சேவையில் இணைத்துக் கொள்ள நடத்தப்படும் போட்டிப் பரீட்சை விண்ணப்ப காலம் 19 ஆம் திகதியுடன் முடிவடைகிறது. இதற்கு முன் இவர்களுக்கு நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் கூறினார்.

எனவே, அரசாங்கம் பின்பற்றி வரும் முறையை மாற்றி, 2025 டிசெம்பர் 31, செல்லுபடியாகும் வகையில் திகதியை திருத்தம் செய்து, கீழுழைப்புச் சேவையில் தற்போது சேவை புரிந்து வரும் பட்டதாரிகளுக்கும் ஆசிரியர் போட்டிப் பரீட்சையில் தோற்றுவதற்கான சந்தர்ப்பத்தைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். பட்டதாரிகளை ஆசிரியர் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான விதிமுறைகளில் சிக்கல்கள் காணப்படுகின்றன. இவை சரி செய்யப்பட வேண்டும் என்றும் சஜித் தெரிவித்தார். (எ)

# போதைப்பொருளுடன் சிக்கிய முக்கிய நபர்

## பல கொள்ளை சம்பவங்கள் அம்பலம்

கொழும்பு, பெப். 15

பம்பலப்பிட்டி பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள் குழுவினால் ‘ஐஸ்’ போதைப் பொருளை வைத்திருந்த சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் மேலதிக விசாரணைகளுக்காக தடுப்புக்காவல் உத்தரவு பெறப்பட்டிருந்தது.

சந்தேகநபர் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட மேலதிக விசாரணைகளில், பம்பலப்பிட்டி, நாரஹேன்பிட்டி, பேலியகொட, தெமட்டகொட, தலங்கம, கொத்தட்டுவ, மருதானை, கறுவாத்தோட்டம், பொரளை மற்றும் வெலிக்கடை ஆகிய பொலிஸ் பிரிவுகளில் 08 மோட்டார் சைக்கிள் கொள்ளைகள் மற்றும் மடிக்கணினி, தொலைபேசிகள் உள்ளிட்ட பல சொத்து கொள்ளைகளை இவர் மேற்கொண்டுள்ளமை தெரியவந்துள்ளது.

குறித்த சந்தேகநபர் பத்தரமுல்ல பிரதேசத்தை சேர்ந்த 32 வயதுடையவர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இவரால் திருடப்பட்ட சில மோட்டார் சைக்கிள்கள் மற்றும் மடிக்கணினி உள்ளிட்ட சொத்துகளை விசாரணை அதிகாரிகள் மீட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் புதுக்கடை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார். (எ)

# காலணி வவுச்சர் செல்லுபடியாகும் காலம் நீடிப்பு

கொழும்பு, பெப். 15

தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்கள் மற்றும் பிரிவெனா மாணவர்களுக்கு காலணிகளை கொள்வனவு செய்வதற்காக வழங்கப்பட்ட 3,000 ரூபாய் பெறுமதியான வவுச்சர்களின் செல்லுபடியாகும் காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக இன்று ஞாயிற்றுக்கிழமையுடன் முடிவடையவிருந்த இந்த வவுச்சர்கள், தற்போது எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை வரை செல்லுபடியாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

‘அரகலய’ போராட்டம் குறித்து

# ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை அவசியம்

கொழும்பு, பெப். 15

‘அரகலய’ போராட்டம் குறித்தும் அதற்கு வெளிநாடுகளில் இருந்து கிடைத்த பணம் தொடர்பிலும் ஜனாதிபதி ஆணைக்குழுவொன்றை நியமித்து விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் நெலும் மாவத்தையிலுள்ள கட்சி தலைமையகத்தில் நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“போராட்டம் என்ற போர்வையில் தமது அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள ஓர் உயிரைப் பலிவாங்கினார்கள். இளைஞர் கூட்டமொன்றை தூக்குமேடைக்கு அனுப்பினார்கள். ஆலோசனைகளை வழங்கிவிட்டு, பகிரங்கமாக ஊடகங்களுக்கு வந்து ‘இப்போது வெளியே வாருங்கள், வீதிக்கு இறங்கித் தாக்குங்கள், நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்’ என்று கூறியவர்கள் இன்று அரசாள்கிறார்கள். அந்த இளைஞர்கள் தூக்குமேடைக்குச் சென்றுள்ளனர்”-எனத் தெரிவித்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மாநாட்டுக்கு அழைப்பு



கொழும்பு, பெப். 15

உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் பொன் விழாவை முன்னிட்டு 14ஆவது தமிழ் மாநாட்டை எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் லண்டனில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

லண்டன் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்துக்கு அருகில் உள்ள உலகத் தமிழர் வரலாற்று வளாகத் தில் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 29, 30ஆம் திகதிகளில் இம் மாநாடு நடத்தப்படவுள்ளது.

இம் மாநாட்டில் விருந்தினர்களாக கலந்து கொள்ளுமாறு பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் கலாநிதி ஏ. எச். வம். எச்.அபேரத்னவுக்கும் சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீமுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் நடைபெற்ற கலந்துரையாடலில் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் சர்வதேச பொதுச் செயலாளர் நாயகம் துரை கணேசலிங்கம், தேசிய அமைப்பாளர் தே. செந்தில்வேலவர். மத, நல்லிணக்கம் மற்றும் வெளிநாட்டு இராஜதந்திரிகள் ஊடான நல்லுறவைப் பேணி பாதுகாத்தல் போன்ற துறைகளுக்கான இணைப்புச் செயலாளர் அருட் கலாநிதி எஸ். சந்துரு பெர்னாண்டோ ஆகியோர் கலந்து கொண்டு அழைப்பு விடுத்தனர். (எ)

# திருமலை புத்தர் சிலை விவகாரம்

## அரசாங்கத்தின் திட்டமிட்ட தந்திரம்

### திலித் ஜயவீர எம். பி. சொல்கிறார்



கொழும்பு, பெப். 15

திருகோணமலை புத்தர் சிலை விவகாரமானது, நாட்டில் திட்டமிட்ட ரீதியில் அமைதியின்மையை ஏற்படுத்துவதற்காக அரசாங்கம் பயன்படுத்திய ஒரு தந்திரோபாயம் என்று சர்வஜன அதிகாரத்தின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான திலித் ஜயவீர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

"இந்த நாட்டின் மீது திட்டமிட்ட ரீதியில் முன்னெடுக்கப்படும் கலாசாரத் தாக்குதலைக் கண்டிப்பதற்காக நாம் இதில் தலையிட்டோம். திருகோணமலை சம்பவம் என்பது அதில் ஒன்று மாத்திரமே. உண்மையில் இதனை விடவும் பாரதூரமான பல சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. இந்த நாட்டில் வேண்டுமென்றே ஒரு பதற்ற நிலையை உருவாக்கவும் இனங்களுக்கு இடையிலான ஒற்றுமையை சீர்குலைக்கவும் அரசாங்கம் பயன்படுத்தும் ஒரு கருவியே இதுவாகும். இது எமக்குத் தெளிவாகத் தெரிகிறது."- என்றார். (எ)

# 2 ஓட்டோக்கள் நேருக்கு நேர் மோதி விபத்து

நுவரெலியா, பெப். 15

ஹற்றன் - நுவரெலியா பிரதான வீதியில் இரண்டு ஓட்டோக்கள் நேருக்கு நேர் மோதி இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்து கொட்டகலை பிரதேச மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்து நேற்று முன்தினம் மாலை கொட்டகலை - நுவரெலியா பிரதான வீதியில், சென்கிளையார் நீர்வீழ்ச்சிக்கு அருகாமையில் இடம்பெற்றுள்ளது.

கொட்டகலை பகுதியிலிருந்து தலவாக்கலை நோக்கிச் சென்ற ஓட்டோவும் தலவாக்கலையிலிருந்து கொட்டகலை நோக்கி சென்று கொண்டிருந்த மற்றுமொரு ஓட்டோவுமே இவ்வாறு நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானது.

விபத்தால் இரண்டு ஓட்டோக்களுக்கும் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பில் தலவாக்கலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)

ஊடகங்களுக்கு பொய்களை கூறி

# கஸ்ஸப தேரர் உள்நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள முடியாது

கொழும்பு, பெப். 15

தன்னைப் பற்றி ஊடகங்களுக்கு பொய்யான கூற்றுகளை தெரிவிப்பதன் மூலம் பலாங்கொட கஸ்ஸப தேரர் எதிர்பார்க்கும் உள்நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள முடியாது என்று பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகாரங்கள் பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்துள்ளார்.

தாமோ அல்லது தனது பிரதிநிதி ஒருவரோ பலாங்கொட கஸ்ஸப தேரருக்கு தனிப்பட்ட முறையில் ஒருபோதும் தொலைபேசி அழைப்பை மேற்கொள்ளவில்லை என்றும் பிரதி அமைச்சர் குறிப்பிட்டார்.

திருகோணமலை புத்தர் சிலை விவகாரம் தொடர்பான வழக்கில் கடந்த ஜனவரி 14ஆம் திகதி விளக்கமறியலில் வைக்கப்பட்ட கஸ்ஸப தேரர், 28 நாட்களுக்குப் பின்னர் நீதிமன்றத்தால் கடந்த 11ஆம் திகதி பிணையில் விடுவிக்கப்பட்டார்.

கடந்த 12 ஆம் திகதி விசேட ஊடகவியலாளர் சந்திப் பொன்றை நடத்திய அவர் பல விடயங்களை வெளிப்படுத்தியதுடன், அரசாங்க தரப்பு பிரதிநிதிகள் தமக்கும் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய ஏனைய தேரர்களுக்கும் அழைப்பு விடுத்து அழுத்தம் கொடுத்ததாக அவர் குறிப்பிட்டிருந்தார்.

கஸ்ஸப தேரரின் இந்தக் கூற்று தொடர்பில் கருத்து தெரிவித்த பொது மக்கள் பாதுகாப்பு பிரதி அமைச்சர் சுனில் வட்டகல, "பொய் பேசுவதை தவிர்த்தல் வேண்டும் என்ற வாசகத்தை எமக்கு கற்றுக் கொடுப்பவர்களே உண்மையான தேரர்கள். இது ஒரு அப்பட்டமான பொய் என்பது கஸ்ஸப தேரருக்கு நன்றாகத் தெரியும்"- என்றார். (எ)

# முன்னாள் அமைச்சர் பிரேமலால் குறித்த மேன்முறையீட்டு விசாரணை ஒத்திவைப்பு

கொழும்பு, பெப். 15

கொலைக் குற்றச்சாட்டுக்களுக்காக மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்த முன்னாள் அமைச்சர் பிரேமலால் ஜயசேகரவை விடுதலை செய்யுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய உத்தரவை இரத்து செய்யுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனு மீதான விசாரணையை செப்ரெம்பர் 4 ஆம் திகதி வரை ஒத்திவைக்க உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த கொலைச் சம்பவத்தால் பாதிக்கப்பட்ட தரப்பினரால் இந்த மேன்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மேன்முறையீட்டு மனு, நீதியரசர் டி. நவாஸ் தலைமையிலான மூவர் அடங்கிய உயர்நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையாக வேண்டிய அரசாங்க சட்டத்தரணி சுகவீனமுற்றுள்ளதாக விடுக்கப்பட்ட அறிவித்தலை ஏற்றுக்கொண்ட உயர்நீதிமன்றம், அதன் விசாரணையை செப்ரெம்பர் 4 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது.

2015 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போது, அப்போதைய ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவின் அரசியல் கூட்டமொன்றின் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு ஒருவரை கொலை செய்த குற்றச்சாட்டில் குற்றவாளியாகக் காணப்பட்ட பிரேமலால் ஜயசேகரவுக்கு இரத்தினபுரி மேல் நீதிமன்றம் மரண தண்டனை விதித்திருந்தது. (எ)

# சாதாரண தரப் பரீட்சைக்காக விசேட கூட்டு அனர்த்த திட்டம்

கொழும்பு, பெப். 15

சாதாரண தரப் பரீட்சை காலத்தில் ஏதேனும் அனர்த்த சூழ்நிலை ஏற்பட்டால் தேவையான நடவடிக்கைகளை எடுக்க இன்று முதல் தொடர்ச்சியான கூட்டுத் திட்டம் செயல்படுத்தப்படும் என்று அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இந்தத் தொடர் திட்டத்தைப் பரீட்சைத் திணைக்களம் உள்ளிட்ட நிறுவனங்கள் இணைந்து செயல்படுத்தும் என்று அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்தார்.

இந்த ஆண்டு சாதாரண தரப் பரீட்சை பெப்ரவரி 17 முதல் 26 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மதுவரி கட்டளை சட்டத்தை திருத்துவதற்கு நடவடிக்கை

கொழும்பு, பெப். 15

மதுவரிக் கட்டளைச் சட்டத்தை திருத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

மதுவரித் திணைக்களத்தின் வரி வருமானத்தை அதிகரித்தல் மற்றும் கட்டமைப்பு ரீதியான மறுசீரமைப்புகளுக்கான செயல்பாட்டுக் குழுவின் கூட்டம் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் நிஷாந்த ஜயவீர மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் நந்திக சனத் குமாநாயக்க ஆகியோரின் தலைமையில் நேற்று முன்தினம் முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது, மதுவரித் திணைக்களத்தின் செயல்பாடுகளை மிகவும் வெளிப்படைத் தன்மையுடனும் செயல்திறனாகவும் முன்னெடுப்பதற்காக இரண்டு ஆண்டுகளுக்குள் நிறைவுசெய்ய உத்தேசிக்கப்பட்ட மதுவரி வருமான முகாமைத்துவக் கட்டமைப்பின் முன்னேற்றம் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டது.

தற்போதைய அரசாங்கத்தின் அரச நிறுவன நவீனமயமாக்கல் திட்டத்தின் கீழ் மதுவரித் திணைக்களத்தின் நவீனமயமாக்கல் மற்றும் மறுசீரமைப்புகளுக்கு உயர் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாக பிரதி அமைச்சர் தெரிவித்தார்.

மதுவரித் திணைக்களத்தின் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் மற்றும் அனைத்து அதிகாரிகளும் இதற்கு முழு ஆதரவை தெரிவித்தனர்.

மேலும், மதுவரித் திணைக்களம் கடந்த 2025 ஆம் ஆண்டில் அடையப்பட்ட நிதி செயல்பாடுகளுக்காக பிரதி அமைச்சர் மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் பாராட்டியதுடன், இந்த ஆண்டு மேலும் உயர் நிதி முன்னேற்றத்தை அடைய தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்று மதுவரித் திணைக்கள அதிகாரிகள் உறுதியளித்தனர்.

தற்போதைய சமூக மற்றும் தொழில்நுட்ப போக்குகளுக்கு ஏற்ப மதுவரிக் கட்டளைச் சட்டத்தை திருத்தும் பணிகளை விரைவுபடுத்தவும் அடுத்த இரண்டு வாரங்களுக்குள் திருத்தங்களை நிறைவு செய்து சட்ட வரைஞருக்கு அனுப்பி வைக்கவும் முடிவு செய்யப்பட்டது.

மதுவரித் திணைக்களத்தின் செயல்திறனை அதிகரிக்க புதிய சேவை யாப்பின் அவசியத்தை குழு வலியுறுத்தியதுடன் இதற்கு மேலதிகமாக அதிகாரிகளின் பதவி உயர்வுகள் மற்றும் போதைப்பொருள் தடுப்பு பிரிவை வலுப்படுத்துவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது. (எ)

# மனைவியை உயிரோடு எரித்து கொன்ற கணவன்

கொழும்பு, பெப். 15

குடும்பத் தகராறு முற்றியதில் ஏற்பட்ட சம்பவமொன்றில், கணவன் தனது மனைவியை தீ வைத்து எரித்துக் கொலை செய்தார்.

பரசன்கஸ்வெவ, மெதகம பகுதியில் நேற்று முன்தினம் இந்த கொடூரக் குற்றம் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் பரசன்கஸ்வெவ பிரதேசத்தைச் சேர்ந்த 41 வயதுடைய பெண் என தெரியவந்துள்ளது.

பரசன்கஸ்வெவ பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை ஆரம்பித்துள்ள நிலையில், குடும்பத் தகராறு காரணமாகவே கணவன் இந்தக் கொலையைச் செய்தமை தெரியவந்துள்ளது.

சந்தேக நபரைக் கைது செய்வதற்காக பரசன்கஸ்வெவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
15.02.2026 ஞாயிற்றுக்கிழமை
விசுவாவசு வருடம், மாசி 03

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

# அடுத்தவரின் ஜனநாயகம் தொடர்பில் பேசும் தகுதி?

இலங்கை தமிழரசு கட்சியின் தீர்மானங்களை பொதுவெளிகளில் விமர்சித்தால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று அதன் செயலாளர் தெரிவித்திருப்பதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருக்கின்றன. ஒரு புறம் அரசாங்கம் புதிய பயங்கரவாதச் தடைச்சட்டத்தின் மூலம் மக்களின் ஜனநாயக உரிமைகளை மீறுவதாக தமிழ் சூழலில் அப்புக்காத்து உரையாடல்கள் இடம்பெற்றுக் கொண்டிருக்கும்போது மறுபுறும் தமிழரசு கட்சியின் தீர்மானங்களை பொதுவெளிகளில் விமர்சிக்க கூடாது - அவ்வாறு விமர்சித்தால் விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று எச்சரிப்பதை எவ்வாறு புரிந்து கொள்வது?

ஒரு கட்சியின் தீர்மானங்களை அக்கட்சியைச் சேர்ந்தவர்களே பொது வெளிகளில் விமர்சிக்கும் போது, அது கட்சியின் செல்வாக்கை பாதிக்கும் என்று கட்சியின் தலைமை கவலைப்படுவது சரியென்றால், அரசாங்கம் அரசை நிலைகுலையச் செய்யும் விடயங்கள் மீது கட்டுப்பாடுகள் இருக்க வேண்டும், இல்லாவிட்டால் நாட்டின் அமைதிநிலை சீர்குலைந்துவிடும் என்று வாதிடுவதில் என்ன தவறை நாம் காண முடியும்?

இலங்கை தமிழரசு கட்சி உருவாக்கப்பட்ட காலத்திலிருந்து கட்சியின் தலைமையுடன். முடிவுகளுடன் முரண்படும் போக்கும் இருந்தே வந்திருக்கின்றது. இதன் விளைவாக சிலர் கட்சியிலிருந்து வெளியேறி தனி வழியிலும் சென்றிருக்கின்றனர். எஸ்.ஜே.வி.செல்வநாயகத்தின் அரசியல் நிலைப்பாட்டுடன் முரண்பட்டு வி.நவரட்ணம் வெளியேறி, சுயாட்சி கழகத்தை உருவாக்கினார். பின்னர் தமிழரசு கட்சியின் கிழக்கு மாகாணத்தின் தூணாக இருந்தது செல்லையா ராஜதுரையை புறக்கணித்தமையின் காரணமாக, அவர் கட்சியிலிருந்து வெளியேறி ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்தார். அதன் மூலம் அமைச்சரான அவர் மட்டக்களப்பிற்கு பல நல்ல பங்களிப்புக்களை வழங்கியிருந்தார்.

ஒருவர் கட்சியிலிருந்து வெளியேறினால் அவரை உடனடியாக துரோகி என்று தூற்றும் அநாகரிகமான அரசியல் கலாசாரமொன்றும் தமிழில் இருக்கின்றது. பணம் பதவியை மட்டும் கொண்டு கட்சி மாறுவது தவறானது ஆனால் அரசியல் முரண்பாடுகளால் வெளியேறுவது என்பது அவர்களின் உரிமை. ஆனால் வி.நவரட்ணத்தை துரோகியயென்று அன்றைய தமிழரசு கட்சியின் தலைவர்கள் கூறிதாக தெரியவில்லை. வி.நவரட்ணம் பிற்காலத்தில் தமிழீழ சிந்தனைப் பள்ளியின் பிதாமகர் என்றும் சிலரால் கொண்டாடப்பட்டார்.

2004 தேர்தலில் தமிழரசு கட்சி மீண்டும் அரசியல் அரங்கிற்கு கொண்டுவரப்பட்ட போது. அதற்குள் கட்சிச் சண்டை என்று ஒன்று இருந்திருக்கவில்லை - சண்டை பிடிக்கவும் முடியாது ஏனெனில் கட்சியின் தீர்மானம் எடுக்கும் உரிமை வன்னியிடம் இருந்தது - எதனை பேச வேண்டும் - எப்போது பேச வேண்டும் என்னும் அனைத்தையும் தமிழ்ச் செல்வனே தீர்மானித்திருந்தார்.

புலிகளின் அழிவின் பின்னர், தமிழரசு கட்சியின் தலைமை சம்பந்தனிடம் வந்த உடனேயே முரண்பாடும் ஆரம்பித்துவிட்டது. இதற்கு புலம் பெயர் குழுக்களும் ஒரு பிரதான காரணம். இதன் பின்னர் தமிழரசு கட்சியின் தலைமையிலான கூட்டமைப்பு தொடர்ந்தும் முரண்பாட்டின் களமாகவே இருந்தது. பாராளுமன்ற உறுப்புரிமையை தக்கவைத்துக் கொள்ள வேண்டும் என்னும் தனிநபர் இச்சையின் விளைவாகவும், அன்றைய சூழலில் சம்பந்தனை எதிர்த்துச் செல்வது அரசியல் ரீதியில் சிக்கலானது என்பதாலும் ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ் மற்றும் புளொட் ஆகியவை பல்லைக் கடித்துக் கொண்டு பதவியை தக்கவைத்துக் கொண்டன. இந்தப் பின்புலத்தில் நோக்கினால் கட்சிக்குள் மோதுவதும் பின்னர் பொது வெளிகளில் அவற்றை விளம்பரம் செய்வதும் தமிழர் அரசியலுக்கு புதிது அல்ல.

# கொள்கலன் விசாரணை குழுவிலிருந்து விலகினார் துறைமுகங்கள் அமைச்சர்!

*கொழும்பு, பெப். 15*

கொழும்புத் துறைமுகத்திலிருந்து கட்டாயமான பரிசோதனைகள் இன்றி 323 கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டமை குறித்து விசாரணை நடத்தும் நாடாளுமன்ற விசேட குழுவிலிருந்து, துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் அநுர கருணாதிலக்க விலகியுள்ளார்.

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள இந்த விசேட குழு, குறித்த விடயம் தொடர்பில் ஆராய்ந்து பரிந்துரைகளை சமர்ப்பிப்பதற்காக கடந்த 11ஆம் திகதி மூன்றாவது தடவையாக பாராளுமன்றத்தில் கூடியது.

இதன்போது, அமைச்சர் அனுர கருணாதிலக்க குறித்த குழுவிலிருந்து விலகியுள்ளதாக அறிவிக்கப்பட்டதோடு, அவருக்குப் பதிலாக புதிய உறுப்பினர் ஒருவர் விரைவில் நியமிக்கப்படுவார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அன்றைய அமர்வின் போது, இலங்கை சுங்கப் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சீவலி அருக்கொட உள்ளிட்ட அதிகாரிகள் குழு முன்னிலையாகி, இந்தச் சம்பவம் தொடர்பான சாட்சியங்களை வழங்கினர்.

இந்தக் கூட்டத்தில் பிரதி அமைச்சர்களான சதுரங்க அபேசிங்க, சுனில் வட்டகல மற்றும் அர்க்கம் இலியாஸ் ஆகியோருடன் பாராளுமன்ற உறுப்பினர்களான தயாசிரி ஜயசேகர, அஜித் பி. பெரேரா, டீ.வீ. சானக்க, முஜிபுர் ரஹ்மான், நஜித் இந்திக்க மற்றும் லக்மாலி ஹேமச்சந்திர உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். (அ)

# சாதாரண தரப் பரீட்சை நடைபெறும் நிலையங்களில் டெங்கு புகையூட்டல்

*கொழும்பு, பெப். 15*

பாடசாலைகளில் டெங்கு குடம்பிகளின் சதவீதம் அதிகரித்துள்ளதாக ஆய்வுகள் தெரிவித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் பதில் பணிப்பாளர் கபில கன்னங்கர, ஆய்வு செய்யப்பட்ட பாடசாலைகளில் 40 வீதத்தில் தற்போது டெங்கு குடம்பிகள் பதிவாகியுள்ளதாக தெரிவித்துள்ளார். இந்த நிலையில், கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை நடைபெறும் நிலையங்களில் மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தற்போது புகையூட்டல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் கூறியுள்ளார். (அ)

# வவுனியாவில் மோ.சைக்கிள் திருட்டு; மூன்று பேர் பொலிஸாரினால் கைது!

*வவுனியா, பெப். 15*

வவுனியா நகரில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் திருட்டுச் சம்பவம் தொடர்பில், கணவன் மனைவி உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாக, வவுனியா பொலிஸ் நிலைய குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மூன்று தினங்களுக்கு முன்னர் வவுனியா சதொச வீதியில் மோட்டர் சைககிள் ஒன்று திருடப்பட்டிருந்தது.

திருடப்பட்ட மோட்டார் சைக்கிளின் உரிமையாளர், வவுனியா தலைமைப் பொலிஸ் நிலைய குற்றத் தடுப்பு பிரிவில் முறைப்பாட்டை பதிவு செய்தார்.

அதனையடுத்து, வவுனியா தலைமை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பீ.எஸ்.வீரரத்னவின் வழிகாட்டலில், வவுனியா பொலிஸ் நிலைய குற்றத் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி இலங்கசிங்க தலைமையில், பொலிஸ் குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டனர். அதற்கமைய, மடு, இரணை இலுப்பைக்குளம் பகுதியில் வசிக்கும் 23 வயதான நபர் ஒருவரும், அவருடைய 25 வயதான மனைவியும், 31 வயதான மனைவியின் மைத்துனர் உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், மூன்று இலட்சம் ரூபா பெறுமதியான திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் மீட்கப்பட்டது. (அ)

# தாக்குதலுக்கு உள்ளாகி மூன்று வயது சிறுமி பலி!


*கொழும்பு, பெப். 15*

கொழும்பு - ஹோமாகம, பகுதியில் மூன்று வயது சிறுமி ஒருவர் தாக்குதலுக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளார்.

குறித்த சிறுமி மீது நடத்தப்பட்ட தாக்குதல் காரணமாகவே இந்த மரணம் சம்பவித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப கட்ட விசாரணைகளின்படி, உயிரிழந்த சிறுமியின் தாய், அவரது ஆண் நண்பருடன் இணைந்து இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளதாக சந்தேகிக்கப்படுகிறது. சம்பவம் தொடர்பில் சிறுமியின் தாயை பொலிஸார் ஏற்கனவே கைது செய்துள்ளனர். தலைமறைவாகியுள்ள தாயின் ஆண் நண்பரை கைது செய்வதற் கான மேலதிக விசாரணைகளை ஹோமாகம பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றப் புலனாய்வில் ஏ.ஐ. தொழில்நுட்பம்

பெ. கண்ணப்பன்




மனிதர்கள் வேட்டையாடி வாழ்ந்தகாலத்திலேயே ஒருவரை ஒருவர் தாக்குதல்,பொருள்களைப் பறித்துக் கொள்ளுதல் போன்றசெயல்கள் நடந்துள்ளன. தங்களின் உயிரையும்,வாழ்க்கையையும் தற்காத்துக் கொள்வதற்காக,தீங்குவிளைவிக்கும் அத்தகையசெயல்களில் ஆதிமனிதர்கள் ஈடுபட்டனர். அவைஅந்தக் காலத்தில் சட்டமீறல்களாகவோஅல்லதுகுற்றச் செயல்களாகவோ கருதப்படவில்லை.

நாடோடிகளாக வாழ்ந்த ஆதிமனிதர்கள், காலப் போக்கில் சிறுசிறு குழுக்களாகவும், பின்னர் சமுதாயமாகவும் ஒருங்கிணைந்து வாழத் தொடங்கினர்.விவசாயம், கால்நடைவளர்ப்புபோன்றதொழில்களில் ஈடுபட்டனர். சேமிப்பு,சொத்துரிமைபோன்றவைசமுதாயத்தில் நிகழத் தொடங்கின. இதன் விளைவாகதிருட்டு,நிலத்தகராறு, இயற்கைவளங்களைப் பயன்படுத்துவதில் வன்முறை, சமுதாயகட்டமைப்புமீறல்கள் போன்றசெயல்கள் சமுதாயத்தில் நிகழத் தொடங்கின.

அந்தச் செயல்கள் சமுதாயத்தில் தீங்குவிளைவிக்கும் செயல்களாக இருந்தாலும், அவற்றைக் "குற்றம்" என்ற கண்ணோட்டத்தில் அணுகிய சட்டரீதியான நடைமுறை அந்தக் காலத்தில் இல்லை. தீங்குவிளைவிக்கும் செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு, அவர்களின் செயல்களுக்கு ஏற்ப உடல் உறுப்புகளைக் கழித்தல்,சமுதாயத்தில் இருந்து வெளியேற்றுதல் உள்ளிட்டசமூகக் கட்டுப்பாடுகள் நடைமுறையில் இருந்துவந்தன. மனிதசமுதாயத்தில் ஏற்பட்டவளர்ச்சிக்கேற்ப,குற்றநிகழ்வுகளில் மாற்றங்கள் ஏற்பட்டன. குற்றங்களுக்கான காரணங்கள், நிகழ்த்தப்படும் முறைகள், குற்றங்களை எதிர்கொள்ளும் முறைகள் சமுதாயத்தில் காலத்துக்கேற்ப மாற்றம் அடைந்தன.

மன்னர்களின் ஆட்சிமுறைநடைமுறைக்குவந்தகாலகட்டத்தில்,குடிமக்களின் நலனில் மன்னர்கள் கவனம் செலுத்தினர்.சமுதாயத்தில் நிலவிவந்தகுற்றங்கள்,அவற்றுக்கானதண்டனைகள் குறித்தவிதிகள் வகுக்கப்பட்டன.

பழம்பெரும் நாகரிகம் எனக் கருதப்படும் பாபிலோனில் கி.மு. 18-ஆம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்ட ஹம்முராபி சட்டத்தில் பல்வேறு குற்றங்கள் மற்றும் அவற்றுக்கான தண்டனைகள் குறித்த விதிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. மனிதசமுதாயத்தின் வளர்ச்சியுடன் சேர்ந்து, பல்வேறு வகையான குற்ற நிகழ்வுகளும் சமுதாயத்தில் உருவெடுத்தன.

குறிப்பாக 18-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தொடங்கிய தொழில்புரட்சியின் விளைவாக ஏற்பட்ட நகரமயமாக்கல் குற்ற நிகழ்வுகளின் எண்ணிக்கையை சமுதாயத்தில் அதிகரிக்கச் செய்தது. அதைத் தொடர்ந்து, குற்றங்கள் மீது துப்புதுலக்கி, உண்மை கண்டறியும் குற்றப் புலனாய்வு முறையானது சமுதாயத்தில் முக்கியத்துவம் பெறத் தொடங்கியது.

தொழில்முறை குற்றப் புலனாய்வு அமைப்பானது உலகிலேயேமுதன் முதலில் 1749-ஆம் ஆண்டில் பிரிட்டனின் லண்டன் நகரில் தொடங்கப்பட்டது. "போ ஸ்ட்ரீட் ரன்னர்ஸ்" என்றழைக்கப்பட்ட அமைப்பை லண்டன் நகரிலுள்ள போ ஸ்ட்ரீட் மாஜிஸ்திரேட் நீதிமன்ற நீதிபதி ஹென்றி ஃபீல்டிங் ஏற்படுத்தினார்.

லண்டன் நகரில் திருட்டு,கொள்ளை, சாலைவழிப்பறி போன்றவை அதிகரித்ததைத் தொடர்ந்து, குற்றங்கள் நடைபெற்ற இடத்திற்கு உடனடியாகச் சென்று, துப்புதுலக்கி, குற்றவாளிகளைத் தேடிக் கண்டுபிடிக்கும் பணியைபோ ஸ்ட்ரீட் ரன்னர்ஸ் மேற்கொண்டனர்.

அதுமட்டுமின்றி, குற்றவாளிகள் தொடர்பான விவரங்களை உள்ளடக்கிய பதிவேடுகளைஅவர்கள் பராமரித்தனர். 1829-ஆம் ஆண்டில் லண்டன் மெட்ரோபோலிடன் காவல் அமைப்பு உருவாக்கப்பட்டதைத் தொடர்ந்து, அவர்கள் மெட்ரோபோலிடன் காவல் அமைப்பில் இணைக்கப்பட்டனர்.

குற்றம் நடைபெற்ற இடத்திலிருந்து ஆதாரங்களைச் சேகரித்தல்,சேகரித்த ஆதாரங்களை அறிவியல் முறைப்படி ஆய்வு செய்தல், ஆய்வின் முடிவுகளை நீதிமன்றத்தில் சாட்சியமாக சமர்ப்பித்தல் போன்றவற்றுக்கு அறிவியலைப் பயன்படுத்தும் முறை 19-நூற்றாண்டில் நடைமுறைக்குவந்தது. குறிப்பாக,கைவிரல் ரேகை ஆய்வு,டி.என்.ஏ.பரிசோதனை, ரத்தம், முடிபோன்றஉயிரியல் ஆதாரங்களின் ஆய்வு, கையெழுத்து ஆய்வு, உடற்கூறு ஆய்வு போன்றவற்றை குற்றப் புலனாய்வில் பயன்படுத்தும் முறைகள் நடைமுறைக்கு வந்தன.

கணினி, இணையம், செயற்கை நுண்ணறிவு போன்றவை பொதுமக்களின் பயன்பாட்டில் அதிகளவில் இருந்து வருகின்ற தற்போதைய சூழலில், சைபர் குற்றங்கள், நிதிமோசடிகள், அடையாளத் திருட்டு, டீப்-பேக் தொழில்நுட்பக் குற்றங்கள் போன்றவை சமுதாயத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றன. அதிகரித்து வரும் நவீன குற்றங்களில் விரைந்து துப்புதுலக்குவதற்கும்,குற்றங்கள் நடைபெறும் இடங்களை முன்கூட்டியே கணித்து, குற்றங்கள் நிகழாமல் தடுப்பதற்கும் செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ.) தொழில்நுட்பங்கள் பெரிதும் பயன்படுகின்றன.

கடந்த காலங்களில் நடைபெற்ற குற்றங்கள் தொடர்பானதரவுகளை (இடம், நேரம்,குற்றம் நடைபெற்றமுறை) செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பங்கள் பகுப்பாய்வு செய்து,குற்றங்கள் நடைபெற வாய்ப்புள்ள பகுதிகள் மற்றும் நேரங்களை முன்கூட்டியே கணிக்கிறது. அவை தொடர்பான முன்னெச்சரிக்கையை காவல் துறைக்கு செயற்கை நுண்ணறிவு உரியநேரத்தில் வழங்கி, குற்றங்களைத் தடுக்க உதவுகிறது.

தேடப்படும் குற்றவாளிகள் மற்றும் தொழில்முறை குற்றவாளிகளைப் பொது இடங்களில் அடையாளம் கண்டு, அவர்களால் நிகழ்த்தப்படும் குற்றங்களைத்

(14ஆம் பக்கம் பார்க்க)

## இந்தவார ராசிபலன் 15.02.2026 - 21.02.2026

ஞாயிற்றுக்கிழமை
விசுவாவசு வருடம் - மாசி 03

நல்ல நேரம்: 7.31 - 09.00   ராகு காலம் : 4.30 - 06.00   திதி : திரையோதசி

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

மேஷ ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மிகச் சிறப்பான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலை போராட்டமாக இருக்கும், சில இடங்களில் உழைப்பு சவாலாக இருக்கும். உத்தியோக ரீதியாக ஊதிய உயர்வு வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் நிதானமாக நடக்கும். குடும்பத்தில் இருந்து வந்த பிரச் சனைகள் நீங்கி மன நிம்மதி அதிகரிக்கும், பிள்ளைகளால் பெருமையும் மகிழ்ச்சியும் உண்டாகும். அதிகமாக ஆசைபட வேண்டாம்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

ரிஷப ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மிகச் லாபகரமான பலன்கள் கிடைக்கும் . சில இடங்களில் வேலையில் சிறு போராட்டம் உண்டாகும், சில இடங்களில் கடுமையாக உழைக்க வேண்டிய கட்டாயம் இருக்கும். உத்தியோக ரீதியாக பதவி ஏற்றம் வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் விரைவாக நடக்கும். வியாபாரத்தில் விற்பனையும் பண வரவும் அதிகரித்து உங்கள் வங்கி இருப்பு அதிகரிக்கும், புதிய முயற்சிகளில் மகிழ்ச்சியோடு ஈடுபடலாம். குடும்பத்தில் சந்தோஷம் அதிகரிக்கும், பிள்ளைகளால் மன நிம்மதி உண்டாகும்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

மிதுன ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மிக மேன்மையான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலையில் கொஞ்சம் போராட்டமான நிலை உண்டாகும், சில இடங்களில் சவாலுடன் உழைக்க வேண்டிய கட்டாயம் இருக்கும். உத்தியோக ரீதியாக பதவி உயர்வு கிடைக்கலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் சீக்கிரமாகவே நடக்கும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் பெருகி கையிருப்பு அதிகரிக்கும், புதிய தொழிலில் தைரியமாக ஈடுபடலாம். பிள்ளைகளால் நல்ல பெயர் கிடைக்கும்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

கடக ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் உயர்வான பலன்கள் இருக்கும். சில இடங்களில் நன்மைகள் இருக்கும், சில இடங்களில் போராட்டங்கள் இருக்கும். உத்தியோக ரீதியாக சில பிரச்சனைகள் வரலாம், ஆனால் காத்திருந்த பதவி உயர்வு கிடைக்கும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் சிறப்பாக இருக்கும், கடுமையான முயற்சிகளுக்கு நல்ல வெற்றி கிடைக்கும். பிள்ளைகளால் சில சிக்கல்கள் முடிவுக்கு வரும்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

சிம்ம ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் வெற்றிகரமான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலை சிக்கல் இருக்கும் , சில இடங்களில் உழைப்பு அதிகமாக இருக்கும். உத்தியோக ரீதியாக பதவி உயர்வு வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் தாமதமாகும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் அதிகரித்து பண இருப்பு உயரும், புதிய முயற்சிகளில் விரும்பி ஈடுபடலாம். விவாதங்கள் செய்வது கூடாது.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

கன்னி ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மிக உயர்வான பலன்கள் கிடைக்கும் . சில இடங்களில் வேலையில் சிறு சிரமம் உண்டாகும் . சில இடங்களில் போராட்டத்துடன் உழைக்க வேண்டிய கட்டாயம் இருக்கும். உத்தியோக ரீதியாக சம்பள அதிகரிப்பு வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் வாரக் கடைசியில் நடக்கும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் அதிகரித்து வங்கி இருப்பு அதிகரிக்கும், புதிய தொழிலில் தைரியமாக ஈடுபடலாம். மன நிம்மதியும் மகிழ்ச்சியும் உண்டாகும். பதவி உயர்வு, ஊதிய உயர்வு கிடைக்கும்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

துலாம் ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மிக சிறப்பான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலையில் கொஞ்சம் அழுத்தம் உண் டாகும், சில இடங்களில் போராட்டமாக உழைக்க வேண்டிய கட்டா யம் இருக்கும்.வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் அதிகரித்து பொருளாதார நிலை மேம்படும், புதிய தொழிலில் நம்பிக்கையாக ஈடுபடலாம். பிள்ளைகளால் சிறப்பும் பெருமையும் உண்டாகும்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

விருச்சிக ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மிகச் சிறப்பான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் போட்டி இருக்கும். சில இடங்களில் எதிர்ப்புகள் இருக்கும். உத்தியோக ரீதியாக பதவி மாற்றம் வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் தாமதமாக நடக்கும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் பெருகி வருமானம் அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் திட்டமிட்டு இறங்கலாம். உங்களின் பெருமை உயரும்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

தனுசு ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் உயர்வான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலை கடுமையாக இருக்கும் , சில இடங்களில் பாதிப்பு இருக்கும். உத்தியோக ரீதியாக சம்பள அதிகரிப்பு வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் தாமதமாக நடக்கும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் மந்தமாக இருக்கும். வார கடைசியில் பொருளாதாரம் உயரும், புதிய முயற்சிகளில் தைரியமாக ஈடுபடலாம். குடும்பத்தில்

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

மகர ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மிக லாபமான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலையில் சிறு போராட்டங்கள் உண்டாகும், சில இடங்களில் நேரம் பார்க்காமல் உழைக்க வேண்டிய கட்டாயம் இருக்கும். உத்தியோக ரீதியாக புதிய பொறுப்பு வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் விரைவாக நடக்கும். குடும்பத்தில் இருந்து வந்த சிரமங்கள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும், பிள்ளைகளால் நிம்மதி உண்டாகும்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

கும்ப ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் அனுகூலமான பலன்கள் கிடைக்கும். சில இடங்களில் வேலையில் போராட்டமாக இருக்கும். சில இடங்களில் வேலையில் பொறாமை இருக்கும். உத்தியோக ரீதியாக உங்கள் திறமைக்கேற்ற பெருமை உண்டாகும். ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் தாமதமாக நடக்கும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் பெருகி செல்வம் அதிகரிக்கும். குடும்பத்தில் இருந்து வந்த சிக்கல்கள் நீங்கி சந்தோசம் உண்டாகும், பிள்ளைகளால் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

மீன ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மிக அனுகூலமான பலன்கள் கிடைக்கும் . சில இடங்களில் வேலையில் சிறு சறுக்கல்கள் உண்டாகும், சில இடங்களில் சவாலாக உழைக்க வேண்டிய கட்டாயம் இருக்கும். உத்தியோக ரீதியாக வேலை மாற்றம் வரலாம், ஆனால் எதிர்பார்த்த ஒரு காரியம் கொஞ்சம் மெதுவாக நடக்கும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் அதிகரித்து உங்கள் வங்கி இருப்பு அதிகரிக்கும், புதிய முயற்சிகளில் நம்பிக்கையாக ஈடுபடலாம். குடும்பத்தில் இருந்து வந்த குழப்பங்கள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும், பிள்ளைகளால் மன நிம்மதி உண்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாத தடைச் சட்டத்தை பதிலீடு செய்வதற்கான வரைவுகளில் மேலும் கொடூரமான ஏற்பாடுகளை புகுத்துவதன் உள்நோக்கம் என்ன?



வீரகத்தி தனபாலசிங்கம்

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் 2025 டிசம்பரில் வெளியிட்ட பயங்கரவாதத்தில் இருந்து அரசைப் பாதுகாப்பதற்கான உத்தேச சட்ட வரைவு கடந்த 47 வருடங்களாக நடைமுறையில் இருந்து வரும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை பதிலீடு செய்வதற்காக முன்னெடுக்கப்படுகின்ற மூன்றாவது முயற்சியாகும். அந்த சட்ட வரைவு குறித்து பெப்ரவரி 28 ஆம் திகதி வரை பொதுக் கருத்துக்களை தெரிவிப்பதற்கு அரசாங்கம் அவகாசம் வழங்கியிருக்கிறது.

அண்மைய கடந்த காலத்தில் மைத்திரி - ரணில் அரசாங்கத்தினால் 2018 ஆம் ஆண்டில் பயங்கரவாத தடுப்புச் சட்ட வரைவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தினால் 2023 ஆம் ஆண்டில் பயங்கரவாத எதிர்ப்பு சட்ட வரைவும் முன்வைக்கப்பட்டன.

முன்னைய இரு வரைவுகளையும் போன்றே தற்போதைய அரசாங்கத்தின் வரைவும் பயங்கரவாத தடைச் சட்டத்தை விடவும் கொடூரமான ஏற்பாடுகளைக் கொண்டிருப்பதாக அரசியல் கட்சிகள், மனித உரிமைகள் அமைப்புக்கள், சட்டத்துறை சாரந்த அமைப்புக்கள், மத அமைப்புக்கள் மற்றும் சிவில் சமூகக் குழுக்கள் கடுமையான விமர்சனத்தை முன்வைத்து வருகின்றன.


பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் நான்கு தசாப்தங்களுக்கும் அதிகமான காலமாக இடம்பெற்று வந்திருக்கின்ற மக்களின் அடிப்படை உரிமை மீறல்களும் படுமோசமான துஷ்பிரயோகங்களும் இனிமேலும் இடம்பெறாதிருப்பதை உறுதிசெய்வதற்கான ஏற்பாடுகளை இந்த வரைவுகள் கொண்டிருக்கவில்லை என்பதே முன்வைக்கப்படுகின்ற முக்கியமான குற்றச்சாட்டாகும்.

நீதியமைச்சின் இணையத் தளத்தில் கடந்த டிசம்பரில் வெளியிடப்பட்ட புதிய வரைவும் ஜனாதிபதியினதும் பாதுகாப்புத்துறை அமைப்புக்களினதும் அதிகாரங்களை பெரியளவில் விரிவுபடுத்தும் ஏற்பாடுகளைப் கொண்டிருப்பது மாத்திரமல்ல, மக்களின் ஜனநாயக மற்றும் குடியியல் சுதந்திரங்களை பாரதூரமான அளவுக்கு கட்டுப்படுத்தக்கூடிய ஆபத்தையும் கொண்டிருக்கின்றன என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

புதிய வரைவு தொடர்பில் தற்போது மூண்டிருக்கும் பொது விவாதத்தில் முன்வைக்கப்பட்டுவரும் விமர்சனங்களையும் மாற்று யோசனைகளையும் அரசாங்கம் எந்தளவுக்கு கவனத்தில் எடுத்து போதுமானளவு மாற்றங்களைச் செய்வதில் நாட்டம் காட்டும் என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும். ஆனால், பயங்கரவாத தடைச் சட்டத்தை பதிலீடு செய்வதற்கான முன்னைய இரு முயற்சிகளுக்கும் நேர்ந்த அதே கதி தற்போதைய முயற்சிக்கும் நேராது என்று எவராலும் உத்தரவாதம் கூறமுடியாது.

பயங்கரவாதம் என்பதற்கு சட்ட வரைவில் கொடுக்கப்பட்டிருக்கும் வரைவிலக்கணம் ஜனநாயக ரீதியான எதிர்ப்பியக்கங்களை ஒடுக்குவதற்கும் கருத்து வெளிப்பாட்டு சுதந்திரத்தை கட்டுப்படுத்துவதற்கும் அரசாங்கத்தினால் பயன்படுத்தப்படக்கூடியதாக விசாலமானதாகவும் தெளிவற்றதாகவும் இருக்கிறது. பயங்கரவாதக் குற்றங்கள் என்று வரைவில் வகைப்படுத்தப்பட்டிருப்பவை சாதாரண குடிமக்களைக் கூட 20 வருடங்கள் வரை சிறைவைக்கக்கூடிய ஆபத்தைக் கொண்டிருப்பதாக கூறப்படுகிறது.

இலங்கையில் இதுவரையில் அறிமுகப்படுத்தப்பட்ட ஆபத்தான சட்டங்களில் ஒன்று என்று இதை வர்ணித்திருக்கும் முன்னாள் வெளியுறவு அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் இந்த வரைவு தற்போதைய வடிவில் நிறைவேற்றப்படுமானால் ஜனநாயக சுதந்திரங்களுக்கு சாவுமணியாக அமையும் என்பதுடன் சர்வதேச ரீதியில் நாட்டுக்கு பாரதூரமான விளைவுகளைக் கொண்டுவரும் என்று எச்சரிக்கை செய்திருக்கிறார்.




**இதுவரையான மூன்று சட்ட வரைவுகளுமே எந்தச் சட்டத்தை பதிலீடு செய்வதற்கான நோக்கத்துடன் முன்வைக்கப்பட்டனவோ அதே சட்டத்தில் உள்ளதை விடவும் கொடூரமான ஏற்பாடுகளை கொண்டிருப்பதை நோக்கும்போது அதுவே தொடர்ந்தும் இருக்க வேண்டும் என்ற சூழ்ச்சித்தனமான நோக்கத்துடனேயே அரசாங்கங்கள் செயற்படுகின்றன என்ற முடிவுக்கு வரவேண்டியிருக்கிறது.**

வீடுகளுக்குள் பிரவேசிப்பது, அந்தரங்கமான ஆவணங்களைக் கைப்பற்றுவது மற்றும் ஆட்களை சோதனை செய்வது உட்பட பரந்தளவிலான அதிகாரங்களை ஆயுதப் படைகள்,பொலிஸ் மற்றும் கரையோரக் காவல்படைக்கு வழங்கும் ஏற்பாடுகளை உத்தேச சட்டம் கொண்டிருக்கிறது. ஒரு வருடம் வரையான தடுப்புக்காவல் உத்தரவைப் பிறப்பிப்பதற்கு பாதுகாப்புச் செயலாளருக்கு அதிகாரமளிப்பதுடன் வழமையாக நீதிமன்றத்தின் மேற்பார்வையின் கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட வேண்டிய சந்தேகநபர்களை பொலிஸ் காவலுக்கு மாற்றுவதற்கும் அனுமதிக்கும் ஏற்பாடுகளும் இருக்கின்றன.

ஜனாதிபதி வர்த்தமானி அறிவித்தல் ஒன்றின் மூலமாக எந்தவொரு அமைப்பையும் தடை செய்யலாம். தடை உத்தரவை ஜனாதிபதி விலக்கிக்கொள்ளும் வரை அத்தகைய அமைப்புக்கள் உறுப்பினர்களைச் சேர்ப்பதை, கூட்டங்களை நடத்துவதற்கு அல்லது வங்கிக்கணக்கு ஒன்றை கையாளுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது. எந்தவொரு இடத்தையும் ஜனாதிபதி தடைசெய்யப்பட்ட பிரதேசமாக பிரகடனம் செய்து மக்கள் பிரவேசிப்பதை தடுக்க முடியும். அந்த தடையை மீறுபவர்கள் மூன்று வருட சிறைத்தண்டனையை அனுபவிக்க வேண்டி வரும் அல்லது 3 மில்லியன் ரூபா அபராதத்தை செலுத்த வேண்டும்.

முன்னைய இரு அரசாங்கங்களினால் முன்வைக்கப்பட்ட பயங்கரவாதத்துக்கு எதிரான சட்ட மூலங்களில் பயங்கரவாதத்துக்கு கொடுக்கப்பட்ட வரைவிலக்கணம் தொடர்பில் ஏற்கெனவே சுட்டிக்காட்டப்பட்ட பாரதூரமான குறைபாடுகளையும் நீதித்துறை விதந்துரைத்த திருத்தங்களையும் கருத்தில் எடுக்காமல் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் புதிய வரைவை வெளியிட்டிருக்கிறது.

ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் சமர்ப்பித்த பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் அரசியலமைப்புத் தகுதியை கேள்விக்கு உள்ளாக்கி தாக்கல் செய்யப்பட்ட முப்பதுக்கும் அதிகமான மனுக்களை விசாரணை செய்த உயர்நீதிமன்றம் சட்டமூலத்தில் ' பயங்கரவாதக் குற்றச் செயல்கள்' என்று வர்ணிக்கப்பட்டிருந்தவை பெருமளவுக்கு சர்வதேச சட்டங்களுக்கு பொருத்தமான முறையில் அமைந்திருக்க வேண்டும் என்று வலியுறுத்தியது. பயங்கரவாதத்துக்கு அந்த சட்டமூலம் கொடுத்த வரைவிலக்கணத்தை உயர்நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளவில்லை.

பயங்கரவாதம் என்பதற்கான வரைவிலக்கணம் ஐக்கிய நாடுகளின் வரைவிலக்கணத்தின் வழியில் அமைய வேண்டும் என்கிற அதேவேளை, அந்த வரைவிலக்கணத்தை தீர்மானிக்கும்போது ஐக்கிய இராச்சியம், அவுஸ்திரேலியா, நியூசிலாந்து மற்றும் கனடா போன்ற நாடுகளின் சட்டங்களில் கூறப்பட்டிருக்கும் வரைவிலக்கணத்தை பரிசீலனைக்கு எடுக்க வேண்டும் என்று உயர்நீதிமன்றம் அறிவுறுத்தியது.

பயங்கரவாதத்துக்கு வரைவிலக்கணம் வகுப்பது என்பது உண்மையில் ஒரு சர்வதேசப் பிரச்சினை. அது விடயத்தில் ஐக்கிய நாடுகள் சபையினால் கூட இது வரையில் உலகளாவிய கருத்தொருமிப்பைக் காணமுடியவில்லை என்பதே யதார்த்தம்.

ஒருவருக்கு பயங்கரவாதியாகத் தோன்றுபவர் இன்னொருவருக்கு விடுதலை போராளியாக தென்படுவார் என்று நாம் வழமையாக பேசுவதுண்டு. நாடுகள் அவை எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளின் பாதுகாப்பு நெருக்கடிகள் மற்றும் அரசியல் பிரச்சினைகளின் அடிப்படையிலேயே பயங்கரவாதத்துக்கு வியாக்கியானம் செய்கின்றன. இலங்கை அதற்கு விதிவிலக்கு அல்ல.

நியூயோர்க் இரட்டைக் கோபுரங்கள் மீதான 2001 செப்டெம்பர் 11 விமானத் தாக்குதல்களைத் தொடர்ந்து அமெரிக்கா தலைமையில் மேற்குலகம் பயங்கவாதத்துக்கு எதிரான உலகளாவிய போரைப் பிரகடனம் செய்தபோது அன்றைய கியூபா ஜனாதிபதி பிடல் காஸ்ட்ரோ தெரிவித்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கருத்தை இந்த இடத்தில் நினைவுபடுத்துவது பொருத்தமானது. பயங்கரவாதத்துக்கு எதிரான உலகளாவிய போர் என்ற போர்வையில் அவர்கள் அப்பட்டமான பயங்கரவாதத்துக்கும் நியாயபூர்வமான ஆயுதப் போராட்டத்துக்கும் இடையிலான வேறுபாட்டை அழிக்கப் போகிறார்கள் என்று அவர் எச்சரிக்கை செய்தார்.

இது இவ்வாறிருக்க, பயங்கரவாத தடைச்சட்டத்தை பதிலீடு செய்வதற்கு தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் சட்டவரைவு ஒன்றை வெளியிட்டிருப்பதில் ஒரு முரண்நிலை இருக்கிறது.

ஜனாதிபதி அநுர குமார திசநாயக்க 2024 ஜனாதிபதி தேர்தல் விஞ்ஞாபனத்தில் பயங்கரவாதத் தடைச்சட்டம் உட்பட சகல ஒடுக்குமுறைச் சட்டங்களையும் ஒழித்து நாட்டின் சகல பாகங்களிலும் மக்களின் குடியியல் உரிமைகளை உறுதிசெய்வதாக வாக்குறுதியளித்தார். பயங்கரவாதத் தடைச் சட்டத்தை பதிலீடு செய்வதற்கு புதிய சட்டம் கொண்டு வரப்படும் என்று விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்படவில்லை.

ஆனால், திசநாயக்க ஜனாதிபதியாக பதவியேற்ற சில வாரங்களில் வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத் தங்களது அரசாங்கம் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கவோ அல்லது திருத்தவோ போவதில்லை என்று அறிவித்தார். புதிய அரசாங்கம் உள்நாட்டிலும் வெளியுலகிலும் கடுமையான கண்டனங்களுக்கு உள்ளாகியிருக்கும் அந்த சட்டத்தை துஷ்பிரயோகம் செய்யாது என்று அவர் உறுதியளித்தார். தேசிய மக்கள் சக்தி மீறிய முதல் தேர்தல் வாக்குறுதி பெரும்பாலும் அதுவாகவே இருக்கலாம்.

இன்னொரு விசித்திரம் என்னவென்றால் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை முற்றாக நீக்கப்போவதாக வாக்குறுதியளித்த ஒரு அரசாங்கம் அதே சட்டத்தைப் பதிலீடு செய்வதற்காக தற்போது வெளியிட்டிருக்கும் சட்ட வரைவு முன்னைய இரு அரசாங்கங்கள் கொண்டுவந்த சட்டமூலங்களை விடவும் கொடூரமான ஏற்பாடுகளைக் கொண்டிருப்பதாகும்.

இதுவரையான மூன்று சட்ட வரைவுகளுமே எந்தச் சட்டத்தை பதிலீடு செய்வதற்கான நோக்கத்துடன் முன்வைக்கப்பட்டனவோ அதே சட்டத்தில் உள்ளதை விடவும் கொடூரமான ஏற்பாடுகளை கொண்டிருப்பதை நோக்கும்போது அதுவே தொடர்ந்தும் இருக்க வேண்டும் என்ற சூழ்ச்சித்தனமான நோக்கத்துடனேயே அரசாங்கங்கள் செயற்படுகின்றன என்ற முடிவுக்கு வரவேண்டியிருக்கிறது. ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய நல்லிணக்கம் தொடர்பில்
## ஜனாதிபதியை தவறாகப் புரிந்து கொள்ளுதல்!

**தேசிய வைபவங்கள் உள்நாட்டு மோதலில் ஒரு சமூகத்தின் வெற்றியையும் இன்னொரு சமூகத்தின் தோல்வியையும் பிரதிபலிப்பவையாக நோக்கப்படும் எண்ணத்தை வலுப்படுத்தவதாக அமைந்தால் நல்லிணக்கம் வேர்விட முடியாது.**



கலாநிதி ஜெகான் பெரேரா

ஜனாதிபதி அநுர குமார திசநாயக்க அரசியல் ரீதியில் மிகுந்த உணர்ச்சிபூர்வமானவையும் சர்ச்சைக் குரியவையுமான பிரச்சினைகளை மக்கள் மத்தியில் சென்று விளக்கிக் கூறுவதில் தனது அரசியல் மூலதனத்தை முதலீடு செய்துவருகின்றார். சுலபமான அரசியல் தெரிவுகள் இருக்கின்ற ஒரு நேரத்தில், இனத்துவ சந்தேகத்தையும் அச்சங்களையும் எதிர் கொள்ளும் கடுமையான பாதையை ஜனாதிபதி தெரிவுசெய்கின்றார். குறிப்பாக, மூன்று பிரச்சினைகளில் ஜனாதிபதியின் கருத்துக்கள் கடுமையான எதிர்வினைகளை தோற்றுவித்திருக்கின்றன.

முதலாவதாக, நாட்டின் வடபகுதிக்கு தென்னிலங்கையில் இருந்து பௌத்த யாத்திரிகள்கள் தேசியவாத நோக்கங்களுடன் செல்கிறார்கள் என்று ஜனாதிபதி தெரிவித்த கருத்து. இரண்டாவதாக, காங்கேசன்துறையில் அண்மைக்காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட திஸ்ஸ ரஜமகா விகாரையின் விரிவாக்கம் தொடர்பிலான சர்ச்சை. இது உள்ளூர்வாசிகளான தமிழர்களையும் சிங்கள தேசியவாதக் குழுக்களையும் உணர்ச்சிக் கொந்தளிப்புக்கு உள்ளாக்கும் ஒன்றாக மாறியிருக்கிறது. மூன்றாவதாக, சுதந்திரதினக் கொண்டாட்டங்களில் போர்வெற்றிக்கு முக்கியமான ஒரு இடத்தைக் கொடுக்காமல் இருப்பதற்கு எடுத்த முடிவு.




பாராளுமன்றத்தில் மூன்று ஆசனங்களுடன் மாத்திரம் எதிர்க்கட்சிகளின் தரப்பில் இருந்த வேளையில் கூட, அநுர குமார திசநாயக்க பொதுமக்களுக்கு பிரச்சினைகளை விளக்கிக்கூறி போதனை செய்யும் பாத்திரத்தை கருத்தூன்றிய கவனத்துடன் வகித்து வந்தார். பாராளுமன்றத்தில் அவர் நன்கு ஆராய்ந்து எளிதில் விளங்கிக் கொள்ளக்கூடிய நீண்ட உரைகளை ஆற்றுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். இந்த நடைமுறையை அவர் ஜனாதிபதி பதவிக்கு வரும் வரை பினபற்றினார். அவரது கருத்துக்கள் சுலபமாக வாக்குகளை வென்றெடுக்கும் நோக்குடனானவையாக இல்லாமல் மக்களின் சிந்தனையை தரமுயர்த்தும் குறிக்கோளைக் கொணடவையாக இருப்பதை காணக்கூடியதாக இருக்கிறது.

இலங்கையில் அல்லது உலகின் வேறு எங்கும் தேசியவாத மற்றும் இனவாத உணர்வுகளைத் தூண்டி அந்த அலைமீது சவாரி செய்வதே வாக்குகளை சுலபமாகப் பெறுவதற்கான வழியாக இருக்கிறது. இன அடிப்படையில் குறுகிய நோக்குடனான அணிதிரட்டல்கள் குறுகிய கால தேர்தல் பலாபலன்களைக் கொண்டுவந்த போதிலும், நீண்டகால நோக்கில் தேசிய சேதத்தையே ஏற்படுத்தின என்பதை சுதந்திரத்துக்கு பின்னரான இலங்கையின் அரசியல் வரலாறு நிரூபிக்கிறது.

இந்த நிலைப்பாடுகளை எடுத்தமைக்காக ஜனாதிபதியை எதிர்க்கட்சிகளில் சில பிரவினரும் பொது மக்களில் ஒரு பகுதியினரும் கண்டனம் செய்துவருகிறார்கள். கூடுதலான தமிழ் வாக்குகளைப் பெறுவதற்காக அல்லது சிறுபான்மைச் சமூகங்களை சாந்தப்படுத்துவதற்காக ஜனாதிபதி இந்த நிலைப்பாடுகளை எடுப்பதாக அவர்கள் கூறுகின்றார்கள். மறுதலையான நிலைப்பாடுகளை எடுப்பவர்கள் சிக்கள வாக்குகளைப் பெறுவதற்காகவே அவ்வாறு செய்கிறார்கள் என்று மறுபக்கம் கூறமுடியும்.

தேசியவாத அணிதிரட்டலில் திளைக்கும் இந்த அரசியல்வாதிகள் ஜனாதிபதியின் கருத்துக்களை பெரும்பான்மைச் சமூகத்தைக் கைவிடுபவையாக காண்பிப்பதற்கு முயற்சித்திருக்கிறார்கள். ஜனாதிபதியின் செயற்பாடுகளை தேசிய நல்லிணக்கம் மற்றும் நீண்டகால அடிப்படையிலான தேசிய உறுதிப்பாட்டு கட்டமைப்பு என்ற பரந்த தளத்தில் நோக்க வேண்டியது அவசியமானதாகும்.

தெற்கில் இருந்து வடக்கிற்கு செல்கின்ற பௌத்த யாத்திரிகர்களைப் பற்றி குறிப்பிட்டபோது, ஜனாதிபதி திசநாயக்க நாகதீப மற்றும் கந்தரோடைபோன்ற பாரம்பரியமான தலங்களைப் பற்றி பேசவில்லை. அவரது கருத்து அண்மைக் காலத்தில் வடக்கில் காங்கேசன்துறை தையிட்டியிலும் கிழக்கில் வேறு இடங்களிலும் நிர்மாணிக்கப்பட்ட பௌத்த வணக்கத் தலங்களைப் பற்றியதாகவே இருந்தன.

காங்கேசன்துறையில் விகாரை உள்ளூர் பௌத்த சமூகத்தவரின் மதத் தேவைகளுக்காக நிர்மாணிக்கப்படவில்லை. அந்த பகுதியில் ஒரு பௌத்தர் கூட கிடையாது. முன்னர் தமிழ்க் குடிமக்களுக்கு சொந்தமாக இருந்து பிறகு உயர்பாதுகாப்பு வலயமாக இராணுவத்தினால் ஆக்கிரமிக்கப்பட்ட நிலத்திலேயே அந்த விகாரை நிர்மாணிக்கப்பட்டது. பாதுகாப்பு படைகளின் ஆதரவுடன் அது நிர்மாணிக்கப்பட்டதே சர்ச்சை மூளுவதற்கு முக்கிய காரணமாகும்.

காங்கேசன்துறையில் காலனித்துவ காலத்தில் இருந்து வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பௌத்த ஆலயம் ஒன்று இருந்தது என்று காரணம் கூறி அதன் அடிப்படையில் சுமார் ஒரு ஏக்கராக இருந்த நிலத்தை பதினான்கு ஏக்கர்களாக விஸ்தரிப்பதற்கு விகாரையின் அதிகாரிகள் முயற்சித்தமையினால்தான் சர்ச்சை தீவிரமடைந்தது. ஆனால், இந்த நில விஸ்தரிப்பு சுற்றிவர இருக்கும் மக்களையும் இடம்பெயரச் செய்து அதிகப் பெரும்பான்மையானவர்களாக இந்துக்களைக் கொண்ட ஒரு பகுதியில் நிரந்தரமான ஒரு பௌத்த பிரசன்னத்தை வலுப்படுத்திவிடும் என்று தமிழர்கள் அஞ்சுகிறார்கள்.

காங்கேசன்துறையில் உள்ள பல தமிழர்களைப் பொறுத்தவரை, ஒரு மதம் என்ற வகையில் பௌத்தத்தை அவர்கள் பிரச்சினையாக பார்க்கவில்லை. நிலத்தை ஆக்கிரமிப்பதற்கும் போரினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட பிராந்தியத்தில். குடிப்பரம்பலின் இனத்தன்மையை மாற்றியமைப்பதற்கும் மதத்தை ஒரு சாதனமாகப் பயன்படுத்துவதையே அவர்கள் எதிர்க்கிறார்கள்.

அதேபோன்று வடக்கிலும் கிழக்கிலும் வேறு பகுதிகளில் போர்க்காலத்தில் நிலத்தை ஆக்கிரமித்திருந்த இராணுவத்தினர் தங்களது முகாம்களில் விகாரைகளையும் வணக்கத்தலங்களையும் நிர்மாணித்தார்கள். இந்த இராணுவ முகாம்கள் இறுதியில் மூடப்படும்போது இந்த மதத் தலங்களின் எதிர்காலம் என்ன என்பதே கேள்வி.

தையிட்டி திஸ்ஸ விகாரரை இன்னொரு முக்கியமான மதத் தலமாக மாற்றும் நோக்குடன் தென்னிலங்கையில் இருந்து பெரும் எண்ணிக்கையில் பௌத்த யாத்திரிகர்களை அழைத்துச் செல்வதில் தீவிரம் காட்டுபவர்கள் இருக்கிறார்கள். இந்த நடவடிக்கைகள் மதப்பற்றுடனேயே மேற்கொள்ளப்படுவதாக பகிரங்கத்தில் காட்டப்படுகிறது. ஆனால், அதை உள்ளூர் மக்கள் ஆதிக்கத்தின் ஒரு வெளிப்பாடாகவே நோக்குகிறார்கள். பௌத்த யாத்திரிகர்களின் அத்தகைய ஒவ்வொரு விஜயத்தையும் எதிர்த்து தமிழர்கள் ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள். அதனால் மோதல் சூளக்கூடிய ஆபத்து இருக்கிறது.

பெரும் எண்ணிக்கையில் இடம்பெயர்ந்து அவலப்பட்ட அனுபவத்தையும் இராணுவ ஆக்கிரமிப்பு மற்றும் காணிகளை இழந்த அனுபவத்தையும் கொண்ட சமூகத்தைப் பொறுத்தவரை, சர்ச்சைக் குரிய நிலத்தில் பாதுகாப்பு படைகளின் உதவியுடன் அரசின் ஆதரவுடன் மதவழிபாட்டு தலங்களை நிர்மாணிக்கும் செயல் போர்க்கால அழிவின் நினைவுகளில் இருந்து பிரிக்கமுடியாததாகும். அத்தகைய ஆத்திரமூட்டும் செயற்பாடுகளை நல்லிணக்கத்தில் பற்றுறுதி கொண்ட ஒரு ஜனாதிபதியினால் வெறுமனே பார்த்துக் கொண்டு மௌனமாக இருக்க முடியாது. ஆனால், எவ்வளவுதான் அசௌகரியமானதாக இருந்தாலும், அது பெரும்பான்மைச் சமூகத்தின் சில பிரிவுகளுக்கு சவால் விடுப்பதாக அமையலாம்.

ஜனாதிபதி திசநாயக்கவின் சுதந்திர தின உரை தொடர்பான சர்ச்சையும் கடுமையான விவாதத்தை மூளவைத்திருக்கிறது. அந்த உரையில் ஜனாதிபதி விடுதலை புலிகளைத் தோற்கடித்து இராணுவத்தினர் கண்ட வெற்றியைப் பற்றி குறிப்பிடவில்லை என்பதுடன் படைவீரர்களை "போர் நாயகர்கள்" என்று வர்ணிக்கவுமில்லை. அவ்வாறு அவர் குறிப்பிடாததை பல சிங்கள தேசியவாதக் குழுக்கள் ஆயுதப்படைகளின் தியாகங்களை மலினப்படுத்தும் ஒரு முயற்சியாக நோக்குகின்றன.

சுதந்திரதினத்தை வெவ்வேறு சமூகங்கள் வெவ்வேறு கோணத்தில் நோக்குகின்றன என்பதே யதார்த்தம். வடக்கிலும் கிழக்கிலும் சுதந்திரதினத்தை கரிநாளாக அனுஷ்டித்து போராட்டம் நடத்தினார்கள்.

ஜனாதிபதியை பொறுத்தவரை, நாட்டின் சகல சமூகங்களுக்கும் சொந்தமானதாக சுதந்திரதினம் அனுஷ்டிக்கப்படுவதை உறுதிசெய்வதே குறிக்கோளாகும். சிறுபான்மைச் சமூகங்களை திருப்திப்படுத்துவதற்காகவும் தேர்தலில் அனுகூலமடைவதற்காகவும் இந்த நிலைப்பாடுகளை ஜனாதிபதி எடுக்கிறார் என்று நினைப்பது சரியானதல்ல. ஜனாதிபதி திசநாயக்க பதவிக்கு வந்து சுமார் ஒன்றரை வருடங்கள் கடந்திருக்கும் நிலையில், குறுகிய தேர்தல் பயன்களுக்காக அரசியல் ரீதியில் ஆபத்தான நிலைப்பாடுகளை எடுக்க வேண்டிய தேவை எதுவும் அவருக்கு இல்லை.

உண்மையிலேயே, ஜனாதிபதி எடுத்திருக்கும் நிலைப்பாடுகள் பலம்பொருந்திய தேசியவாத அரசியல் சக்திகளுடன் பொருத வேண்டிய நெருக்கடியை தோற்றுவிக்கக்கூடியவை. அந்த சக்திகள் அவருக்கு எதிராக குறிப்பிடத்தக்க அளவு அணிதிரட்டல்களைச் செய்யக்கூடியவை. தனது கருத்துக்கள் காரணமாக பெரும்பான்மைச் சமூகத்தின் ஆதரவை இழக்கக் கூடிய ஆபத்தும் இருக்கிறது. அதனால், தேர்தல்களை மனதிற் கொண்டு ஜனாதிபதி இவ்வாறு நடந்து கொள்ளவில்லை என்பதை இது காட்டுகிறது.

ஒரு காலத்தில் சமாதான சகவாழ்வு வாழ்ந்து பிறகு பல தசாப்தகால போரைக் கடந்துவந்த சமூகங்கள் மத்தியில் நம்பிக்கையை கட்டியெழுப்புவதில்தான் இலங்கையின் நீண்டகால அரசியல் உறுதிப்பாடும் பொருளாதார மீட்சியும் தங்கியிருக்கின்றன என்பதை ஜனாதிபதி திசநாயக்க அங்கீகரித்திருக்கிறார். அரசியல் ரீதியில் அனுகூலமானது என்பதை அல்ல, நாட்டுக்கு அவசியமானது எது என்பதைக் கூறுவதற்கு அக்கறை காட்டுவதில் தான் அரசியல் தலைமைத்துவம் அதன் சோதனையை எதிர்நோக்குகிறது.

ஜனாதிபதியின் அண்மைய கருத்துக்கள் அரிதான தேசிய தலைமைத்துவத்தை வெளிக்காட்டுவதுடன் பொது விவாதத்தை இனரீதியான போர் வெற்றிக் கொண்டாட்டத்தில் இருந்து சகல சமூகங்களையும் அரவணைத்து தேசத்தைக் கட்டியெழுப்பும் கோட்பாட்டுக்கு திசை திருப்பும் குறிக்கோளையும் கொண்டவையாகும். தேசிய வைபவங்கள் உள்நாட்டு மோதலில் ஒரு சமூகத்தின் வெற்றியையும் இன்னொரு சமூகத்தின் தோல்வியையும் பிரதிபலிப்பவையாக நோக்கப்படும் எண்ணத்தை வலுப்படுத்தவதாக அமைந்தால் நல்லிணக்கம் வேர்விட முடியாது ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமஷ்டியா? ஏக்கியராஜ்யவா? சந்தித்துப் பேசவும் விரும்பாத இரு'தலை'களின் பிரச்சனை!

பனங்காட்டான்





> எழுபத்தைந்து ஆண்டுகளுக்குமுன்னர் சமஷ்டி (கூட்டாட்சி) கொள்கையை பிரகடனம் செய்த இலங்கை தமிழரசுக் கட்சி ஏக்கியராஜ்யவுக்குள் (ஒற்றையாட்சி) சிக்கித் தடுமாறுகிறது: ஆரம்பத்தில் சமஷ்டியை ஏற்காதிருந்த அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸின் நிகழ்காலத் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தமதுதமிழ்ப் பேரவைக் கூடாக சமஷ்டியை முன்னிறுத்தி தீர்வைவலியுறுத்துகிறார். இவர்களை பொதுநிலைப்பாட்டில் ஒருமித்துக் கொண்டுவர சுவிஸ் தூதுவர் எடுத்த முயற்சியும் சரிவுகண்டுள்ளது.

தமிழர் தேசிய அரசியல் என்பதும் தமிழர் பிரச்சனைக்கான தீர்வு என்பதும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறும் கதைபோன்றது. தமிழ் மக்களின் அரசியல் தலைமை யார் என்பதை அறிய முடியாதிருக்கும் முட்டுமோதலே இதற்கான அடிப்படை.

அரசியல் தீர்வுகுறித்து தமிழர் தரப்பின் நிலைப்பாட்டை அண்மிப்பதற்கு சுவிஸ் தூதரகம் எடுத்த முயற்சி பற்றியும், இதற்காக தமிழர் தரப்பினரை ஒருமித்த நிலைப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கெனவும் இந்தமாதம் 19ம் திகதி சுவிஸ் தூதரகம் ஒரு சந்திப்பை ஏற்பாடு செய்திருந்தது.

நோர்வே எனும் சக்கடத்தார் ஏறிப் பயணம் செய்து சறுக்கிவிழுந்த குதிரையில் சுவிஸ் ஏறியுள்ளது. பெருமளவான ஈழத்தமிழருக்கு பிரச்சனையின்றி அடைக்கலம் கொடுத்ததாலும், ஈழத்தமிழ் ஊடகர்கள் அதிகமானோர் அடைக்கலம் பெற்று அங்குவாழ்வதாலும் சுவிஸின் இந்த முயற்சியை பலரும் நம்பிக்கையோடு விரும்பினர்.

சிலநாட்களுக்குமுன்னர் கொழும்பிலுள்ள சுவிஸ் தூதுவர் தாயகத்தில் பல்வேறு தரப்பினருடனும் சந்திப்பை மேற்கொண்டிருந்தார். தமது முயற்சிதமிழர் தரப்பில் ஒருமித்த இணக்கப்பாட்டை கொண்டுவரும் என்பதில் பூரண நம்பிக்கையில்லாத நிலையிலும் முயற்சித்துப் பார்ப்போமென சுவிஸ் எண்ணியிருக்கலாம்.

தமிழ் தேசியமக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சில வாரங்களுக்கு முன்னர் வெளிநாடுகளுக்கு பயணம் மேற்கொண்டு புலம்பெயர் தமிழர்களுடன் சந்திப்பை மேற்கொண்டிருந்தார். இதன் பின்னணியில் சுவிஸ் இருந்ததாக பரவலாகப் பேசப்பட்டது. இதேமாதிரியான பயணத்துக்கு தமிழரசுக் கட்சிக்கும் சுவிஸ் அழைப்பு விடுத்ததாகவும் அதனைஅவர்கள் நிராகரித்ததாகவும் நம்பகமானதகவல் உண்டு.

அனைவரையும் ஒன்றாக சந்திப்பதற்கு சுவிஸ் எடுத்த முயற்சி தமிழர் பிரச்சனை தீர்வுக்கானது அல்ல. அதற்குரிய பொது நிலைப்பாட்டை எட்டுவதற்கான முன்னெடுப்பு மட்டுமே. இதற்கான அடிப்படைக் காரணமாக அமைந்தது எது என்று பார்க்கவேண்டும்.

அண்மைய அனைத்துத் தேர்தல்களிலும் தேசியமக்கள் சக்தியின் தலைவரான அநுரகுமர ஒருவிடயத்தை மீண்டும் மீண்டும் சொல்லியிருந்தார். மைத்திரி - ரணில் நல்லாட்சிக் காலத்தில் புதிய அரசியலமைப்பு ஒன்றை உருவாக்கும் செயற்பாடு அந்த அரசுடன் தேநிலவைக் கழித்த தமிழரசுக் கட்சியின் முழுமையான பங்களிப்புடன் இடம்பெற்றது. தாங்கள் ஆட்சிக்கு வந்ததும் அதனைத் தொடர விரும்புவதாகக் குறிப்பிட்ட அநுரகுமர, நல்லாட்சிக் காலத்தில் புதிய அரசியலமைப்பு விடயத்தில் தீவிரமாகப் பங்காற்றிய சுமந்திரனின் பங்கைதாங்கள் பயன்படுத்தப் போவதாகவும் கூறியிருந்தார்.

அவ்வேளையில் பல ஊடகங்கள் முன்னைய ஒளிப்படம் ஒன்றை மீள்பிரசுரம் செய்துதங்கள் வாசகர்களுக்கு ஒருவிடயத்தை ஞாபகப்படுத்தின. யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஜே.வி.பி.யினரின் (அநுரகுமரவின் தாய்க்கட்சி) மேதின ஊர்வலத்தில் சுமந்திரன் செஞ்சட்டை அணிந்தவாறு முன்வரிசையில் அநுரகுமரவோடு சேர்ந்துசென்றஅந்தக் காட்சியே அந்த ஒளிப்படம். இதனைப் பார்த்தவர்கள் அநுரகுமரவுக்கும் சுமந்திரனுக்கும் ஏற்கனவே இருந்த தொடர்பை நினைத்துக் கொண்டார்கள். தங்களின் சட்டமாஅதிபர்சுமந்திரன் என்றுரணில் விக்கிரமசிங்க கூறியதுபோல, அநுரகுமரவுக்கும் இவரே சட்ட ஆலோசகர் என பலரையும் எண்ண வைத்தது சம்பந்தப்பட்ட ஒளிப்படம்.

அநுரகுமர தேர்தல் காலங்களில் சொன்ன புதிய அரசியலமைப்பு இன்னும் வரவில்லை. சி.வி.கே.சிவஞானம் தலைமையில் தமிழரசுக் கட்சியினர் கடந்த நவம்பர் 19ம் திகதிஅநுரகுமரவை சந்தித்துப் பேசியபோது அனைத்து மக்களினதும் பிரச்சனைகளுக்கு புதிய அரசியலமைப்பினூடாக தீர்வுகாணப்படுமென மீண்டும் கூறப்பட்டது. மைத்திரி - ரணில் காலத்தில் தயாரிக்கப்பட்ட புதிய அரசியலமைப்பு ஏக்கியராஜ்ய (ஒற்றையாட்சி) முறைமை. ஆனால் தமிழர் தொடர்ந்து கேட்பது சமஷ்டி (கூட்டாட்சி) முறைமை என்பது இப்போது முனைப்புப் பெற்றுள்ளது.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் ஜி.ஜி.பொன்னம்பலம் தலைமையில் ஆரம்பகாலத்தில் சமஷ்டியைஏற்கவில்லை. அறுபத்தைந்து ஆண்டுகளுக்குமுன்னர் காங்கிரஸ் கட்சியிலிருந்து பிரிந்து இலங்கை தமிழரசுக் கட்சியை உருவாக்கிய எஸ்.ஜே.வி.செல்வநாயகம் தலைமையிலானவர்கள் சமஷ்டியையே தங்கள் கொள்கையாக பிரகடனம் செய்தனர். 1970களில் இரண்டு கட்சிகளின் தலைமை வேட்பாளர்களும் தோல்வி கண்டதால் தமிழர் ஐக்கிய முன்னணி தனிநாட்டுக் கோரிக்கையுடன் உருவாக்கப்பட்டது. 1977 தேர்தலில் இவர்களின் தனிநாட்டுக் கோரிக்கையில் நம்பிக்கைவைத்த இளைஞர்கள் இவர்கள் பின்னால் சென்று அதீத ஆசனங்களைப் பெற்றுக்கொடுத்தனர். ஆனால் இளைஞர்கள் ஏமாற்றப்பட்டனர்.

தலைவர்களுக்கு தங்கள் இரத்தத்தால் திலகமிட்ட இளைஞர்கள் தங்கள் இரத்தத்தை விடுதலைக்கு விதையாகக் கொடுத்து தனிநாட்டுக் கோரிக்கையை முன்னெடுத்தனர். இவர்களே தமிழரசு, தமிழ் காங்கிரஸ், முன்னாள் ஆயுதப் போராளிகள் அனைவரையும் ஒன்றிணைத்து கூட்டமைப்பை உருவாக்கினர். முள்ளிவாய்க்காலில் ஆயுதங்கள் மௌனிக்கப்பட்டதையடுத்து தமிழர் ஒற்றுமை என்பது தலைகீழானது.

இதுவே சிங்கள தேசத்துக்கு தமிழர் மீதுஅடக்கு முறையைவேகப்படுத்தவும், ஆட்சிமுறையிலிருந்து அகற்றவும் வாய்ப்பானது. இதனால் ஏற்பட்ட தேக்கநிலை இன்றுவரை தொடர்கிறது. தமிழ்த் தேசிய கட்சிகள் தேர்தல்கள் வரும்போது பதவி மோகத்தில் இணக்கம் காண்பதும் பின்னர் பிணக்குப்படுவதும் வரலாறாகி விட்டது. அநுரகுமர அணியின் தமிழர் பிரதேச தேர்தல்களின் வெற்றி இதற்கு உறுதியானசாட்சி.

சுமந்திரனை வடமாகாண முதலமைச்சர் ஆக்கும் இலக்குடன், கூட்டமைப்பிலிருந்து அகற்றப்பட்டு புதிதாக ஜனநாயகதமிழ் தேசிய கூட்டணியை உருவாக்கியவர்களை தமிழரசுக் கட்சியுடன் இணைக்க அண்மையில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது. இதற்குமுன்னர், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையில் உருவாகியிருந்ததமிழ் மக்கள் பேரவையில் இணைந்திருந்த ஜனநாயகக் கூட்டணியினர், மாகாணசபையில் சிலஆசனங்களைப் பெறும் ஆசையில் தமிழரசோடு இணைய முனைந்தனர். இவ்வேளையில் மாகாண சபைக்கான தேர்தல் நடைபெறாது என்பது தெரியவந்ததால் அந்த இணைப்பு முறிந்துவிட்டது. புளொட் தலைவர் சித்தார்த்தன் வீட்டில் இடம்பெற்ற இரு தரப்பினரதும் சந்திப்பின் பின்னரே இந்தமுறிவு ஏற்பட்டதாகத் தெரிகிறது. (இன்னொரு வேளையில் இதுபற்றி விபரமாகப் பார்க்கலாம்)

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை ஆரம்பத்திலிருந்து எதிர்த்துப் போராடிபல இழப்புகளைச் சந்தித்ததோடு 13ம் திருத்தத்தையும் மாகாண சபை முறைமையையும் மறுத்துவந்த ஜே.வி.பி.யினர், ஜனநாயக வழியில் கிடைத்தஆட்சியைப் பயன்படுத்தி புதியஅரசியலமைப்பில் 13ம் திருத்தத்தையே இல்லாது ஒழிப்பர் என்பது இப்போது தெரிய ஆரம்பித்துள்ளது.

சில மாதங்களுக்கு முன்னர் சீனப் பயணத்தை முடித்துக் கொண்டு நாடுதிரும்பிய ஜே.வி.பி.யின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வாஊடகசந்திப்பொன்றில், புதிதாக ஓர் அரசாங்கம் ஆட்சிக்குவந்தால் தேர்தலில் வழங்கிய வாக்குறுதிகளை அதுநிறைவேற்றபத்துப் பதினைந்து வருடங்கள் தேவையெனசீனத் தலைவர்கள் தம்மிடம் தெரிவித்தனர் என்பதை நினைவிற் கொண்டால், அடுத்த பொதுத்தேர்தல் எப்போது என்பதும், புதிய அரசியலமைப்பு எவ்வாறான துஎன்பதும் கற்பனைக்கு அப்பாற்பட்டது.

இது ஒருபுறம் போக, தமிழர் அரசியல் நிலைப்பாட்டுக்கு மீண்டும் வருவோம். சுவிஸ் தூதுவர் தமிழர் தரப்பினருடன் மேற்கொள்ள இருந்தசந்திப்பு ஒத்திவைக்கப்பட்டதாகசொல்லப்படுகிறது. தமிழரசுக் கட்சியின் தனிப்போக்குதான் இதற்குக் காரணமெனதமிழ்த் தேசியமக்கள் முன்னணித் தரப்பினர் கூறுகின்றனர். இதனாற்தான் போலும் தங்களின் தமிழ்த் தேசிய பேரவையின் சார்பில் ஒருமுக்கிய கூட்டத்தை இன்று ஞாயிற்றுக்கிழமை நடத்தக ஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஏற்பாடு செய்திருக்கின்றார். சுமஷ்டியை அனைவரும் ஒன்றாகவலியுறுத்த வேண்டுமென்பதே இக்கூட்டத்தின் அடிப்படை. தமிழரசுக் கட்சிக்கும் இவரால் அழைப்பு விடுக்கப்பட்டது.

'இக்கூட்டத்தில் கலந்துகொண்டு பொது இணக்கப்பாட்டை எட்டுவதற்கு தங்களது ஒத்துழைப்பைக் கோருவதுடன், பெறுமதிமிக்க பங்களிப்பை வழங்கக்கூடிய உறுப்பினர்களையும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறோம்" என்று விநயமாக இந்த அழைப்பின் வாசகம் அமைந்திருந்தது. பெறுமதிமிக்க பங்களிப்பை தமிழரசாரிடமிருந்து கஜேந்திரகுமார் நிச்சயமாக எதிர்பார்த்திருக்க மாட்டார். அதுபோலவே அவரது அழைப்புக்கான பதிலும் வந்தது.

கூட்டத்தில் பங்கேற்கமாட்டோம் என்று கூறாது, பங்கேற்கும் சாத்தியமில்லை என்றுகட்சியின் பதில் தலைவர் சிவஞானம் பதிலளித்துள்ளார். சுட்டமண்ணும் பச்சைமண்ணும் ஒருபோதுமே ஒட்டாது என்பதற்கு இவர்களே நல்ல உதாரணம்.

இனம் அழிந்தாலென்ன, மண் பறிபோனாலென்ன எங்களுக்குள் யார் தலைவர் என்கின்றபோட்டி இருக்கும் வரை, இவர்கள் பார்வை இனப் பிரச்சனை தீர்வுப் பக்கம் காணப்படவில்லை. இவர்களிடம் இப்போதுமுனைப்புப் பெற்றிருப்பது சமஷ்டியா, ஏக்கியராஜ்யவா என்பதுவே.

அநுரகுமரஅரசாங்கத்தின் தெரிவு என்ன? எப்போது தெரியவரும்? ஒன்று மட்டும் நிச்சயம். புதிய அரசியலமைப்பு வருமாயின் சமஷ்டி என்ற பெயர் அதில் இடம்பெறுவதற்கான சாத்தியமில்லை. சிங்களதேசம் ஒருபோதும் இதற்கு அனுமதிக்கப் போவதில்லை. தமிழ்த் தலைவர்கள் தமிழரின் தேசிய பிரச்சனைத் தீர்வுக்கு எப்போது ஒன்றுபடுவார்கள்? ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இல்லாத ஊருக்கு வழிகாட்டும் முன்னணி!

நல்லூரான்

## தமிழ்த் தேசியப் பேரவை
## TAMIL NATIONAL COUNCIL

Add: No: 05, Sabapathy Road, Kokkuvil East, Jaffna. முகவரி: இல.05 சபாபதி வீதி, கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம்

08.02.2026

மதிப்பிற்குரிய
திரு.C.V.K.சிவஞானம்
தலைவர்
இலங்கைத் தமிழரசுக் கட்சி

**தமிழர்களது இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அரசு கொண்டுவரவுள்ள ஏகிய இராஜ்ய வரைபை நிராகரித்து, அதற்குப் பதிலாக கூட்டாட்சி (சமஸ்டி) தீர்வை ஒரேகுரலில் முன்வைப்பது தொடர்பான கலந்துரையாடல்.**

இனப்பிரச்சினைக்கான நிலையான அரசியல் தீர்வாக, தமிழ் மக்கள் தேர்தல்களில் தொடர்ந்து கூட்டாட்சி(சமஸ்டி)த் தீர்வை வலியுறுத்தி ஆணை வழங்கி வந்துள்ளனர். இருப்பினும், அக்கோரிக்கையினைப் புறக்கணிக்கும் வகையில், கடந்த 2015 – 2019 காலப்பகுதியில் பதவி வகித்த அரசாங்கத்தினால் தயாரிக்கப்பட்ட ஏகிய இராஜ்ய (ஒற்றையாட்சி அரசு) அரசியல் யாப்பு வரைபை நாட்டிற்கான புதிய அரசியல் யாப்பாக கொண்டு வந்து நிறைவேற்றுவோம் என சனாதிபதி அனுரகுமார திசாநாயக்கா அவர்கள் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்திருந்தார். அதன் பின்னரும் சனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட நாட்டின் உயர் தலைவர்கள் பல முக்கிய சந்தர்ப்பங்களில் குறித்த அரசியல் யாப்பை நிறைவேற்றும் செயற்பாடுகள் முன்னோக்கிச் சென்று கொண்டிருப்பதாக உறுதிப்படுத்தியுள்ளனர். அதனைச் செயல்படுத்துவதற்கான கலந்துரையாடல்களும் பல கட்டங்களாக இடம்பெற்று வருகின்றன. தமிழர்கள் தேர்தல்களில் வழங்கிய அரசியல் ஆணைக்கு முரணாக கொண்டுவரப்படவுள்ள ஏகிய இராஜ்ய யாப்பு வரைபை நிராகரித்து அதற்குப் பதிலாக, தமிழ்த் தேசம் அங்கீகரிக்கப்பட்ட, தமிழ்த் தேசத்தின் தனித்துவமான இறைமையின் அடிப்படையில், சுயநிர்ணய உரிமையை அனுபவிக்கக்கூடிய கூட்டாட்சி(சமஸ்டி) அரசியல் யாப்பு உருவாக்கப்படுவதையும் உறுதிப்படுத்தும் நோக்கில், சிறிலங்கா அரசின் மீது உள்நாட்டு மற்றும் சர்வதேச மட்டங்களில் அழுத்தங்களை ஏற்படுத்த வேண்டியது மிகவும் அவசியமாகியுள்ளது.

இது தொடர்பாக அரசியல் தரப்புகளும் சிவில் சமூக அமைப்புகளும் இணைந்து பொது இணக்கப்பாட்டிற்கு வருதல் அவசியமாகியுள்ளது. இம்முக்கிய முயற்சியில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பங்களிப்பு இன்றியமையாதது எனக் கருதுகின்றோம். எனவே இக்கலந்துரையாடலில் கலந்து கொண்டு பொது இணக்கப்பாட்டினை ஏற்படுத்துவதற்கு தங்களது ஒத்துழைப்பைக் கோருவதுடன், பெறுமதிமிக்க பங்களிப்பினை வழங்குமாறும், மேலும் தங்களது அமைப்பிலிருந்து இம்முயற்சிக்கு ஆக்கபூர்வமான பங்களிப்பினை வழங்கக்கூடிய உறுப்பினர்களையும் கலந்து கொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

திகதி: 15.02.2026 ஞாயிற்றுக்கிழமை நேரம்: மு.ப 10.00 மணி
இடம்: இளங்கலைஞர் மண்டபம், சட்டநாதர் கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்

நன்றி

கஜேந்திரகுமார் பொன்னம்பலம்
பாராளுமன்ற உறுப்பினர்
தலைவர் - தமிழ்த் தேசியப் பேரவை
தலைவர் - தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி
பொதுச் செயலாளர் - அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்
தொலைபேசி எண்: 0094777301021 மின்னஞ்சல்: gajenponnambalam@yahoo.com

**உண்மையிலேயே முன்னணியினர் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகள் மீது அக்கறையுடையவர்களாக இருந்தால், தமிழ் அரசை எப்படி அணைத்துச்செல்வது என்பது பற்றியே சிந்தித்திருக்க வேண்டும். அதைவிடுத்து சிறுபிள்ளைத்தனமாக அரசியல் செய்வது அழகல்ல. இல்லாத ஊருக்கு வழிகாட்டுவதை கைவிடவேண்டும்.**

“இனப்பிரச்சினைக்கான நிலையான அரசியல் தீர்வாக, தமிழ் மக்கள் தேர்தல்களில் தொடர்ந்து கூட்டாட்சி (சமஸ்டி)த் தீர்வை வலியுறுத்தி ஆணை வழங்கிவந்துள்ளனர். இருப்பினும், அக்கோரிக்கையினைப் புறக்கணிக்கும் வகையில், கடந்த 2015 - 2019 காலப்பகுதியில் பதவிவகித்த அரசாங்கத்தினால் தயாரிக்கப்பட்டஏகிய இராஜ்ய (ஒற்றையாட்சிஅரசு) அரசியல் யாப்பு வரைபை நாட்டிற்கான புதிய அரசியல் யாப்பாக கொண்டுவந்து நிறைவேற்றுவோம் என ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கா அவர்கள் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்திருந்தார். அதன் பின்னரும் ஜனாதிபதி. பிரதமர் உள்ளிட்ட நாட்டின் உயர் தலைவர்கள் பல முக்கிய சந்தர்ப்பங்களில் குறித்த அரசியல் யாப்பை நிறைவேற்றும் செயற்பாடுகள் முன்னோக்கிச் சென்று கொண்டிருப்பதாக உறுதிப்படுத்தியுள்ளனர். அதனைச் செயல்படுத்துவதற்கான கலந்துரையாடல்களும் பலகட்டங்களாக இடம் பெற்று வருகின்றன. தமிழர்கள் தேர்தல்களில் வழங்கிய அரசியல் ஆணைக்கு முரணாககொண்டுவரப்படவுள்ளஏகிய இராஜ்ய யாப்பு வரைபை நிராகரித்து அதற்குப் பதிலாக,தமிழ்த் தேசம் அங்கீகரிக்கப்பட்ட, தமிழ்த் தேசத்தின் தனித்துவமான இறைமையின் அடிப்படையில், சுயநிர்ணய உரிமையை அனுபவிக்கக் கூடிய கூட்டாட்சி(சமஸ்டி) அரசியல் யாப்பு உருவாக்கப்படுவதையும் உறுதிப்படுத்தும் நோக்கில். சிறீலங்கா அரசின் மீது உள்நாட்டு மற்றும் சர்வதேச மட்டங்களில் அழுத்தங்களை ஏற்படுத்த வேண்டியது மிகவும் அவசியமாகியுள்ளது.”

மேலேயுள்ளபந்தி,தமிழ் தேசியப் பேரவை இன்று யாழ்ப்பாணத்தில் நடாத்தும் கலந்துரையாடல் தொடர்பாக அனுப்பப்பட்டகடித்தில் உள்ள இரண்டாவது பந்தி.

மேலேசொல்லப்பட்டவிடயம் குறித்து கலந்துரையாடுவதற்காக அரசியல் கட்சிகள், சமூக அமைப்புக்கள், சில முக்கிய தனிப்பட்ட நபர்களுக்கு இந்தக் கடிதம் அனுப்பப்பட்டிருக்கின்றது. இதில் சொல்லப்பட்டிருப்பது போல குறித்த 2015 - 2019ல் ஆட்சியிலிருந்த நல்லாட்சி அரசு என்று சொல்லப்பட்ட மைத்திரி- ரணில் அரசுகாலத்தில் தயாரிக்கப்பட்ட அரசியல் யாப்பு வரைபை புதிய அரசியல் யாப்பாக கொண்டுவந்து நிறைவேற்றுவோம் என்று தற்போதைய அரசாங்கம் தனது தேர்தல் வாக்குறுதியில் சொல்லவில்லை என்பதை முதலில் நாம் புரிந்துகொள்ளவேண்டும். அந்த வரைபை அடிப்படையாகக்கொண்டு, அதனை பூரணப்படுத்தி, சகலசமூகங்களும் ஏற்றுக்கொள்ளும் வகையில் தயாரித்து அதனை கொண்டுவருவோம் என்றுதான் தேசிய மக்கள் சக்தி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறியதே தவிர, அதனை அப்படியேகொண்டு வருவோம் என்றுசொல்லவில்லை. அதனை தமிழ் தேசியப் பேரவை தவறாக புரிந்து கொண்டதாஅல்லதுவேண்டும் என்றே இவ்வாறுகற்பிதம் கற்பிக்கின்றதா என்பது தெரியவில்லை.


இந்த அரசாங்கம் அந்த வரைபை அப்படியே கொண்டுவரப்போவது போலவும், அதனை தமிழ் மக்கள் நிராகரிக்க வேண்டும் என்பது போலவும் திரும்பத்திரும்ப முன்னணியும் பேரவையும் கூறிவருவது, ஒரு பொய்யை தொடர்ந்து கூறினால் அது உண்மையாகிவிடும் என்று அவர்கள் கருதுவதுபோலத் தெரிகின்றது.

அந்தக் கடிதத்தில் சொல்லப்பட்டிருப்பதுபோல “இனப்பிரச்சினைக்கான நிலையான அரசியல் தீர்வாக, தமிழ் மக்கள் தேர்தல்களில் தொடர்ந்து கூட்டாட்சி (சமஸ்டி)த் தீர்வை வலியுறுத்தி ஆணை வழங்கிவந்துள்ளனர்.” என்றால், எதற்காக இப்படியொரு கலந்துரையாடல் நடாத்தி அதனுடாக மீண்டும் கூட்டாட்சிதீர்வைவலியுறுத்தவேண்டும் என்ற கேள்வி எழுவதையும் தவிர்க்கமுடியவில்லை.

இந்தநாட்டில் இதற்கு முன்னரும் இரண்டு அரசியலமைப்பை ஆட்சியிலிருந்தவர்கள் கொண்டுவந்திருக்கின்றார்கள்.சிறிமாவோ பண்டாரநாயக்காஆட்சியில் குடியரசு அரசியலமைப்பு கொண்டுவரப்பட்டபோது, அது தமிழ் மக்களின் எந்தக் கோரிக்கையையும் கருத்தில் எடுக்கவில்லை. அதனை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதையும், அதனைஅவர்கள் நிராகரிக்கிறார்கள் என்பதையும் இந்தநாட்டுக்கும் உலகுக்கும் அழுத்திச் சொல்வதற்காகவே தந்தை செல்வா தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை ராஜனாமாச் செய்து இடைத்தேர்தல் ஒன்றின் மூலம் மக்கள் ஆணையைப்பெற்று நிரூபித்ததார்.

இதற்கு பின்னர் ஜே.ஆர். ஜெயவர்த்தனாவும் தமிழ் மக்களின் விருப்பத்தைக் கேட்காமலே இரண்டாவது அரசியலமைப்பை உருவாக்கினார். இதுவரை தமிழ் மக்களின் விருப்பம் எதுவுமே பெறப்பட்டு அரசியலமைப்பு உருவாக்கப்படவில்லை. மாறாக பல தடவைகள் புதிய அரசியலமைப்பு தயாரிப்பதற்காக தமிழ் மக்களிடம் மாத்திரமன்றி நாட்டுமக்களிடமும் கருத்துக்கள் கேட்கப்பட்டன. ஆனால் அவை எதுவுமே நடைமுறையில் வரவில்லை.

நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் பாராளுமன்றம் அரசியலமைப்பு பேரவையாக மாற்றப்பட்டு புதியஅரசியல் அமைப்பை தயாரிக்கும் பணியை செய்திருந்தது. அந்த முயற்சியில் முன்னின்று உழைத்தவர்கள் தமிழ் அரசின் தற்போதையபதில் பொதுச்செயலாளர் எம்.ஏ. சுமந்திரனும், சமசமாஜ கட்சியின் நீண்டகால தோழரான கலாநிதி ஜெயம்பதிவிக்கிரமரட்னவும் தான்.அவர்களின் முயற்சியாலேயே அந்த அரசியல் யாப்புநகல் தயாரிக்கப்பட்டு இடைக்கால அறிக்கை வெளியிடப்பட்டது.




தற்போது முன்னணியினர் கூறுகின்ற அந்த “எகியராஜ்ய” வரைபு என்பது ஒற்றையாட்சியைக் குறிப்பது என்றும், அதனைஏற்றுக் கொள்ளக்கூடாது என்பதுமே முன்னணியினர் முன்வைக்கும் கோரிக்கை. “எகிய ராஜ்ய” என்பது ஒற்றையாட்சி அல்ல, அது “ஒருமித்த நாடு” என்பதே அதன் தமிழாக்கம் என்று சுமந்திரன் திரும்பத்திருப்ப கூறினாலும்,அது எதைக்குறிக்கின்றது என்ற வாதத்தை விட, அந்த அரசியலமைப்பின் உள்ளடக்கம் எப்படி இருக்கின்றது என்பதை பற்றி விவாதிக்க முன்னணியினர் தயாராக இருக்கிறார்களா என்பது தெரியவில்லை.

ஆனால், இந்தகட்டுரையாளர் சொல்லவருவது, இந்தநாட்டில் புதிதாக ஒரு அரசியலமைப்பு கொண்டுவரப்படுமானால் அது வெறுமனே பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படுவதன் மூலம் மட்டும் கொண்டுவந்து விடமுடியாது. அதற்காக சர்வஜன வாக்கெடுப்பு ஒன்று நடத்தப்பட்டே ஆகவேண்டும். அப்படியொரு நிலை வருகின்றபோது, இந்த நாட்டில் எண்பது வீதமான சிங்கள மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு அரசியலமைப்பு தயாரித்தால் மாத்திரமே அதனை நடைமுறைப்படுத்த முடியும். இதனைக் கருத்தில்கொண்டுதான் நல்லாட்சி அரசின் காலத்தில் வரைபை தயாரித்தவர்கள் மிக அவதானமாக சொல்லாடல்களை பயன்படுத்தி அதனைத் தயாரித்திருந்தார்கள்.அவ்வாறு தயாரிக்கப்பட்ட வரைபைக் கூட அமுல்படுத்துவதற்கு அப்போதைய அரசாங்கத்தினால் முடிந்திருக்கவில்லை என்பதையும் நாம் கவனிக்கவேண்டும்.

தேசியமக்கள் சக்திஅரசாங்கம் தனது தேர்தல் வாக்குறுதியில் கூறப்பட்டவாறு புதிய அரசியலமைப்பை (அனைத்துமக்களும் ஏற்றுக்கொள்ளுகின்ற) கொண்டு வந்தால் கூட, அது பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும்வரை எவருக்கும் அது பற்றி தெரியவரும் என்று நம்புவது முட்டாள்தனமானது.

ஒரு நாட்டுக்கு அரசியலமைப்பு சட்டம் என்பது இதயம் போன்றது என்றால், அதன் கல்விக்கொள்கை மூளை போன்றது என்று சொல்வார்கள். அத்தகைய மூளை போன்ற கல்விக்கொள்கையை இந்தநாட்டில் அறிமுகம் செய்தபோதே அரசாங்கம் தமது கல்வியாளர்களைக் கொண்டு தயாரித்துவிட்டே அதனை நாட்டுக்கு அறிமுகம் செய்தது. அதே போல அரசியலமைப்பு ஒன்றை கொண்டுவருவதென்றாலும் அதேநடைமுறையையே பின்பற்றலாம் என்றே நம்பப்படுகின்றது. அப்படி ஒரு நிலைவந்தால், கொண்டுவரப்படும் அந்த வரைபு ஏற்கனவே கொண்டுவரப்பட்டது போல அல்லாமல், தமிழ் மக்களின் கருத்துக்களை உள்வாங்கியதாக இருக்கும் என்று முன்னணியினர் நம்புவது எந்த நம்பிக்கையிலானது என்பது தெரியவில்லை.

அதைவிட முக்கியமானது, இது போன்ற விடயங்களைஆராய்வதற்காக பகிரங்க கலந்துரையாடல் ஒன்றை நடாத்துவது எத்தகைய புத்திசாலித்தனமானது என்பது தெரியவில்லை. இப்படியொரு பகிரங்க கலந்துரையாடல் என்பது எல்லோரும் சேர்ந்து கூக்குரல் இட்டு சபையை நகைப்புக்கிடமாக்குவதற்கு உதவுமே தவிர உருப்படியான எந்த விடயத்தையும் அதுசெய்யப்போவதில்லை. உதாரணமாக சொல்லப்போனால், இன்னுமொரு யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டம் போலத்தான் நடந்துமுடியும். அதிகம் ஏன்?, தமிழ் தேசியப் பேரவையில் அங்கம் வகிக்கும் சிவாஜிலிங்கம் தலைமையிலான தமிழ் தேசியக் கட்சிதனது கொள்கை என்ன என்பதை பல தடவைகள் தெளிவாகக் கூறிவிட்டது. தமிழ் மக்கள் எத்தகைய தீர்வைகோரி நிற்கிறார்கள் என்பதற்கு தமிழ் மக்கள் மத்தியில் பொது வாக்கெடுப்பை நடாத்தவேண்டும் என்கின்றது அது.

கொண்டுவரமுடியாத ஒரு அரசியலமைப்பிற்காக ஐந்துஆண்டுகள் சம்பந்தன் தலைமையலான தமிழ் தேசிக் கூட்டமைப்பு காலத்தை விரையம் செய்தது

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறுத்திவைக்கப்பட்ட சந்திப்பு?



நிலாந்தன்

கொழும்பில் உள்ள சுவிற்சலாந்து தூதரகம் வரும் 19ஆம் தமிழ் கட்சிகளுக்கு இடையில் ஒருசந்திப்பை ஒழுங்குப்படுத்தியிருந்தது. இனப்பிரச்சினைக்கான தீர்வில் ஒருமித்த நிலைப்பாட்டை எட்டுவது இந்த அழைப்பின் நோக்கம் என்று கருதப்படுகிறது. எனினும் அந்தச் சந்திப்பு இடம்பெறாது என்று தெரியவருகிறது. அதற்குகாரணம், சுமந்திரன் அதைவிரும்பவில்லை என்ற பொருள்பட சிங்கள ஊடகமானவு **TV.Lk** தகவல் வெளியிட்டுள்ளது. 19ஆம் தேதி நடக்கவிருந்த சந்திப்பு தொடர்பான செய்திகள் ஊடகங்களுக்கு கசிந்தமை தொடர்பில் சுவிற்சலாந்து தூதரகம் மகிழ்ச்சியாக இல்லை என்று தெரிகிறது. கட்சிகளுடைய வேண்டுகோளின் அடிப்படையில்தான் தூதரகம் மேற்படி சந்திப்புக்கு ஏற்பாடு செய்தது என்றும் தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.

அதே சமயம், மேற்சொன்ன சந்திப்பு நடப்பதற்கு மூன்று நாட்களுக்கு முன்பு அதாவது இன்று 15ஆம் திகதி குடிமக்கள் சமூகங்களையும் கட்சிகளையும் ஒரு சந்திப்புக்கு வருமாறு தமிழ்த் தேசியப் பேரவை அழைப்பு விடுத்திருந்தது. “எகிய ராஜ்ய” என்று அழைக்கப்படும் இடைக்கால வரைபை அரசாங்கம் இனப்பிரச்சினைக்கான ஒரு தீர்ப்பாக முன்வைக்கக் கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதினால், அதனை எதிர்த்து தமிழ்த் தரப்பு ஒரே குரலில் சமஷ்டித் தீர்வை அதாவது கூட்டாட்சித் தீர்வை வலியுறுத்த வேண்டும் என்றும், அதுதொடர்பான ஒருபொது நிலைப்பாட்டை எட்டுவதற்காகவே அச்சந்திப்பு ஒழுங்கு செய்யப்பட்டதாகவும் அந்த அழைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த 15ஆம் திகதி, அதாவது இன்றைய சந்திப்பு இடம்பெறுவதும் சுவிற்சலாந்து தூதரகத்தின் சந்திப்பை தமிழரசுக் கட்சிஆர்வத்தோடு அணுகாமைக்கு ஒருகாரணம் என்று தெரிகிறது.

இனப்பிரச்சினைக்கான தீர்வுதொடர்பில் சுவிற்சலாந்து அண்மை ஆண்டுகளாக அதிகம் ஆர்வம் காட்டிவருகிறது. இலங்கைக்கும் அந்தநாட்டுக்கும் இடையிலான ராஜிய தொடர்புகளின் 70ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இவ்வாறான நல்லிணக்க முயற்சிகளில் தாம் ஈடுபடுவதாக தூதரகவட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஏற்கனவே நாலாம்கட்ட ஈழப் போருக்கு முன்னரான நோர்வேயின் சமாதான முயற்சிகள் தோல்வியடைந்த பின்னணியில், இப்பொழுது சுவிற்சலாந்து, தென்னாபிரிக்கா போன்றநாடுகள் புதிய முயற்சிகளை ஆரம்பித்திருப்பதாக அரசியல் வட்டாரங்களில் நம்பப்படுகிறது.

சுவிற்சலாந்து இதற்கு முன்னரும் இமாலயப் பிரகடனத்தின் பின்னணியில் நின்றது. மகாசங்கத்துக்கும் சிலபுலம் பெயர்ந்த அமைப்புகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளின் விளைவாக அந்தபிரகடனம் உருவாக்கப்பட்டது. அதுஅடுத்தடுத்த கட்டத்துக்கு வளராத ஒருமுயற்சி.

அதன்பின் சுவிற்சலாந்து கடந்த ஆண்டு அரசாங்கமும் உட்பட தமிழ் கட்சிகளை தனது நாட்டுக்கு அழைத்து இனப்பிரச்சினைக்கான இறுதித் தீர்வு தொடர்பில் உரையாடவைத்தது. அந்த உரையாடல்களின் அடுத்தடுத்த கட்டமாக கொழும்பில் உள்ளசுவிஸ் தூதரகம் தமிழ் கட்சிகளை அழைத்து உரையாடியது. இந்த முயற்சிகளின் ஆகப்பிந்திய நகர்வாக இம்மாதம் 19ஆம் திகதி நடக்கவிருந்த சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டது.

சுவிற்சலாந்து இனப் பிரச்சினைக்குத் தீர்வு, இமாலயப் பிரகடனம் போன்ற முயற்சிகளில் மட்டும் ஆர்வங் காட்டவில்லை. அதற்குமப்பால், வடக்கிலிருந்து அகற்றப்பட்ட முஸ்லிம்கள் மத்தியில் செயற்படும் செயற்பாட்டாளர்களுக்கும் தமிழ் முஸ்லிம் உறவு தொடர்பான உரையாடல்களுக்கும் நிதி அனுசரணை புரிந்துவருகிறது. மேலும் யாழ்ப்பாணத்தில் இயங்கும் சட்டத்துக்கும் கொள்கைகளுக்குமான கற்கை நிலையத்திற்கும் சில செயற்பாடுகளுக்கு நிதி அனுசரணைபுரிகிறது. இவ்வாறு கட்சிகள் செயற்பாட்டாளர்கள் உட்பட பல்வேறு தரப்புகளுக்கும் சுவிட்சர்லாந்து நிதி உதவிகளைச் செய்கிறது.

நல்லிணக்கம், சமாதானம் மனித உரிமைகள், நிலைமாறு காலநீதி அல்லது பொறுப்பு கூறல் போன்ற வார்த்தைகள் கவர்ச்சியானவை. ஆனால் நவீன அரசியலில் அவைதெளிவான அரசியல், ராஜதந்திர, பொருளாதார இலக்குகளைக் கொண்டவை.




(தமிழ் சிங்கள முஸ்லிம், மலையக மக்களால் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற வெளிப்படைத்தன்மை மிக்க எந்த ஒரு தீர்வும் மூன்றாவது தரப்புகளின் பிரசன்னம், அழுத்தம், கண்காணிப்பு இல்லாமல் கிடைக்காது என்பதுதான் கடந்த 75 ஆண்டுகளுக்கு மேலான அனுபவம் ஆகும். இப்பொழுது சுவிற்சலாந்து அப்படி ஒரு மூன்றாவது தரப்பாகச் செயல்படுமா? அதை இந்தியா ஆர்வத்தோடு பார்க்குமா?)

இவ்வாறானநகர்வுகளின் ஒருபகுதியாகவே இம்மாதம் 19ஆம் திகதி நடக்கவிருந்த சந்திப்பும் ஒழுங்கு செய்யப்பட்டது. அந்தச் சந்திப்பின் நோக்கம் இனப்பிரச்சினைக்கான பொதுவான ஒருதீர்வை நோக்கி வருமாறு தமிழ் கட்சிகளை ஊக்குவிப்பது என்று விளங்கிக் கொள்ளப்பட்டது.

இந்த இடத்தில் ஒருமுக்கியமான கேள்வியைக் கேட்கவேண்டும். கடந்த 16 ஆண்டுகளாக தமிழ்த் தரப்பு தமக்கு என்ன வேண்டும் என்பதை ஏன் ஒரே குரலில் கூற முடியவில்லை?

தீர்வு விடயத்தில் தமிழ்த் தரப்பு ஒரு பொது உடன்பாட்டுக்கு வரவில்லை என்ற குற்றச்சாட்டு தூதரக மட்டங்களில் உண்டு. பல ஆண்டுகளுக்கு முன்பு யாழ்ப்பாணத்தில், ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளை சிவில் சமூகங்கள் சந்தித்த போது இது சுட்டிக்காட்டப்பட்டது. அப்பொழுது சிவில் சமூக உறுப்பினர்கள் சிலர் ஒருமுக்கியமான விடயத்தை எடுத்துக்காட்டினர். 2015ல் நிலைமாறு காலநீதி செய்முறைகளின் கீழ் புதிய யாப்பை உருவாக்கும் முயற்சிகள் தொடங்கப்பட்டன. அங்கிருந்து தொடங்கி கோத்தபாயாவின் நிபுணர் குழு வரையிலுமான சுமார் 6 ஆண்டு ஆண்டு காலபகுதிக்குள் தமிழ் மக்கள் மத்தியில் இருந்து வெவ்வேறு தரப்புகள் தீர்வு முன்மொழிவுகளை மேசையில் வைத்தன. அப்பொழுது இயங்கிக் கொண்டிருந்த தமிழ் மக்கள் பேரவை ஒரு தீர்வு முன்மொழிவை வெளியிட்டது. அது ஒரு சமஷ்டி முன்மொழிவு. அதன் பின் வடமாகாண சபை ஒரு முன்மொழிவை வெளியிட்டது. அதுவும் சமஸ்டி. தவிர வடமாகாண முதலமைச்சராக இருந்த விக்னேஸ்வரனின் கட்சி ஒரு முன்மொழிவை வெளியிட்டது. அது சமஷ்டியை விட உயர்வான, கொன்பெடரேஷன் என்று அழைக்கப்படுகின்ற ஒரு தீர்வு. இவை தவிர புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகளும் தீர்வு முன்மொழிவுகளை முன்வைத்தன. இப்படிப் பார்த்தால் இலங்கைத் தீவின் நவீன வரலாற்றில் இனப் பிரச்சினைக்கான தீர்வுதொடர்பில் அதிகளவு முன்மொழிவுகள் மேசையில் வைக்கப்பட்ட ஒரு காலகட்டமாக அந்த ஆறு ஆண்டுகாலப் பகுதியைக் கூறலாம். இவ்வாறு முன்வைக்கப்பட்ட எல்லா முன்மொழிவுகளிலும் ஒருபொதுப் பண்பு இருந்தது. அது என்னவென்றால் அவை அனைத்தும் சமஷ்டிப் பண்பைக் கொண்டிருந்த வைஎன்பது தான். இது சிவில் சமூகங்களால் ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகளுக்குச் சுட்டிக்காட்டப்பட்டது.

அப்பொழுது ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதி ஒருவர் கேட்டார், நீங்கள் குறிப்பிடும் அத்தனை தீர்வு முன்மொழிவுகளையும் தமிழ்த் தரப்பு ஒன்றாக ஒரு மேசையில் அமர்ந்திருந்து ஒரே ஆவணமாகக் கொடுத்ததா? என்று.

இல்லை. கொடுக்கவில்லை. ஏன் அப்படிக் கொடுக்க முடியவில்லை என்றால், மேற்சொன்ன அனைத்து தீர்வு முயற்சிகளிலும் பெரிய கட்சியாகிய தமிழரசுக் கட்சி உத்தியோகபூர்வமாக பங்கெடுக்கவில்லை. தமிழ் மக்கள் பேரவையில் தமிழரசுகட்சி இருக்கவில்லை. வடமாகாண சபையின் முன்மொழிவிலும் அது தமிழரசுக்கட்சியின் முன்னொளிவாக வைக்கப்படவில்லை. மாகாணசபையின் முன்மொழிவு தான். எனவே மேற்கண்ட அனைத்து தீர்வு முன்மொழிவுகளிலும் தமிழரசுக் கட்சி உத்தியோகபூர்வமாக பங்கெடுக்கவில்லை.

ஆனால் அப்போதைய யாப்புருவாக்க முயற்சிகளில் தமிழரசுக் கட்சி அரசாங்கத்தோடு பங்காளியாகச் செயல்பட்டது. அப்பொழுது தமிழ் மக்கள் பேரவையில் காணப்பட்ட சில கட்சிகளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்றகொடியின் கீழ் யாப்புருவாக்க முயற்சிகளில் ஈடுபட்டன. அந்த முயற்சிகளின் விளைவாக உருவாக்கப்பட்டது தான் “எகிய ராஜ்ய” என்று அழைக்கப்படுகின்ற இடைக்கால வரைபு ஆகும். அந்த வரைபானது மைத்திரிபால சிறிசேனவின் வார்த்தைகளில் சொன்னால், சிங்கள மக்களையும் பயமுறுத்தாத தமிழ் மக்களையும் பயமுறுத்தாத வார்த்தைப் பிரயோகங்களைக் கொண்டதாக உருவாக்கப்பட்டது. அதைத் தான் இப்பொழுது கஜேந்திரக்குமார் கேள்விக்கு உள்ளாக்குகிறார்.

வெளிப்படைத் தன்மையற்ற அந்த இடைக்காலவரைபானது ஒற்றையாட்சிப் பண்புமிக்கது என்று கஜன் குற்றச்சாட்டுகிறார். அதை சுமந்திரன் மறுக்கிறார்.

அந்த இடைக்காலவரைபை உருவாக்கியதில் ஜேவிபி, தமிழரசுக் கட்சி, புளட், ரெலோ ஆகியவற்றுக்கும் பங்குண்டு. ஆனால் அண்மை மாதங்களாக தமிழரசுக் கட்சியானது ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்போடு பேசிவருகிறது. அதன் விளைவாக இனப்பிரச்சினைக்கான தீர்வை நோக்கி ஒருபொது ஆவணத்தைத் தயாரிக்கப் போவதாகவும் அவர்கள் தெரிவிக்கிறார்கள்.

எனினும் தொகுத்துப் பார்த்தால் தெரிவது என்னவென்றால், தமிழ்த் தரப்பு ஒரு பொதுவான நிலைப்பாட்டுக்கு வரமுடியாமல் இருப்பதற்கு முக்கிய காரணம் தமிழரசுக் கட்சிதான்.

எனவே இப்பொழுது தமிழ்த் தரப்பு ஏன் ஒருமித்த குரலில் தீர்வை முன்வைக்க முடியவில்லை என்பதற்கு விளக்கம் கிடைக்கிறது. எல்லாருமே சமஷ்டியைத் தான் கேட்கிறார்கள். ஆனால் அரசாங்கத்தோடு இணைந்து அதாவது சிங்கள மக்களையும் பயமுறுத்தாமல் ஒரு தீர்வைக் கொண்டு வருவது என்றால் அதுவெளிப்படையான சமஷ்டியாக இருக்கும் வாய்ப்புகள் குறைவுஎன்று தமிழரசுக் கட்சி கருதுவதாகத் தெரிகிறது.

இதை இன்னும் பிழிந்துசொன்னால், சிங்களப் பிரதிநிதிகளை பெரும்பான்மையாகக் கொண்ட நாடாளுமன்றத்துக்கு ஊடாககிடைக்கக்கூடிய எந்த ஒரு தீர்வும் வெளிப்படைத் தன்மைமிக்கதாக இருப்பதற்கு வாய்ப்புகள் குறைவு என்பதுதான். இதைஅதன் பிரயோக வார்த்தைகளில் சொன்னால், மூன்றாவது தரப்பு ஒன்றின் அழுத்தம் இல்லாமல், தமிழ்த் தரப்பு போராடாமல், உள்நாட்டுக்குள்ளேயே கண்டுபிடிக்கக்கூடிய எந்த ஒரு தீர்வும் வெளிப்படையான சமஷ்டியாக இருக்க முடியாது.

இந்த இடத்தில் தான் மூன்றாவது தரப்புகளின் பிரசன்னமும் கண்காணிப்பும் அழுத்தமும் தேவைப்படுகிறது. இனப்பிரச்சினைக்கான இறுதித் தீர்வு ஒன்றை எட்டுவதற்கு தமிழ்த் தரப்பு போராடவில்லையென்றால், மூன்றாவதுதரப்புகள் அழுத்தத்தை பிரயோகிக்கவில்லை என்றால் இரண்டு தரப்பையும் சமாதானப்படுத்தும் ஒரு தீர்வை கொண்டுவர முடியாது. இந்திய இலங்கை உடன்படிக்கை அதைத்தான் உணர்த்துகின்றது. ஆனால் 13ஆவது திருத்தம் சமஷ்ரியல்ல.

எனவே தமிழ் சிங்கள முஸ்லிம், மலையக மக்களால் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற வெளிப்படைத் தன்மைமிக்க எந்த ஒரு தீர்வும் மூன்றாவது தரப்புகளின் பிரசன்னம், அழுத்தம், கண்காணிப்பு இல்லாமல் கிடைக்காது என்பதுதான் கடந்த 75 ஆண்டுகளுக்கு மேலான அனுபவம் ஆகும். இப்பொழுது சுவிற்சலாந்து அப்படி ஒரு மூன்றாவது தரப்பாகச் செயல்படுமா? அதை இந்தியா ஆர்வத்தோடு பார்க்குமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## “தமிழ்நாட்டுக்கு ஒத்துவராது”

- முரளிதரன் காசிவிஸ்வநாதன்

# ஆட்சியில் பங்கு குறித்த ஸ்டாலின் கருத்துக்கு காங்கிரஸ் கட்சியின் எதிர்வினை என்ன?

“ஆட்சியில் பங்கு” என காங்கிரஸ் கட்சியில் ஒரு சிலர் தொடர்ந்து கோரி வரும் நிலையில் கூட்டணி ஆட்சியை தமிழக மக்கள் ஏற்க மாட்டார்கள் எனக் கூறி அந்தப் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்திருக்கிறார் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின்.

காங்கிரஸ் கட்சியின் ஒரு பகுதியினர் “ஆட்சியில் பங்கு, அதிகாரத்தில் பங்கு” என தொடர்ந்து கோரிவரும் நிலையில், சென்னையில் ஊடகம் ஒன்று நடத்திய மாநாட்டில் பேசிய தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் “கூட்டணி ஆட்சி கிடையாது” என்பதை திட்டவட்டமாகத் தெரிவிக்கும் வகையில் கருத்தைத் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே கூட்டணி தொடர்பான பேச்சு வார்த்தைகள் தாமதமாகி வருவதில் காங்கிரஸ் அதிருப்தி அடைந்திருக்கும் நிலையில், முதலமைச்சரின் இந்தக் கருத்து வந்து சேர்ந்திருக்கிறது.

தமிழ்நாட்டில் வரவிருக்கும் சட்டமன்றத் தேர்தலைப் பொறுத்தவரை, தி.மு.க. கூட்டணி அப்படியே தொடரும் என எதிர்பார்க்கப்படும் நிலையில் இப்போது வரை கூட்டணிப் பேச்சுவார்த்தைகள் துவங்கப்படவில்லை. இந்நிலையில் தமிழ்நாட்டில் கூட்டணி தொடர்பான பேச்சு



வார்த்தைகளை நடத்த தமிழக காங்கிரஸ் கட்சிக்கான பொறுப்பாளர் கிரிஷ் சோடங்கர் தலைமையில் குழு ஒன்றும் அமைக்கப்பட்டது. ஆனாலும் அதற்குப் பிறகும் கூட்டணிப் பேச்சு வார்த்தைகள் ஏதும் துவங்கப்படு வதற்கான அறிகுறிகள் தென்படவில்லை.

இந்நிலையில், கடந்த டிசம்பர் 22ஆம் தேதியன்று ஊடகம் ஒன்றிடம் பேசிய கிரிஷ் சோடங்கர், “எங்கள் கட்சியின் சார்பில் வாக்குறுதிகளை கட்சியின் தலைவர்கள் வழங்குவார்கள். இதனை நிறைவேற்றுவதற்கு ஆட்சியில் பங்கு பெறுவது அவசியம்” என்று குறிப்பிட்டார்.

அவரது இந்தப் பேச்சே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்த நிலையில், ஆட்சியிலும் பங்கு தரவேண்டும் என்ற கோரிக்கையை அக்கட்சியின் விருதுநகர் நாடாளுமன்றத் தொகுதியின் எம்.பியான மாணிக்கம் தாகூர், புரொஃபஷனல் காங்கிரசைச் சேர்ந்த பிரவீண் சக்ரவர்த்தி ஆகியோரும் வலியுறுத்த ஆரம்பித்தனர்.

இதற்குப் பிறகு நடிகர் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம் ஏற்கனவே “ஆட்சியில் பங்கு, அதிகாரத்தில் பங்கு” எனக் கூறிவந்ததால், அக்கட்சியுடன் காங்கிரஸ் கட்சி கூட்டணி அமைக்கலாமோ என்ற யூகங்கள் எழுந்தன. இந்த யூகங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க விரும்பிய கட்சியின் மாநிலத் தலைவர் கு. செல்வப்பெருந்தகை, அறிக்கை ஒன்றை வெளியிட்டார்.

அந்த அறிக்கையில், “தமிழ்நாடு காங்கிரஸ் தலைமை, அகில இந்திய காங்கிரஸ் தலைமையோடு கலந்து பேசி முடிவெடுக்க வேண்டிய நிலையில், இதுகுறித்து பொதுவெளியில் காங்கிரஸ் கட்சியினர் எவரும் கருத்து கூறுவதை தவிர்க்க வேண்டும்” என்று குறிப்பிட்டார்.


இதெல்லாம் நடந்து பல நாட்கள் கடந்துவிட்ட நிலையிலும், தி.மு.க மற்றும் கூட்டணிக் கட்சிகளுக்கு இடையிலான பேச்சு வார்த்தைகள் துவங்கவேயில்லை. இந்த நிலையில், காங்கிரஸ் கட்சியின் மாவட்டத் தலைவர்கள் கூட்டம் டெல்லியில் பிப்ரவரி 10ஆம் தேதி நடைபெற்றது. இதில் தமிழ்நாட்டைச் சேர்ந்த ப. சிதம்பரம், மாநிலத் தலைவர் கு.செல்வப் பெருந்தகை உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்திற்குப் பிறகு செய்தியாளர்களிடம் பேசிய கு.செல்வப்பெருந்தகை கூட்டணிப் பேச்சுவார்த்தைகள் துவங்காதது தொடர்பாக காங்கிரசின் வருத்தத்தை வெளிப்படையாகவே பகிர்ந்து கொண்டார்.

“தொகுதி பங்கீடு குறித்து பேச முதல்வர் மு.க. ஸ்டாலின் உடனடியாகக் குழுவை அமைக்க வேண்டும். விரைவில் தேர்தல் உடன்பாட்டை எட்ட வேண்டும். பேச்சு வார்த்தை நடத்தவும் வேட்பாளர் தேர்வுகளைச் செய்யவும் எங்களுக்கு கால அவகாசம் தேவைப்படும். கடைசி நேரத்தில் அறிவித்தால் குழப்பம்தான் வரும். தி.மு.க பேச்சு வார்த்தையைத் தாமதப்படுத்துவதால் தொண்டர்கள் மத்தியில் வருத்தம் உள்ளது” என்று அவர் குறிப்பிட்டார்.

கு. செல்வப்பெருந்தகையின் இந்தப் பேச்சுக்கு விளைவு இருந்தது. செவ்வாய்க்கிழமையன்று இரவில், கூட்டணிப் பேச்சு வார்த்தை தொடர்பாக அறிக்கை ஒன்றை தி.மு.க. வெளியிட்டது.

“வரும் 17ஆம் தேதி தமிழ்நாடு அரசின் இடைக்கால பட்ஜெட் தாக்கல் செய்யப்படவுள்ளது. தொடர்ந்து அதன் மீதான விவாதம் நடைபெற இருக்கிறது. கழகத் தலைவர் அவர்களால் விரைவில் அமைக்கப்படவுள்ள தி.மு.க-வின் தொகுதிப்



பங்கீட்டுக் குழு, சட்டப்பேரவை அலுவல்கள் நிறைவடைந்தவுடன் பிப்ரவரி 22ஆம் தேதி முதல் தோழமைக் கட்சிகளுடன் கூட்டணிப் பேச்சு வார்த்தையில் ஈடுபடும்” என்று அந்த அறிக்கை கூறியது.

இதற்கு அடுத்த நாள் சென்னையில் ஊடகம் ஒன்று நடத்திய மாநாட்டில் பேசிய தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் கூட்டணி ஆட்சி கிடையாது என்பதை திட்டவட்டமாகத் தெரிவித்தார். காங்கிரசுடனான கூட்டணி குறித்த கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த முதலமைச்சர், ஆட்சியில் பங்கு என்பது தமிழ்நாட்டிற்கு ஒத்துவராது எனத் தெரிவித்திருக்கிறார்.

“(காங்கிரசுடன்) கூட்டணி நிச்சயமாக நன்றாக இருக்கும். மற்றவர்கள் நினைப்பதைப் போல இல்லை. ஆட்சியில் பங்கு என்பது தமிழ்நாட்டிற்கு ஒத்துவராது என்பது எங்களுக்கும் தெரியும். அவர்களுக்கும் (காங்கிரசுக்கும்) தெரியும். இடையில் ஏதாவது பிரச்னை ஏற்படுத்தலாம் என நினைப்பவர்கள் திட்டமிட்டு சதி செய்கிறார்கள். நாங்களும் இதைப் பற்றிக் கவலைப்படவில்லை. அவர்களும் கவலைப்படவில்லை.” என்று தெரிவித்திருக்கிறார்.

ஏற்கனவே, தி.மு.க-வின் சில அமைச்சர்கள் கூட்டணி ஆட்சி தி.மு.கவுக்கு ஏற்புடையதல்ல எனக் கூறிவிட்ட நிலையில், தற்போது முதலமைச்சர் மு.க. ஸ்டாலினும் அந்தக் கருத்தைத் தெரிவித்திருக்கிறார்.

அடுத்தது கூட்டணி ஆட்சிதான் என காங்கிரஸ் கட்சிக்குள் தொடர்ந்து குரல் எழுப்பிவந்த காங்கிரஸ் கட்சித் தலைவர்கள், உடனடியாக இதற்கு எதிர்வினையாற்றினார்கள்.

விருதுநகர் நாடாளுமன்றத் தொகுதியின் காங்கிரஸ் எம்.பியான மாணிக்கம் தாகூர், “மக்கள் முடிவு செய்வார்கள் கூட்டணி ஆட்சியா அல்லது ஒரு கட்சி ஆட்சியா என்பதை. 2006இல் மக்கள் தீர்ப்பை செயல்படுத்தாதது நம் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தவறு” என்று தனது எக்ஸ் பக்கத்தில் குறிப்பிட்டார்.

காங்கிரஸ் கட்சியின் பிரவீண் சக்கரவர்த்தியும் எதிர்வினையாற்றினார். “மற்ற மாநிலங்கள் அனைத்தும் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ளத் தயாராக இருக்கும்போது, தமிழ்நாட்டின் “தனித்தன்மை” என்ற காரணத்தைக் கூறி அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்ள மறுப்பது ஏன்? மற்ற இந்தியர்களைப் போலவே, தமிழ்நாட்டு மக்களுக்கும் கூட்டணி ஆட்சியில் எந்தப் பிரச்னையும் இல்லை” என்று குறிப்பிட்டார்.

கூட்டணி ஆட்சி என்பதை முதல்வர் மறுத்துவிட்ட நிலையில் இனி காங்கிரஸ் இதனைத் தொடர்ந்து வலியுறுத்துமா? “அதனை இப்போது வெளியில் சொல்ல முடியாது. காங்கிரஸ் கட்சியின் சார்பில் கூட்டணிப் பேச்சுவார்த்தையில் பங்கேற்பவர்கள் அந்தத் தருணத்தில் தங்கள் கோரிக்கைகளை முன்வைப்பார்கள்” என பெயர் சொல்ல விரும்பாத காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஒருவர் தெரிவித்தார்.

ஆனால், காங்கிரஸ் கட்சியின் மாநிலத் தலைவரான கு. செல்வப்பெருந்தகை மிகக் கவனமாகவே இந்தக் கேள்விக்குப் பதிலளித்தார். செய்தியாளர்களிடம் பேசிய அவர், “எங்கள் தலைமையும் தமிழ்நாட்டுத் தலைமையும் சேர்ந்து பேசி இதற்கு ஒரு தீர்வைக் காண்பார்கள். எல்லோரும் அவரவர் கருத்தைச் சொல்வார்கள். முடிவு செய்ய வேண்டியது, தேசியத் தலைமையும் தமிழ்நாட்டுத் தலைமையும்தான். ஊடகங்களில் யூகங்களை உருவாக்காதீர்கள்”



என்று கூறி இந்த விவகாரத்திற்கு இப்போதைக்கு முற்றுப்புள்ளி வைத்திருக்கிறார்.

ஆனால், காங்கிரஸ் கட்சியின் தேசியத் தலைமை இது குறித்து பேசாதபோது மாநில அளவில் சிலர் சொல்லும் கருத்துகளைப் பெரிதாக எடுத்துக்கொள்ள வேண்டிய தில்லை என்கிறார்கள் மூத்த பத்திரிகை யாளர்கள்.

“2006ல் தவறு செய்துவிட்டோம் என மாணிக்கம் தாகூர் நினைத்தால், அவர் அதனை காங்கிரஸ் கட்சித் தலைமையிடம் கேட்டிருக்க வேண்டும். காங்கிரஸ் கட்சிக்குள் இரண்டு, மூன்று பேர்தான் இது போல பேசிக்கொண்டிருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரை, கூடுதல் இடங்களைக் கேட்பது நியாயமானதுதான். தேர்தல் முடிவுகள் வரும் போது எந்தக் கட்சிக்கும் தனிப் பெரும்பான்மை கிடைக்காவிட்டால், அப்போது கூட ஆட்சியில் பங்கு கேட்கலாம். ஆனால், தேர்தலுக்கு முன்பே இப்படிக் கேட்பது சரியல்ல. தி.மு.க. தனிப் பெரும்பான்மை பெற்றாலும் கூட்டணி ஆட்சி அமைக்க வேண்டும் என்பதை எப்படி ஏற்பார்கள்?” என்கிறார் மூத்த பத்திரிகையாளர் ப்ரியன்.

தி.மு.கவைப் பொறுத்தவரை 22ஆம் தேதிதான் பேச்சுவார்த்தைகளைத் துவங்கவிருக்கிறார்கள். இந்த நிலையில், முதல்வரின் பேச்சு ஆழம் பார்ப்பதற்காக சொல்லப்பட்ட கருத்து என்று கருதுவதாகச் சொல்கிறார் ப்ரியன்.

“காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரை யாரும் எதையும் சொல்ல முடியும். கேரளாவில் காங்கிரஸின் கொள்கைக்கே மாறுபட்ட கருத்தையெல்லாம் சொல்கிறார்கள். தமிழ்நாட்டில் கூட்டணியைப் பற்றி ஆளாளுக்கு ஒவ்வொன்றைச் சொல்கிறார்கள். காங்கிரசின் பக்கம் இருந்து பார்க்கும்போது இதுபோன்ற அழுத்தம் நல்லதுதான். கூடுதல் இடங்களைப் பெற உதவலாம். ஆனால், முதல்வர் இது குறித்து தெளிவுபடுத்திய பிறகும் இதைச் சொல்கிறார்கள் என்பதுதான் ஆச்சரியமளிக்கிறது” என்கிறார் ஆர்.கே. ராதாகிருஷ்ணன்.

தி.மு.கவின் நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழியும் ராகுல் காந்தியும் சந்தித்த போது அதிகாரப் பகிர்வு குறித்துப் பேசப்பட்டதாகத் தெரியவில்லை என்கிறார் அவர்.

ஆனால், தனித்து ஆட்சி என்பதில் தி.மு.க. உறுதியாக இருக்கிறது. “கூட்டணி ஆட்சி வேண்டுமென்றால் தி.மு.க., அ.தி.மு.க., காங்கிரஸ் என எல்லாக் கட்சிகளும் தனியாக நிற்க வேண்டும். மக்கள் யாருக்கு எவ்வளவு இடங்களை அளிக்கிறார்கள் என்று பார்க்க வேண்டும். எந்தக் கட்சிக்கும் தனியாக பெரும்பான்மை கிடைக்கவில்லையென்றால், மற்ற கட்சிகளோடு சேர்ந்து கூட்டணி ஆட்சி அமைக்கலாம். ஆனால், நாம் ஒரே கூட்டணியாக இணைந்து நின்று, அந்த கூட்டணிக்குத் தலைமை தாங்கும் கட்சியை ஆட்சியில் அமர்த்த வாக்குக் கேட்கிறோம். அம்மாதிரி சூழலில், கூட்டணி ஆட்சி என்று கேட்டால் எப்படி?” என்கிறார் தி.மு.கவின் செய்தித் தொடர்பாளரான ரவீந்திரன் கான்ஸ்டைன்டீன்.

2006ஆம் ஆண்டில் காங்கிரஸ் தவறு செய்துவிட்டதாக மாணிக்கம் தாகூர் சொல்வது குறித்துக் கேட்டபோது, அந்தக் கருத்து சரியானதல்ல என்கிறார் அவர்.

“2006ஆம் ஆண்டில் தி.மு.க 128 இடங்களில் போட்டியிட்டது. மற்ற இடங்கள் கூட்டணிக் கட்சிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டன. அந்தத் தருணத்திலேயே தனித்துப் பெரும்பான்மை பெறுவது கடினம் என்பது தி.மு.க-வுக்குத் தெரியும். இருந்தபோதும் தி.மு.க. ஆட்சியமைக்க வாக்களியுங்கள் என்றுதான் பிரச்சாரம் நடந்தது. அந்தத் தேர்தலில் தி.மு.க. கூட்டணிக்கு 163 இடங்கள் கிடைத்தன. ஆகவே அது தி.மு.க. ஆட்சியமைப்பதற்காகக் கொடுக்கப்பட்ட இடங்கள்தான். கூட்டணி ஆட்சி அமையட்டும் என்று கொடுத்தது அல்ல. அப்போது காங்கிரஸ் ஆதரவு அளிக்காவிட்டாலும் இடதுசாரிகள், பாட்டாளி மக்கள் கட்சியின் ஆதரவுடன் அந்த ஆட்சி நீடித்திருக்கும்” என்று அவர் கூறுகிறார்.

“தற்போதைய காலகட்டத்தில் தமிழ்நாட்டைப் பொறுத்தவரை எந்த அலையும் இல்லாவிட்டால் ஒரே ஒரு கட்சி மட்டும் தனித்துப் போட்டியிட்டு தனிப் பெரும்பான்மை பெற்று ஆட்சி அமைப்பது கடினம்” என்று கூறும் ரவீந்திரன் கான்ஸ்டைன்டீன், தமிழ்நாட்டில் எப்போதுமே மக்கள் ஒரே கட்சியின் ஆட்சிக்காகத்தான் வாக்களிக்கிறார்கள்” என்கிறார்.

இந்நிலையில், “கூட்டணி ஆட்சி” குறித்து கருத்து தெரிவித்துள்ள அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி, “அதிமுக- என்டிஏ கூட்டணியில் இந்தப் பிரச்னை இல்லையென்றும், அதிமுக தான் ஆட்சியமைக்கும்” என்றும் கூறினர்.

(பிபிசி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்களாதேஷில் தேசிய கட்சி வெற்றி! இந்திய உறவில் மாற்றம் வருமா?




**வரலாற்றுச் சிறப்புமிக்க தேர்தலில் தாரிக் ரஹ்மானின் பங்களாதேஷ் தேசியவாத கட்சி பெரும்பான்மையைப் பெற்று அடுத்த அரசாங்கத்தை அமைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. டெல்லியும் வேண்டாம், பிண்டியும் (பாகிஸ்தான்) வேண்டாம், வங்கதேசமே முதன்மை என்றும் அவர் கூறியுள்ளார்.**

- ஐங்கரன் விக்கினேஸ்வரா

பலரும் எதிர்பார்த்தபடி பங்களாதேஷ் தேர்தலில் தீவிர மத அடிப்படைவாத கட்சியான ஜமாஅத்-இ-இஸ்லாமி வெற்றியை தழுவவில்லை. இதனால் ஜமாஅத்-இ-இஸ்லாமிய கட்சியுடன் சேர்ந்து போட்டியிட்ட, இளம் தலைமுறையினரால் தொடங்கப்பட்ட தேசிய நாரிக் கட்சியும் பாரியளவில் பின்தள்ளப்பட்டுள்ளது.

**வங்கதேச தேசிய கட்சி முன்னிலை:**

பங்களாதேஷில் நடைபெற்று முடிந்த 13வது நாடாளுமன்ற தேர்தலில், தாரிக் ரஹ்மான் தலைமையிலான வங்கதேச தேசியவாத கட்சி பெரும்பான்மைக்கு தேவையான இடங்களை கடந்து தனிப் பெரும் வெற்றியை பெற்றுள்ளது.

வெள்ளிக்கிழமை அதிகாலை வெளியான வாக்கு எண்ணிக்கை முடிவுகளின்படி, மொத்தமுள்ள இடங்களில் 211 தொகுதிகளில் வெற்றி பெற்று பிஎன்பி ஆட்சியை கைப்பற்றியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆட்சியை அமைக்கத் தேவையான குறைந்தபட்ச இடங்கள் 151 என்ற நிலையில், பிஎன்பி 211 இடங்களை கைப்பற்றி வலுவான நிலையில் உள்ளது. இவர்களுக்கு அடுத்தபடியாக ஜமாத்-இ-இஸ்லாமி கட்சி 70 இடங்களை பிடித்துள்ளது. கடந்த 30 ஆண்டுகளில் முதல்முறையாக அவாமி லீக் கட்சி இல்லாமல் இந்த தேர்தல் நடைபெற்றுள்ளது.

ஷேக் ஹசீனாவின் ஆட்சி 2024இல் வீழ்த்தப்பட்ட பிறகு, இடைக்கால தலைவர் முஹம்மது யூனுஸ் தலைமையில் நடைபெற்ற இந்த தேர்தலில், தாரிக் ரஹ்மான் தலைமையிலான பிஎன்பி மற்றும் ஜமாஅத்-இ-இஸ்லாமி ஆகிய கட்சிகளிடையே கடும் போட்டி ஆரம்பத்தில் நிலவியது.

பங்களாதேஷில் 15 ஆண்டுகால ஷேக் ஹசீனாவின் ஆட்சியை வீழ்த்திய மாணவர் தலைமையிலான புரட்சிக்குப் பிறகு, கடந்த பெப்ரவரி 12 ஆம் திகதியன்று புதிய பொதுத்தேர்தல் நடைபெற்றது. இந்தத் தேர்தலில் ஷேக் ஹசீனாவின் அவாமி லீக் கட்சிக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதால், தேர்தல் களம் தற்போது பங்களாதேஷ் தேசியக் கட்சி மற்றும் ஜமாத்-இ-இஸ்லாமி தலைமையிலான 11 கட்சிக் கூட்டணி ஆகியவற்றுக்கு இடையேயான இரு முனைப் போட்டியாக இருந்தது.

பங்களாதேசில் மொத்தமுள்ள 12.7 கோடி வாக்காளர்களில் சுமார் 44 சதவீதத்தினர் 18 முதல் 37 வயதுக்குட்பட்டவர்கள். இவர்களே தேர்தலின் தலைவிதியைத் தீர்மானிப்பார்கள் எனக் கருதப்பட்டது.

இந்த தேர்தலில், மொத்தம் உள்ள 300 இடங்களுக்கு 2000க்கும் மேற்பட்டோர் போட்டியிட்டனர்.

**ஷேக் ஹசீனா ஆட்சி வீழ்ச்சி:**

ஹசீனா ஆட்சியில் இருந்து வெளியேறிய பின், பங்களாதேஷ் தேசியக் கட்சி தலைவர் தாரிக் ரஹ்மான் 17 ஆண்டுகால நாடுகடத்தப்பட்ட வாழ்க்கைக்குப் பிறகு நாடு திரும்பி தீவிரப் பிரசாரத்தில் ஈடுபட்டார். இத்தேர்தலில் ஐம்பது கட்சிகள் போட்டியிட்டன. இந்தியாவுடன் தற்போதைய இடைக்கால அரசின் உறவு மிகவும் மோசமடைந்துள்ள நிலையில், புதிய ஆட்சி அமையவுள்ள கட்சிகளின் இந்தியா குறித்த நிலைப்பாடு பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

'எல்லாவற்றிற்கும் மேலாக வங்கதேசம்' என்ற முழக்கத்துடன் பிஎன்பி கட்சித் தலைவர் தாரிக் ரஹ்மான் தனது தேர்தல் அறிக்கையாக வெளியிட்டார். இதில் அவர் மற்ற நாடுகளை எஜமானர்களாக அல்லாமல் நண்பர்களாக மட்டுமே கருதுவோம் என்று உறுதி அளித்துள்ளார். குறிப்பாக,







டெல்லியும் வேண்டாம், பிண்டியும் (பாகிஸ்தான்) வேண்டாம் வங்கதேசமே முதன்மை என்று அவர் கூறியுள்ளார். பிற நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிட மாட்டோம் என்றும், தங்கள் நாட்டு விவகாரத்தில் பிற தலையீடுகளை அனுமதிக்க மாட்டோம் என்றும் பிஎன்பி தலைவர் தாரிக் ரஹ்மான் தனது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தியுள்ளார்.

பங்களாதேஷில் இந்த பொதுத்தேர்தல் இந்தியாவுக்கு சாதகமா? பாதகமா? என்ற கேள்விக்கு பதில் இலகுவாக இருக்க முடியாது. வழக்கமாக இந்தியாவுக்கு எதிரான நிலைப்பாட்டை கொண்ட ஜமாஅத்-இ-இஸ்லாமி, இந்த முறை வியக்கத்தக்க மாற்றமாக இந்தியாவுடன் நட்பு மற்றும் ஒத்துழைப்பு கொண்ட உறவை வளர்ப்போம் என்று இறுதி நேரத்தில் நம்பிக்கை தெரிவித்தது. சமத்துவம் மற்றும் பரஸ்பர மரியாதையின் அடிப்படையில் இந்தியா உட்பட அண்டை நாடுகளுடன் சுமுக உறவு பேணப்படும் என்று அக்கட்சியின் தலைவர் ஷபிகுர் ரஹ்மான் தெரிவித்தார்.

**இந்துக்கள் - சிறுபான்மையின பாதுகாப்பு:**

வங்கதேசத்தில் சமீபகாலமாக இந்துக்கள் மீதான தாக்குதல்கள் அதிகரித்துள்ள நிலையில், பிஎன்பி கட்சி சிறுபான்மையினரின் உயிருக்கும், சொத்துக்களுக்கும், வழிபாட்டு தலங்களுக்கும் கடுமையான சட்டப் பாதுகாப்பு வழங்கப்படும் என்று உறுதியளித்துள்ளது. இருப்பினும், ஜமாஅத்-இ-இஸ்லாமி கட்சி இதுகுறித்து தெளிவான வாக்குறுதிகளை அளிக்காமல், சிறுபான்மையினருக்கு பிரதிநிதித்துவம் வழங்கப்படும் குறிப்பிட்டுள்ளது.

கடந்த பத்தாண்டுகளாக ஷேக் ஹசீனாவுடன் நெருக்கமான உறவை வைத்திருந்த இந்தியாவிற்கு, தற்போதைய அரசியல் மாற்றம் ஒரு சவாலாகவே உள்ளது. இடைக்காலத் தலைவர் யூனுஸ் பாகிஸ்தானுடன் நெருக்கம் காட்டியது இந்தியாவுக்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

**இளம் தலைமுறை கட்சி:**

ஷேக் ஹசீனாவின் ஆட்சியை வீழ்த்திய மாணவர் தலைமையிலான புரட்சியை முன்னெடுத்த இளம் தலைமுறையினரால் தொடங்கப்பட்ட தேசிய நாரிக் கட்சி, அனுபவமின்மை மற்றும் உள்கட்சிப் பூசல்கள் காரணமாக ஜமாத்-இ-இஸ்லாமியுடன் கைகோர்த்து போட்டியிட்டது.

ஆனாலும் மாணவர் தலைவர்களிடையே பெரும் பிரிவினை ஏற்படுத்தியுள்ளதுடன், தஸ்னிம் ஜாரா போன்ற முக்கிய பெண் தலைவர்கள் கட்சியிலிருந்து வெளியேறவும் காரணமாகியுள்ளது. ஜமாத் கூட்டணியில் போட்டியிட்ட வேட்பாளர்களில் பெண்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருப்பது பெரும் விமர்சனத்திற்கு உள்ளாகியது.

இந்தத் தேர்தல் பங்களாதேஷின் ஜனநாயகப் பாதையைத் தீர்மானிக்கும் ஒரு முக்கியமான மைல்கல்லாகப் பார்க்கப்படுகிறது. ஹசீனா இல்லாத ஒரு புதிய பங்களாதேஷை உருவாக்குவதில் பழைய அரசியல் சக்திகள் வெற்றிபெறுமா அல்லது மாணவர்களின் கனவு நனவாகுமா என்பது எதிர்வரும் நாட்களில் தெரியவரும்.

**ஷேக் ஹசீனாவின் சரிவு:**

வங்கதேசத்தில் கடந்த 2024ம் ஆண்டு ஜனவரியில் பொதுத் தேர்தல் நடைபெற்ற நிலையில், அதை அந்நாட்டின் முக்கிய கட்சிகள் புறக்கணித்தன. இதனால், ஷேக் ஹசீனா வெற்றி பெற்று மீண்டும் பிரதமராக பதவியேற்றார். ஆனால், சில மாதங்களில் அரசுக்கு எதிராக மாணவர்கள் போராட்டத்தில் குதித்தனர். கடந்த 2024ஆம் ஆண்டு, இட ஒதுக்கீடு முறையில் எழுந்த சிக்கலின் காரணமாக, அந்நாட்டில் போராட்டம் நடைபெற்றது.

இந்த போராட்டம் வன்முறையாக மாறிய நிலையில், 1400 பொது மக்கள் கொல்லப்பட்டனர். மேலும், 22000 பேர் படுகாயமடைந்தனர். இந்த தொடர் போராட்டத்தின் காரணமாக அந்நாட்டின் அதிபர் ஷேக் ஹசீனா நாட்டை விட்டு வெளியேறினார். அதைத் தொடர்ந்து, பொருளாதாரத்தில் நோபல் பரிசு பெற்ற முகமது யூனுஸ் தலைமையில் இடைக்கால அரசு அமைக்கப்பட்டு, அது தற்போது செயல்பட்டு வருகிறது.

இந்த போராட்டம் குறித்து அந்நாட்டின் சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயம் வழக்குப் பதிவு செய்தது, இந்த வழக்கில் ஷேக் ஹசீனா குற்றவாளி என்று உறுதி செய்து, அவருக்கு மரண தண்டனை விதித்தது. ஆனாலும் தேர்தலில் போட்டியிட ஷேக் ஹசீனாவின் அவாமி லீக் கட்சிக்கு, முகமது யூனுஸ் அரசு தடை விதித்தது. இதனால், அக்கட்சியால் தேர்தலில் போட்டியிட முடியவில்லை. இதையடுத்து, மற்றொரு முன்னாள் பிரதமர் கலிதா ஜியாவின் வங்கதேச தேசியவாத கட்சி, ஜமாத்-இ-இஸ்லாமி கட்சி இடையே தான் இந்த தேர்தலில் போட்டி நிலவியது.

**தேர்தல் கால வன்முறை :**

பங்களாதேஷ் தேர்தல் பொதுவாக அமைதியாக நடந்ததாக அறிவிக்கப்பட்டாலும், பல்வேறு இடங்களில் ஏற்பட்ட மோதல்களில் 70-க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். குறிப்பாக நோகாலி மாவட்டத்தில் உள்ள ஹாட்டியா பகுதியில் பிஎன்பி மற்றும் தேசிய குடிமக்கள் கட்சி ஆதரவாளர்களிடையே ஏற்பட்ட மோதலில் 31 பேர் காயமடைந்தனர்.

அத்துடன் பாதுகாப்பு பணியில் சுமார் 10 இலட்சம் ராணுவ மற்றும் காவல் துறையினர் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

அத்துடன் நாடு முழுவதும் 60.69 வீத வாக்குகள் பதிவாகியுள்ளன. மேலும், 2024 எழுச்சியின் போது முன்வைக்கப்பட்ட "ஜூலை சார்ட்டர்" எனும் அரசியல் சாசன சீர்திருத்த ஆவணத்திற்கு மக்கள் வாக்கெடுப்பில் 72.9 வீத ஆதரவு கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வரலாற்றுச் சிறப்புமிக்க தேர்தலில் தாரிக் ரஹ்மானின் பங்களாதேஷ் தேசியவாதக் கட்சி பெரும்பான்மையைப் பெற்று அடுத்த அரசாங்கத்தை அமைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆயினும் பங்களாதேஷ் தேர்தல் ஆணையத்தால் இன்னும் அதிகாரப்பூர்வ முடிவுகள் வெளியிடப்படவில்லை.

இதேவேளை ஜமாத்-இ-இஸ்லாமியின் தலைவர் ஷஃபிகுர் ரஹ்மான், தேர்தல் முடிவுகள் எதுவாக இருந்தாலும், தனது கட்சி அவற்றை மதிக்கும் என்றும், அது தோல்வியடைந்தால் அது "எதிர்க்கட்சி அரசியலில்" ஈடுபடாது என்றும் கூறியுள்ளார்.

பங்களாதேஷ் பாராளுமன்றத்தில் 350 சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். அவர்களில் 300 பேர் ஒற்றை உறுப்பினர் தொகுதிகளிலிருந்து நேரடியாகத் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள். அதே நேரத்தில் கூடுதலாக 50 இடங்கள் பெண்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில் ஒரு வேட்பாளர் இறந்ததால் 299 இடங்களுக்கு மட்டுமே தேர்தல் நடைபெற்றது. இதே வேளை பிரதம மந்திரி பதவிக்கால வரம்புகள், நிர்வாக அதிகாரத்தில் வலுவான சரிபார்ப்புகள் மற்றும் பாராளுமன்ற அதிகார ஒருங்கிணைப்பைத் தடுக்கும் பிற பாதுகாப்புகள் உள்ளிட்ட அரசியல் சீர்திருத்தங்கள் குறித்தும் வாக்கெடுப்பு நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப்பொருளுடன் சிக்கிய முக்கிய நபர்

## பல கொள்ளை சம்பவங்கள் அம்பலம்

கொழும்பு, பெப். 15

பம்பலப்பிட்டி பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள் குழுவினால் 'ஐஸ்' போதைப்பொருளை வைத்திருந்த சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப் பட்ட நிலையில் மேலதிக விசாரணைகளுக்காக தடுப்புக்காவல் உத்தரவு பெறப் பட்டிருந்தது.

சந்தேகநபர் தொடர்பில் முன்னெடுக் கப்பட்ட மேலதிக விசாரணைகளில், பம்பலப்பிட்டி, நாரஹேன்பிட்டி, பேலியகொட, தெமட்டகொட, தலங் கம, கொத்தட்டுவ, மருதானை, கறுவாத் தோட்டம், பொரளை மற்றும் வெலிக் கடை ஆகிய பொலிஸ் பிரிவுகளில் 08 மோட்டார் சைக்கிள் கொள்ளைகள் மற்றும் மடிக்கணினி, தொலைபேசிகள் உள்ளிட்ட பல சொத்து கொள்ளை களை இவர் மேற்கொண்டுள்ளமை தெரியவந்துள்ளது.

குறித்த சந்தேகநபர் பத்தரமுல்ல பிரதேசத்தை சேர்ந்த 32 வயதுடையவர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இவரால் திருடப்பட்ட சில மோட் டார் சைக்கிள்கள் மற்றும் மடிக்கணினி உள்ளிட்ட சொத்துகளை விசாரணை அதிகாரிகள் மீட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் புதுக்கடை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

(எ)

# இல்லாத ஊருக்கு...

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

போல இப்போது முன்னணி அதேபாணி யில் பயணிக்க நினைப்பதாகவே தெரிகின்றது. அவர்களின் இந்த முயற்சி, தமிழ் மக்களுக்கான தீர்வுக்கான முற்சியா? ஆல்லது தமிழ் அரசு தலைமையில் தயாரிக்கப்பட்ட அரசியலமைப்புபொதியை- அதன் உள்ளடக்கத்தை வெளிக்கொண்டுவந்து, தமிழ் அரசுக்கு சேறடிப்பதற் கான முயற்சியா? ஏன்று கேட்காமல் இருக்கமுடிய வில்லை.

இந்தகலந்துரையாடல் தொடர்பான கடிதத்திற்கு பதிலளித்த தமிழ் அரசின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம், கடிதத்தின் இரண்டாவது பந்தியின் கருத்துக்களின் அடிப்படையில் (இந்தக் கட்டுரையில் முத லாவது பந்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது) 15ம் திகதி கூட்டத்தில் கலந்துகொள்வது சாத்திய மற்றது என்று பதில் அனுப்பியிருந்தார். ஆனால் இந்தபதிலை அப்படியே பிரதிசெய்து அவற்றை முன்னணியினர் ஊடகங்களுக்கு வழங்கியிருப்பது அவர்களின் முயற்சியை சந்தேகப்படவைத்திருக்கின்றது. உண்மையிலேயே முன்னணியினர் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகள் மீது அக்கறையுடையவர்களாக இருந்தால், தமிழ் அரசை எப் படி அணைத்துச் செல்வது என்பது பற்றியே சிந்தித்தி ருக்கவேண்டும். அதைவிடுத்து சிறுபிள்ளைத்தனமாக அரசியல் செய்வது அழகல்ல. இல்லாத ஊருக்கு வழிகாட்டுவதை கைவிடவேண்டும்.

# குற்றப் புலனாய்வில் ஏ.ஐ...

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

தடுப்பதற்கு, முகஅடையாளம் காணும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் பயன்படுகிறது.

இணையவழிமோசடி,போலி மின்னஞ்சல் மோசடி, வங்கிமோசடி தொடர்பான சந்தேகமான பரிவர்த்தனை களை செயற்கை நுண்ணறிவுஉடனடியாகக் கண்டறிந்து, சம்பந்தப்பட்டவர்களை உரியநேரத்தில் எச்சரிக்கை செய் வதன் மூலம், இணையவழிக் குற்றங்களால் ஏற்படக் கூடியபெரும் இழப்பை செயற்கை நுண்ணறிவுதடுக்கி றது.

சமூகஊடகங்களில் உள்ள பதிவுகளை செயற்கை நுண்ணறிவு ஆய்வுசெய்து, மிரட்டல், வெறுப்புபேச்சு, கலவர அறிகுறிகள் போன்றவற்றை முன்கூட்டியே கண்ட றிந்து, வன்முறைச் சம்பவங்கள் நிகழ்வதைத் தடுக்க துணைபுரிகிறது. விபத்து அதிகளவில் நடைபெறும் இடங்கள், அதிகவேகம் மற்றும் குடிபோதையில் வாக னங்களை ஓட்டுதல் போன்றவற்றைத் தொடர்ந்து கண் காணித்து, விபத்துகளால் ஏற்படக்கூடிய குற்றங்களைத் தடுக்கும் விதத்தில் போக்குவரத்துகாவல் துறைக்கு உரிய தகவல்களை செயற்கை நுண்ணறிவு வழங்குகிறது.

குற்றம் நடைபெற்ற இடத்தில் எடுக்கப்பட்ட புகைப் படங்கள், விடியோக்கள் போன்ற தரவுகளை ஆய்வு செய்து, குற்றம் நடைபெற்ற விதத்தை செயற்கை நுண் ணறிவு தெளிவுபடுத்துகிறது. குற்றம் நிகழ்ந்த இடத்திலி ருந்து சேகரிக்கப்பட்ட பலமணி நேர சிசிடிவி காட்சிகளை செயற்கை நுண்ணறிவு சில நிமிஷங்களில் ஆய்வுசெய்து, சம்பவ இடத்தில் சந்தேகமான முறையில் தென்படும் நபர்கள், வாகனங்கள் மற்றும் பொருள்கள் குறித்த தகவல்களை புலனாய்வு அதிகாரிகளுக்கு வழங்குகிறது.

குற்றப் புலனாய்வின் போது சந்தேகநபர்கள், தொலை பேசி பதிவுகள், நிதிபரிவர்த்தனைகள் ஆகியவற்றை ஆய் வுசெய்து,அவற்றுக்கு இடையேயான தொடர்புகளை விரைவாகவும், துல்லியமாகவும் கண்டறிய செயற்கை நுண்ணறிவுபயன்படுகிறது.

குற்றப் புலன் விசாரணையை வேகமாகவும், துல்லிய மாகவும் மேற்கொள்ள செயற்கை நுண்ணறிவு உதவியாக இருந்தாலும், மனிதர்களால் மேற்கொள்ளப்படும் புலன் விசாரணைக்கு மாற்றாக இதுஅமையாது. தவறான தரவுகளை செயற்கை நுண்ணறிவு வழங்கி, புலன் விசார ணையைத் தவறாக வழி நடத்திச் சென்ற சம்பவங்களும் உண்டு.

அமெரிக்காவிலுள்ள டெட்ராய்ட் நகரில் ஒரு கடிகா ரக் கடையில் 2020-ஆண்டு ஜனவரிமாதத்தில் நடைபெற்ற திருட்டுவழக்கில் துப்பறிய, திருட்டு நடைபெற்ற கடை யில் பதிவாகியிருந்த சிசிடிவி கேமரா பதிவுகளைப் புல னாய்வு அதிகாரிகள் கைப்பற்றினர். ராபர்ட் வில்லியம்ஸ் என்பவர் அந்ததிருட்டுக் குற்றத்தைச் செய்தார் என செயற்கை நுண்ணறிவை உள்ளடக்கிய முக அடையா ளத்தைக் கண்டறியும் மென்பொருள் கூறியதைத் தொடர்ந்து, அவர் கைதுசெய்யப்பட்டுசிறையில் அடைக் கப்பட்டார்.

ஆனால்,உண்மையான குற்றவாளிவேறு நபர் என்பது பின்னர் தெரியவந்தது. தன் மீதுபொய்யான குற்றத்தைச் சுமத்தி,கைது செய்ததற்காக ராபர்ட் வில்லியம்ஸ் டெட் ராய்ட் காவல்துறைமீது நீதிமன்றத்தில் வழக்குதொடுத் தார். அதைத் தொடர்ந்து, அவருக்கு 3 லட்சம் அமெரிக்க டாலர்கள் இழப்பீடாக வழங்கப்பட்டது.

குற்றப் புலன் விசாரணையில் துப்புதுலக்க பயன்ப டுத்திய செயற்கை நுண்ணறிவுதொழில்நுட்பம் தவறான குற்றவாளிகளை அடையாளம் காட்டிய சம்பவங்கள் அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட சில நாடுகளில் கடந்த காலத்தில் நிகழ்ந்துள்ளன. செயற்கை நுண்ணறிவின் முடிவுகளை மனித நுண்ணறிவு சரிபார்த்துக்கொள்ள வேண்டிய அவசியம் உள்ளது என்பதை இச்சம்பவங்கள் உணர்த்துகின்றன.

# தீவிரவாத அச்சுறுத்தல்கள் குறித்து பாதுகாப்பு துறை அசமந்த போக்கு

## ஞானசார தேரர் விசனம்

கொழும்பு, பெப். 15

நாட்டில் தீவிரவாதக் கொள்கைகளை உடையவர்கள் முக்கிய பதவிகளுக்கு நியமிக்கப்படுகின்றமை மிகவும் ஆபத்தான தாகும். இது குறித்து ஜனாதிபதி, பிரதமர், சபாநாயகர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோருக்கு நான்கு பக்கக் கடிதம் ஒன்றை அனுப்பிய போதிலும், இதுவரை அதற்கு எவ்விதப் பதிலும் கிடைக்கவில்லை என பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவிய லாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

பிரதி அமைச்சர் முனீர் முலாபர் ஒரு மௌலவியா இல்லையா என்பதையும், அவரது மதக் கொள்கை என்ன என்பதை யும் பகிரங்கப்படுத்துமாறு இதற்கு முன்னரும் நான் சவால் விடுத்திருக்கின் றேன். அவ்வாறு என்னால் முன்னதாக விடுக்கப்பட்ட சவாலுக்கு அவர் பதிலளிக் கவில்லை. அதற்குப் பதிலாக இணையத் தில் தெளிவற்ற கருத்துக்களே பரப்பப்படு கின்றன.

நாட்டில் தீவிரவாதக் கொள்கைகளை உடையவர்கள் முக்கிய பதவிகளுக்கு நியமிக்கப்படுகின்றமை மிகவும் ஆபத்தான தாகும். குறிப்பாக வக்ப் சபை போன்ற நாட்டின் பள்ளிவாசல்களை நிர்வகிக்கும் ஒரு முக்கிய நிறுவனத்துக்கு நியமிக்கப்பட் டுள்ள எட்டு நபர்களில், ஆறு பேர் தீவிர வாதக் கொள்கைகளுடன் தொடர்புடைய வர்கள் என சந்தேகிக்கின்றோம்.


ஜித்தாவுக்கு ஒரு அதிகாரியை நியமிக்க முயன்றபோது, சவூதி பாதுகாப்புத் துறை யினர் அந்த நபரை தீவிரவாதக் கொள்கையு டையவர் என்று கூறி நிராகரித்ததாக தகவல் கள் கிடைத்துள்ளன. ஆனால், இலங்கை யின் பாதுகாப்புத் துறையினர் இது குறித்து அசமந்த போக்குடன் இருக்கின்றனர்.

வக்ப் சபை நியமனங்கள் மற்றும் நாட் டில் நிலவும் தீவிரவாத அச்சுறுத்தல்கள் குறித்து ஜனாதிபதி, பிரதமர், சபாநாயகர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோ ருக்கு நான்கு பக்கக் கடிதம் ஒன்றை அனுப் பியிருக்கின்றேன். ஆனால், இதுவரை அதற்கு எவ்விதப் பதிலும் கிடைக்க வில்லை.

இவ்வாறான நியமனங்கள் தேசிய பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தலாகும். இது குறித்து புலனாய்வுத் துறையினர் மற்றும் பாதுகாப்புச் சபை உடனடி கவனம் செலுத்த வேண்டும். தற்போதைய அரசாங்கம் அதிகாரத்துக்கு வருவதற்கு இவ்வாறான சில குழுக்கள் உதவியிருக்க லாம். அதன் காரணமாகவே இவ்வாறான நியமனங்கள் வழங்கப்படுகிறதா என்ற சந்தேகம் எழுகிறது. இந்த நிலைமை தொடர்வது நாட்டுக்கு ஆபத்தானது என எச்சரிக்கின்றோம்- என்றார்.

(எ)

# மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 01 . 06 . 1932 |  | 09 . 02 . 2026 |

**"சேவைச் செம்மல்"**

## வயித்திலிங்கம் சங்கரப்பிள்ளை J.P

### (V.C. சபாரத்தினம்)

**முன்னாள் வருமான மேற்பார்வையாளர் (நெடுந்தீவு, நானாட்டான், முருங்கன் பிரதேச சபை), முன்னாள் பிரதம வருமான பரிசோதகர் (யாழ் மாநகர சபை), முன்னாள் பிரதேசசபைத் தலைவர் (நெடுந்தீவு), முன்னாள் கிராம அபிவிருத்தி சங்க செயலாளர் ( நெடுந்தீவு மேற்கு, நல்லூர் தெற்கு), முன்னாள் சனசமூக நிலைய செயலாளர் ( நெடுந்தீவு மேற்கு, நல்லூர் தெற்கு), இலங்கை செஞ்சிலுவைச் சங்க நெடுந்தீவுப் பிரிவு முன்னாள் தலைவர், நல்லூர் லயன்ஸ் கழக முன்னாள் உறுப்பினர், நெடுந்தீவு பல.நோ.கூ. சங்க முன்னாள் இயக்குநர், நல்லை ஆதின சபை உறுப்பினர்.**

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் தற்போது இல 72, செட்டித்தெரு, நல்லூரை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட வயித்திலிங்கம் சங்கரப்பிள்ளை அவர்கள் 09.02.2026ம் திகதி திங்கட் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அபிராமிப்பிள்ளையின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற வயித்திலிங்கம் வள்ளியம்மை தம்பதியினரின் இளைய புத்திரனும், காலஞ்சென்ற பொன்னம்பலம் மீனாட்சிப்பிள்ளை தம்பதியினரின் மருமகனும், காலஞ்சென்ற பொன்னையா, சுப்பிரமணியம், குமாரசுவாமி, பொன்னம்பலம், ஐயாத்துரை, தெய்வானைப்பிளளை, நாகமுத்து ஆகியோரின் அன்புச் சகோதரனும்,

சத்தியவரதன் (தவிசாளர் நெடுந்தீவு), நிர்மலா (முன்னாள் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்), கிருபாவரதன் (முன்னாள் பல.நோ.கூ சங்க முகாமையாளர்), கோகுலவரதன் (இலண்டன்), சந்திரகலா (ஆசிரியர் வைத்தீஸ்வராக்கல்லூரி), விஜயலதா (இலண்டன்), பத்மவரதன் (கனடா), தவமேகலா (இலண்டன்), பானுகலா (பிரான்ஸ்), அருள்வரதன் (இலண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், மஞ்சுளா, பாக்கியலட்சுமி, சகுந்தலாதேவி (இலண்டன்), புவனேந்திரா, தருமரத்தினம் (இலண்டன்), பொன்மதி (கனடா), செல்வராசா (இலண்டன்), சபேசன் ((பிராஸ்ஸ்), ஜானகி (இலண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், குமரன் (மென்பொருள் பொறியியலாளர் இலண்டன்), குகப்பிரியன் (மருத்துவபீட மாணவன், யாழ் பல்கலைக்கழகம்), ஜனகன் (வர்த்தகபீட மாணவன், நொதேன் பல்கலைக்கழகம்), துவாரகன் (மருத்துவபீட மாணவன், ஜெயவர்த்தனபுர), மகிபன் (மருத்துவபீட மாணவன், இம்பீரியல் இலண்டன்), நிருஜன் (வணிகத்துறை மாணவன், கொவென்றி இலண்டன்), கினோஜா (மாணவி இலண்டன்), மதுசன் (மென்பொருள் பொறியியல் மாணவன், நொதேன் பல்கலைக்கழகம்) நிரோஜன் (க.பொ.த உயர்தரம்), கிந்துஷன் (க.பொ.த உயர்தரம்) அபியதர்சன் (மருத்துவபீட மாணவன், அஸ்டன், லண்டன்), விட்டலன் (மாணவன் கனடா), லக்ஷினி (மாணவி கனடா), யனுசா (தாதியத்துறை மாணவி, இலண்டன்), தனுஷா (மாணவி, இலண்டன்), அனுராஜ் ( மாணவன் இலண்டன்), அபிராஜ் (இலண்டன்), பானுஷன் (விமான பொறியியல் மாணவன், பிரான்ஸ்), டினோஜா (சட்டத்துறை மாணவி, பிரான்ஸ்), கபிசன் (பொறியியல் துறை மாணவன் பிரான்ஸ்), அபிசன் (மாணவன் பிரான்ஸ்), ஆருத் (மாணவன் இலண்டன்) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 15.02.2026ந் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம் பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இல. 72,
செட்டித்தெரு,
நல்லூர்

தகவல்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின் கட்டண திருத்தம் குறித்து பொதுமக்களின் கருத்து கோரும் பொதுப்பயன்பாடு ஆணைக்குழு!

கொழும்பு, பெப். 15

இலங்கை மின்சார சபை அதன் செலவுகளை ஈடுகட்டுவதற்காக மின்சாரக் கட்டண திருத்தத்தை முன்மொழிந்துள்ளது.

மின்சார சபையின் உற்பத்தி மற்றும் விநியோகச் செலவுகளைச் சரி செய்வதற்காக இந்த கட்டண திருத்தம் முன்மொழியப்பட்டுள்ளது.

இது குறித்து இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு பொதுமக்களின் கருத்துக்களைக் கோரியுள்ளது. (அ)

## ஏ.ஐ.உச்சி...

இலங்கை ஜனாதிபதியுடன் இணைந்து பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன், பிரேசில் ஜனாதிபதி லுயிஸ் இனாசியோ லுலா டா சில்வா, பூட்டான் பிரதமர் ஷெரிங் டோப்கே, ஸ்பெயின் ஜனாதிபதி பெட்ரோ சான்செஸ், ஐக்கிய அரபு அமீரக இளவரசர் ஷேக் காலித் பின் முகமது பின் சயீத் அல் நஹ்யான், மொரிஷியஸ் பிரதமர் டாக்டர் நவீன் சந்திர ராம்கூலம் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். (அ)

## சர்வதேச...

போது, அவர் இலங்கையின் அரச அதிகாரிகள் மற்றும் முக்கிய தரப்பினர்களைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளதுடன், நாட்டில் அண்மையில் வீசிய "டித்வா" சூறாவளியினால் ஏற்பட்ட பாதிப்புகள் மற்றும் தாக்கங்களை நேரடியாகக் கண்டறியவுள்ளார்.

குறித்த அனர்த்த பாதிப்புகளிலிருந்து இலங்கை மீண்டெழுவதற்கும், அனைத்து இலங்கையர்களுக்கும் வளமான எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவதற்கும் சர்வதேச நாணய நிதியம் எவ்வாறான ஆதரவுகளை வழங்க முடியும் என்பது குறித்து இதன்போது விரிவாக ஆராயப்படவுள்ளது.

அனர்த்தத்திற்குப் பின்னரான இலங்கையின் பொருளாதார மீட்சி மற்றும் எதிர்காலத் திட்டங்களுக்கு வலுசேர்ப்பதே சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரின் இந்த விஜயத்தின் முக்கிய நோக்கமாகும் என அந்த அமைப்பின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (அ)

## மின்விநியோகம்...

விநியோகத்தில் நெருக்கடி நிலை ஏற்படலாம் என தெரிவிக்கப்படுகின்றது.

பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

நிலக்கரி கப்பல்கள் நாட்டை வந்தடைய காலம் தாழ்த்தப்படுவதால் பல்வேறு துறைகளில் நெருக்கடி நிலை ஏற்படக்கூடிய அபாயம் காணப்படுவதாக அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நிலக்கரி கொள்வனவு தொடர்பில் பேசப்படும் போது அதன் தரம் குறித்து பலர் பேசுகின்ற போதிலும் உரிய நேரத்தில் நிலக்கரி விநியோகம் செய்யப்படாவிட்டால் ஏற்படக்கூடிய பாதிப்பு குறித்து எவரும் கவனம் செலுத்துவதில்லை என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

நிலக்கரி கப்பல்கள் உரிய நேரத்தில் வந்தடையாவிட்டால் மின் தடை ஏற்படும் அல்லது ஒரு அலகிற்கான மின் மின்சாரம் 90 ரூபாய் விட அதிகமாகக் கூடும் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நாட்டின் பிரதான மின் உற்பத்தி நிலையமான நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையம் ஸ்தம்பித்தால் அதிக விலை கொடுத்து மின்சாரத்தை கொள்வனவு செய்யவேண்டிய நிலை ஏற்படுவது மட்டுமின்றி நாடு இருளில் மூழ்கக் கூடிய அபாய நிலை காணப்படுவதாக அவர் எச்சரித்துள்ளார்.

இந்த ஆபத்தான நிலை குறித்து கவனம் செலுத்தி, அரசாங்கம் உடனடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென அவர் கோரியுள்ளார்.

நிலக்கரி கொள்வனவு மற்றும் அவற்றை நாட்டிற்கு கொண்டு வருவது தொடர்பில் கடந்த கால அரசாங்கங்கள் திட்டமிட்ட அடிப்படையில் செயல்பட்டதாக அவர் சுட்டிக்காட்டி உள்ளார். (அ)

## சுற்றுலா...

நாடுகளுக்கு இலவச விஸா வழங்க நடவடிக்கை எடுத்தது. இதனால், சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைந்த காலப்பகுதிகளில் இலவச விஸா வழங்க நாம் விரும்பினோம்.

இது குறித்து ஊடகங்களுக்குத் தெரிவித்து, வெளிவிவகார அமைச்சுக்கும் அறிவித்து இந்தத் திட்டத்தை முன்னெடுக்க முயன்றபோது, ஒரு சட்டத் தடை ஏற்பட்டது.

விஸா வழங்கும் நடைமுறையை கடந்த காலத்தில் ஒரு தனியார் நிறுவனத்துக்கு விற்பனை செய்தமை மற்றும் அதற்கான நிதி அரசாங்கத்துக்குச் சேராமை தொடர்பில் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு நிலுவையில் உள்ளது.

இந்த வழக்கு நீண்ட காலமாக முடிவின்றித் தொடர்கிறது. தற்போது மீண்டும் ஒரு நகர்வு மனுவைத் தாக்கல் செய்து, இந்த வழக்கை மீண்டும் விசாரணைக்கு எடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப் படுகின்றன-என்றார். (அ)

## புதிய பயங்கரவாத..

இதன்போது திருகோணமலை மறை மாவட்ட ஆயர் நோயல் இமானுவேல் ஆண்டகை, சிவகுரு ஆதீன குரு முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள், மட்டக்களப்பு அமெரிக்கன் மிசன் அருட்பணி லுக் ஜோன் ஆகியோர் முதல் கையொப்பங்களை இட்ட பின்னர் நிகழ்வில் பங்கேற்றவர்களும் கையொப்பம் இட்டு வலுச்சேர்த்திருந்தனர்.

உங்கள் கையெழுத்து உங்கள் உரிமையைக் காக்கும்..! என்ற தொனிப்பொருளில், பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாக்கும் சட்ட முன்மொழிவை கைவிடக் கோரியும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கக் கோரியும் ஒரு இலட்சம் கையெழுத்து பெறும் இலக்குடன் வடக்கு கிழக்கு தழுவிய மாபெரும் கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் சார்பில், வடக்கு கிழக்கு குடிசார் அமைப்புகளின் கூட்டிணைவில் முன்னெடுக்கப்படும் மாபெரும் கையெழுத்துப் போராட்டமானது எதிர்வரும் 25 ஆம் திகதி வரை முன்னெடுப்பட்டு நீதி அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்படுவதுடன் அதன் பிரதிகள் ஐக்கிய நாடுகள் சபை செயலாளர் நாயகம், ஐ.நா. மனித உரிமைகள் பேரவை ஆணையாளர், ஐரோப்பிய ஒன்றியம், சர்வதேச நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி உள்ளிட்ட அனைத்துலக இராஜதந்திரிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## அமரகீர்த்தி...

குற்றவாளிகளும் மேன்முறையீடு செய்ய நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இந்த வழக்கில் தீர்ப்பு அறிவிக்கப்பட்டபோது, நீதிபதிகள் மத்தியில் கருத்து வேறுபாடு ஏற்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

அமர்வில் இருந்த மூன்று நீதிபதிகளில் இருவர் ஒருமித்த கருத்தின் அடிப்படையில் 12 பேரை குற்றவாளிகளாக அறிவித்து அவர்களுக்கு மரண தண்டனை விதித்தனர்.

ஆனால் அமர்வின் தலைவர் நீதிபதி, அனைத்து குற்றச்சாட்டுகளிலும் சந்தேக நன்மை வழங்கி அனைத்து குற்றஞ்சாட்டப்பட்டவர்களையும் விடுதலை செய்ய வேண்டும் என்ற நிலைப்பாட்டை எடுத்தார்.

இந்த சூழ்நிலையில், மரண தண்டனை விதிக்கப்பட்டவர்கள் தாங்கள் நிரபராதிகள் என வலியுறுத்தி மேல் நீதிமன்றத்தை அணுகத் தயாராகி வருகின்றனர்.

அதேவேளை, இந்தக் குற்றத்தில் மேலும் பலர் குற்றவாளிகளாக அறிவிக்கப்பட வேண்டியிருந்தது என்ற நிலைப்பாட்டில் சட்டமா அதிபர் உள்ளார்.

சட்டப்படி வழங்கப்பட்டுள்ள 28 நாள்களுக்குள் உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீடு தாக்கல் செய்ய எதிர்பார்க்கப்படுவதாக பிரதி சட்டமா அதிபர் ஜனக பண்டார நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், தற்போது வெலிக்கடை சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மரண தண்டனை கைதிகளும் சிறை நிர்வாகம் மூலம் மேன்முறையீட்டு நடவடிக்கைகளுக்கான சட்ட உதவிகளை கோரியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

## கௌரவத்துடனும்...

தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகத்தின் புதிய இணையத்தளத்தை அறிமுகப்படுத்தும் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இன்று எமது நாட்டின் நல்லிணக்கப் பயணத்தில் ஒரு முக்கிய மைல்கல். 2024 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் ஒரு நிரந்தர நிறுவனமாக மாற்றப்பட்ட "தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகத்தை", நவீன தொழில்நுட்பக் கருவிகளுடன் பலப்படுத்துவதற்காக நாம் இங்கு கூடியுள்ளோம்.

சமூகங்களுக்கு இடையில் முறுகல்கள் ஏற்படக்கூடிய இடங்களை முன்கூட்டியே கண்டறிந்து, அவை வன்முறையாக மாறுவதற்கு முன்பே அவற்றைத் தீர்ப்பதற்கான ஒரு பொறிமுறையாக இந்த "முன்கூட்டிய எச்சரிக்கை முறைமை" அமையும்.

கடந்த காலங்களில் இன அல்லது மத ரீதியான மோதல்கள் வெடித்த பின்னரே அரசு தலையிட்டது. ஆனால் அத்தகைய சூழலில் சேதங்கள் ஏற்கனவே ஏற்பட்டிருக்கும். டிஜிற்றல் பொருளாதார அமைச்சுடன் இணைந்து நாம் அறிமுகப்படுத்தும் இந்த புதிய முறைமை அந்த நிலையை மாற்றும்.

டிஜிற்றல் கண்காணிப்பு மற்றும் சமூக அறிக்கையிடல் மூலம், ஒரு மோதல் உருவாகும் முன்பே தரவுகளின் அடிப்படையில் அந்த இடங்களை நாம் கண்டறிய முடியும்.

எச்சரிக்கை கிடைத்தவுடன், மதத் தலைவர்கள், சிவில் அமைப்புகள் மற்றும் காவல்துறையினரை ஒருங்கிணைத்து உடனடி நடவடிக்கைகளை எடுக்க முடியும்.

அதேவேளை, தனிநபர் சுதந்திரம் மற்றும் தரவுகளின் பாதுகாப்பு குறித்து நாம் மிகுந்த அவதானத்துடன் செயல்படுவோம்-என்றார். (அ)

## கொழும்பில்...

அறிந்த பொலிஸார், மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

தாக்குதலுக்கான காரணம் மற்றும் தாக்குதல் நடத்தியவர்கள் குறித்த விவரங்கள் இதுவரை வெளியாகவில்லை. (அ)

## வடக்கில்...

ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண பிரதம செயலாளர், அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண பணிப்பாளர்கள், ஆணையாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்களுடனான விசேட கலந்துரையாடல் நேற்று, யாழ்ப்பாணத்தில் உள்ள ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்றவேளை அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

2025ஆம் ஆண்டு முன்னெடுக்கப்பட்ட திட்டங்களின் பின்னூட்டங்கள் பெறப்பட்டு, அவை நிதி ஆணைக்குழு மற்றும் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும்.

கடந்த ஆண்டில் எதிர்கொண்ட சவால்கள் மற்றும் அனுபவங்களைப் பாடமாக கொண்டு, இந்த ஆண்டுக்கான திட்டங்களைக் கையாளவேண்டும்.

2026 ஆம் ஆண்டுக்கான திட்டங்களின் மதிப்பீட்டுப் பணிகளை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும்.

வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் கீழான திணைக்களங்கள், ஏற்கனவே கேள்வி கோரல்களைப் பிரசுரித்துள்ளமை பாராட்டத்தக்கது.

ஏனைய அமைச்சுக்களும் இந்தச் செயற்பாடுகளை துரிதப்படுத்தவேண்டும்.

கடந்த ஆண்டுக்கான அபிவிருத்தித் திட்டங்களில், ஒப்பந்தகாரர்களின் வேலைத்தரம் குறித்துப் பல்வேறு விமர்சனங்கள் எழுந்துள்ளன.

எனவே, எதிர்வரும் காலங்களில், தரம் குறைந்த வேலைகளைச் செய்யும் ஒப்பந்தகாரர்களை அடையாளம் கண்டு, அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கான அல்லது நிராகரிப்பதற்கான முறையான பொறிமுறையொன்றை உருவாக்க வேண்டும்.

அலுவலகங்களுக்குள் மட்டும் முடங்கி இருக்காது, ஒவ்வொரு அமைச்சும், ஒவ்வொரு மாதமும் மாகாணத்தின் ஏதாவது ஒரு கிராமத்தைத் தெரிவு செய்து, அங்கு நேரடியாகச் சென்று மக்களின் தேவைகளை அடையாளப்படுத்தி, அவற்றைப் பூர்த்தி செய்யவேண்டும்.

இதற்கென தனியானதொரு பொறிமுறையை அமைச்சுக்கள் உருவாக்கிக் கொள்ளவேண்டும்.

திணைக்களங்களைக் கண்காணிப்பதற்காக, ஒவ்வொரு அமைச்சின் செயலாளர்கள் ஊடாகவும் அமைக்கப்பட்ட "பறக்கும் படை" மேலும் வினைத்திறனாகச் செயற்பட வேண்டும்.

அரச அலுவலர்களின் நேர முகாமைத்துவம் மற்றும் சேவை வழங்கல் குறித்து, பொது மக்களிடம் இருந்து எனக்குப் பல நேரடி முறைப்பாடுகள் வருகின்றன.

பறக்கும் படை துடிப்பாகச் செயற்பட்டால், இத்தகைய குறைபாடுகளைத் தவிர்க்க முடியும்.

சில உள்ளூராட்சி மன்றங்களில், தவிசாளர்கள் மற்றும் செயலாளர்களுக்கு இடையில் சுமூகமான உறவு இல்லாத நிலை காணப்படுகிறது.

இரு தரப்பிலிருந்தும் தொடர்ச்சியாக முறைப்பாடுகள் வருகின்றன. இது தொடர்பில் உரிய விசாரணைகளை நடத்தித் தீர்வு காணப்படும்.

இந்த ஆண்டு பல அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதால், மேலதிக வேலைகளுக்குத் தேவையான தொழில்நுட்ப உத்தியோகத்தர்களை ஒப்பந்த அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கான ஆயத்தங்களை இப்போதே மேற்கொள்ள வேண்டும்.

வழமையான வேலைத்திட்டங்களை விரைவாக நிறைவு செய்து, அபிவிருத்திப் பணிகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# இந்தியா எதை சொன்னாலும் செய்யும் நிலைமையில் அரசு!

## தயாசிறி ஜயசேகர சுட்டிக்காட்டு



கொழும்பு, பெப். 14

இந்திய எதிர்ப்பு அரசியலை முன்னெடுத்தவர்கள் இன்று இந்திய அரசாங்கம் எதைச் சொன்னாலும் செய்யும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர குற்றம் சாட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசாங்கம் இந்தியாவுடன் இரகசியமான பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் கனிம வள ஆய்வு ஒப்பந்தங்களைச் செய்து வருகிறது.

குறிப்பாக கனிம வள ஆய்வு தொடர்பான ஒப்பந்தத்தில், இரு நாடுகளின் அனுமதியின்றி தகவல்களை வெளியிட முடியாது என்ற நிபந்தனை வெளிப்படைத்தன்மையற்றது.

ஜே.வி.பி ஒரு அரசியல் கட்சியாக தீவிரமான இந்திய எதிர்ப்பு கொள்கையை முன்னெடுத்தது.

அதன் விளைவாக 1988-89 காலப்பகுதியில் நாட்டில் பெரும் கலவரங்கள் ஏற்பட்டன.

இதனால் இந்திய அமைதி காக்கும் படையினர் பலர் உயிரிழந்தனர்.

அப்போது இந்திய எதிர்ப்பு அரசியலால் நாட்டின் மின்சார விநியோகக் கட்டமைப்பு மற்றும் பேருந்துகள் தீக்கிரையாக்கப்பட்டன.

இந்தியாவை கடுமையாக எதிர்த்தவர்கள் இன்று ஆட்சிக்கு வந்தவுடன், நாட்டுக்குத் தெரியாமல் இந்தியாவுடன் பல்வேறு ஒப்பந்தங்களைச் செய்து வருகின்றனர்.

பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் துறைகளில் ஏற்கனவே ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன.

அவை குறித்த விவரங்கள் பாராளுமன்றத்திற்கோ அல்லது நாட்டு மக்களுக்கோ இதுவரையிலும் வெளிப்படுத்தப்படவில்லை.

இந்திய உயர்ஸ்தானிகராலயம் மூலமாக வெளிவிவகார அமைச்சுக்கு புதிய ஒப்பந்தமொன்று முன்மொழியப்பட்டுள்ளது.

இது இலங்கையின் நிலத்தடி மற்றும் கனிம வளங்கள் தொடர்பான ஆய்வுகள், அகழ்வாராய்ச்சிகள் மற்றும் முதலீடுகளை இந்தியாவுடன் இணைந்து மேற்கொள்வதற்கான ஒப்பந்தமாகும்.

குறித்த ஒப்பந்தத்தில் உள்ள ஒரு ஆபத்தான அம்சம் என்னவென்றால், இந்த ஆய்வுகள் மூலம் கண்டறியப்படும் எந்தவொரு தகவலையும் இந்தியாவின் எழுத்துபூர்வ அனுமதி இன்றி வெளியிட முடியாது என்பதாகும்.

இது நாட்டின் இறையாண்மை மற்றும் வெளிப்படைத்தன்மைக்கு எதிரானது.

இலங்கையின் கடற்பரப்பில் உள்ள இரும்புத் தாது, பொஸ்பேற் மற்றும் மட்டக்களப்பு பகுதியில் உள்ள கனிம வளங்கள் ஆகியவற்றை இந்தியாவுடன் இணைந்து அகழ்வதற்கு இந்த ஒப்பந்தம் வழிவகை செய்கிறது.

ஜே.வி.பி யின் முக்கிய தலைவர்கள் இந்தியாவுக்குச் சென்று வந்ததன் பின்னரே இவ்வாறான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன - என்றார். (அ)

# யாழில் பங்கஸ்டன் கட்டைத்தூள் உற்பத்தி செய்தவருக்கு 1 மாத சிறை

யாழ்ப்பாணம், பெப். 15

யாழில் பங்கஸ் தொற்றுடைய "கட்டை தூளை" உற்பத்தி செய்த உற்பத்தியாளருக்கு ஒரு மாத சிறை தண்டனையும் , 20 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை குறித்த கட்டைத் தூளை விற்பனைக்காக காட்சிப்படுத்தியிருந்த கடை உரிமையாளருக்கு 10 ஆயிரம் ரூபாய் தண்டம் விதிக்கப்பட்டு, கடுமையான எச்சரிக்கையுடன் விடுவிக்கப்பட்டுள்ளார்.

பொலிகண்டி பொதுச்சுகாதாரப் பரிசோதகரான மதியானந்தகுரு நந்தகுமார் வியாபார நிலையங்களில் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்தவேளை , பங்கஸ் தொற்றுடன் கட்டைத் தூளை விற்பனைக்காக வைத்திருந்த கடை உரிமையாளருக்கும், குறித்த கட்டைத் தூளை உற்பத்தி செய்த உற்பத்தியாளருக்கும் எதிராக பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்தார்.

நீதிமன்றில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொண்டபோது விற்பனையாளரும் , உற்பத்தியாளரும் மன்றில் முன்னிலையாகிய நிலையில் தம் மீதான குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டனர்.

அதனை அடுத்து விற்பனையாளரை கடுமையாக எச்சரித்த மன்று , 10 ஆயிரம் ரூபாய் தண்டம் விதித்தது. தொடர்ந்து உற்பத்தியாளரை கடுமையாக எச்சரித்த மன்று உற்பத்தியாளருக்கு ஒரு மாத சிறை தண்டனை விதித்ததுடன் 20 ஆயிரம் ரூபாய் தண்டமும் விதித்துள்ளது. (அ)

# பாராளுமன்றத்தை எரிக்க முற்பட்டோருக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கவேண்டும்!



## வலியுறுத்துகின்றது ஐக்கிய மக்கள் சக்தி

கொழும்பு, பெப். 15

அரகலயவின்போது பாராளுமன்றத்தைக் கொளுத்துவதற்கு வந்தவர்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் வலியுறுத்தினார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு வலியுறுத்தினார்.

பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் 12 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அவர் கூறியவை வருமாறு-

பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துக்கோரளவை கொலை செய்த நபர்களுக்கு தண்டனை கிடைக்கப்பெற்றமை மகிழ்ச்சியளிக்கின்றது. ஏனெனில் காட்டாட்சிக்கு இடமளிக்க கூடாது. நாட்டில் சட்டம் அமுலாக வேண்டும்.

பாராளுமன்றத்தைக் கொளுத்துவதற்கும் நபர்கள் வந்தனர். சிலர் தற்போது அமைச்சர்களாக உள்ளனர். அவர்களுக்கு எதிராகவும் சட்டம் செயல்படுத்தப்பட வேண்டும். ஆனால் இந்த ஆட்சியின்கீழ் அது நடக்குமா என்பது சந்தேகமே- என்றார். (அ)

# நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் ஓய்வுபெற்ற முகாமையாளருக்கு மறியல்

கொழும்பு, பெப். 15

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் பாரிய நிதி மோசடி மற்றும் ஊழல் குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்ட தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் ஓய்வுபெற்ற பொது முகாமையாளரை எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் தலைவரின் பயன்பாட்டுக்காக ஏற்கனவே இரண்டு அரச வாகனங்கள் வழங்கப்பட்டிருந்த நிலையில், சட்ட விதிமுறைகளை மீறி மேலதிகமாக வாகனம் ஒன்றை வாடகைக்கு எடுத்ததன் மூலம் அரசாங்கத்துக்கு நட்டம் விளைவித்ததாக சந்தேகநபர் மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

கண்டி வடக்கு - பாததும்பர ஒருங்கிணைந்த நீர் வழங்கல் திட்டத்தின் ஒப்பந்தத்துக்காக ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து, சொகுசு ஜீப் வண்டி ஒன்று வாடகை அடிப்படையில் பெறப்பட்டுள்ளது.

இவ்வாறு பெறப்பட்ட வாகனம் எந்த நோக்கத்துக்காகப் பயன்படுத்தப்பட்டது என்பது உறுதிப்படுத்தப்படாத நிலையில், அதற்கான வாடகையாக சுமார் 12. 7 மில்லியன் ரூபாய்க்கும் அதிகமான தொகையை செலுத்தியதன் மூலம் அரச நிதி துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளதாக இலஞ்ச ஊழல் விசாரணைப் பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த வாகனத்தை "பி.என். ஓட்டோ ஹோல்டிங்" எனும் நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்வதற்காக, முறையான கொள்முதல் விதிமுறைகளை மீறிச் செயல்பட்டமை மற்றும் குறித்த நிறுவனத்துக்கு சார்பாக இலாபத்தைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் சதி செய்தமை போன்ற குற்றச்சாட்டுகளும் இவர் மீது சுமத்தப்பட்டுள்ளன. அத்துடன், வாகனத்தை முறையாகப் பொறுப்பேற்காமலேயே அதற்கான கொடுப்பனவுகளைச் செலுத்தி குறிப்பிட்ட நிறுவனத்துக்குச் சாதகமாக செயல்பட்டமையும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்த ஊழல் மற்றும் சதித்திட்டம் தொடர்பில் இலஞ்ச ஊழல் விசாரணைப் பிரிவு அதிகாரிகளால் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் ஓய்வுபெற்ற பொது முகாமையாளர் கைது செய்யப்பட்டார். இவரை நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோது எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறிய லில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (எ)

# பகுதிநேர வேலைவாய்ப்புகளை சட்டபூர்வமாக்க அரசு தீர்மானம்!

கொழும்பு, பெப். 15

இலங்கையில் பகுதிநேர வேலை வாய்ப்புகளை முறையாக அங்கீகரிக்கும் வகையில், தொழிலாளர் சட்டங்களில் திருத்தங்களை மேற்கொள்ள அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

தொழில் அபிவிருத்தி பிரதிய மைச்சர் சதுரங்க அபேசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

தொழில்நுட்பப் பயிற்சிகளில் ஈடுபடும் இளைஞர்கள், தமது வாழ்வாதாரத்துக்காக முழுநேர வேலையில் ஈடுபடவேண்டிய கட்டாயத்தில் உள்ளதாக அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனால், அவர்கள் பயிற்சியைப் இடைநடுவில் கைவிடும் நிலை ஏற்படுகின்றது. இதனைத் தவிர்க்கவே பகுதிநேர வேலைக்கான சட்டபூர்வ அந்தஸ்து அவசியம் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை புள்ளிவிவரத் திணைக்களத்தின் தரவுகளின்படி, இலங்கையில் 2024 ஆம் ஆண்டில் கல்வி, வேலைவாய்ப்பு அல்லது எந்தவித பயிற்சியும் இல்லாத இளைஞர்களின் விகிதம் 17.2 வீதமாகக் காணப்பட்டுள்ளது.

இதில் பெண்களின் பங்களிப்பு 22.4 வீதமாகவும், ஆண்களின் பங்களிப்பு 11.9 வீதமாகவும் பதிவாகியுள்ளதாகவும் பிரதியமைச்சர் சதுரங்க அபேசிங்க குறிப்பிட்டார். (அ)

# இலங்கையில் தங்களுக்கு நோய் இருப்பதை அறியாமல் 10 வீதமான சிறுநீரக நோயாளர்!

கொழும்பு, பெப். 15

இலங்கையில் 10 வீதமான சிறுநீரக நோயாளர்கள் தங்களுக்கு நோய் இருப்பதை அறியாத நிலையில் உள்ளதாக சுகாதாரத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

தேசிய சிறுநீரகவியல், ரத்த சுத்திகரிப்பு மற்றும் சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை நிறுவனத்தின் விசேட நிபுணர் வைத்தியர் அர்ஜுன மாரசிங்க இதனை குறிப்பிட்டார்.

உயர் இரத்த அழுத்தம் அல்லது நீரிழிவு நோயைச் சரியாகக் கையாளத் தவறுபவர்களுக்கு சிறுநீரக நோய் ஏற்படும் அபாயம் மிக அதிகமாக உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

பல நோயாளர்கள் நோய் முற்றிய நிலையை எட்டும் வரை தங்களுக்குப் பாதிப்பு இருப்பதை உணர்வதில்லை எனச் சுட்டிக்காட்டிய அவர், உயர் இரத்த கொழுப்பு அல்லது அதிக இரத்த சர்க்கரை அளவு கொண்டவர்கள் முறையாக சிறுநீரகப் பரிசோதனைகளைச் செய்துகொள்ள வேண்டும் என அறிவுறுத்தினார். நோயை ஆரம்பக் கட்டத்திலேயே கண்டறிவது தீவிரமான சிக்கல்களைத் தவிர்ப்பதற்கு மிகவும் அவசியமானது என்றும் அவர் வலியுறுத்தினார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 15.02.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org